விலை : 20.00
பக்கங்கள்:பதினாறு+பதினாறு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்,உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 பங்குனி 29 ஞாயிற்றுக்கிழமை (12.04.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 114

# 19ஐ இணைந்து நிறைவேற்ற ரணில்-மைத்திரிபால தீர்மானம்

## எதிராக வாக்களிப்பவர்களுக்கு தேர்தல்தடை எனத் தெரிவிப்பு



(கொழும்பு)

**அரசியலமைப்புச் சட்டத்தின் 19ஆவது திருத்தச் சட்டத்தை நாடாளுமன்றில் நிறைவேற்றுவதற்கு ஆதரவாக வாக்களிக்காத நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்படுவதில்லை என ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் தீர்மானித்துள்ளன.**

19-வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றியாக வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தங்களுக்கிடையில் பொது இணக்கத்திற்கு வந்துள்ளனர்.

இந்த இணக்கத்தின் அடிப்படையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. 19-வது திருத்தச் சட்டத்தை எதிர்வரும் 20 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அதனை நிறைவேற்றிய பின்னர் நாடாளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தலை நடத்த இரு கட்சிகளின் தலைவர்களும் திட்டமிட்டுள்ளனர்.

இவ்வாறான நிலையில், 19-வது திருத்தச் சட்டத்திற்கு எதிராக வாக்களிப்பது குறித்து 16ஆம் பக்கம் பார்க்க



## கடற்றொழிலுக்கு சென்ற முதியவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

குருநகரிலிருந்து கடற்றொழிக்கு சென்ற முதியவர் ஒருவர் பள்ளிக்குடா கடற் பகுதியில் மயக்க மடைந்த நிலையில் உயிரிழந்துள்ளார்

யாழ்.குருநகர்ப் பகுதியைச்சேர்ந்த அகஸ்ரின் அந்தோனிப்பிள்ளை 16ஆம் பக்கம் பார்க்க

## இன்று தேசிய துக்க தினம்!

(கொழும்பு)

அஸ்கிரிய பீட மஹாநாயக்கர் வண.உடுகம ஸ்ரீ புத்தரஹித்த தேரரின் இறுதிக் கிரியைகள் இடம்பெறும் இன்றையதினம் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையை தேசிய 15ஆம் பக்கம் பார்க்க

## துப்பாக்கி ரவைகள் மீட்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் தனியாரின் காணியொன்றிலிருந்து பெருமளவான துப்பாக்கி ரவைகளும் வெடிபொருள் ஒன்றும் நேற்றையதினம் 15ஆம் பக்கம் பார்க்க

## யாராவது இலஞ்சம் வாங்கினால் என்னிடம் முறையிடுங்கள்-சந்திரிகா

(கொழும்பு)

இலஞ்சம் வாங்குபவர்கள் குறித்து தன்னிடம் தகவல் வழங்குமாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கேட்டுக்கொண்டுள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கடந்த அரசாங்கத்தில் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தி திட்டங்களின் போது ஒப்பந்தக்காரர்களுக்கு 10 ஆயிரம் கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 09 வருட காலமாக நாட்டில் எவ்வளவு முடியுமோ அந்தளவு பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது,

கடந்த அரசாங்கத்தில் பங்காளிகளாக இருந்தவர்கள் கொள்ளையடித்த பணத்தில், வீடுகள் கொள்வனவு செய்துள்ளார்கள், குதிரைகள் வாங்கியுள்ளார்கள், 30, 40 நாய்கள் வளர்த்துள்ளார்கள். இவற்றை அறிந்துக்கொண்டுதான் அதிகாரத்தை 16ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சியில் மினி சூறாவளி
## கடைகளின் கூரைகள் காற்றில் எகிறின



(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரணைமடு பிரதேசத்தில் நேற்று பிற்பகல் 1.45 மணியளவில் மினி சூறாவளியுடன் கூடிய மழை பெய்துள்ளது. 15ஆம் பக்கம் பார்க்க

## குடும்பப் பெண் சடலமாக மீட்பு

(கரணவாய்)

குடும்பப் பெண் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 15ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையின் மாற்றம் சிறந்த சந்தர்ப்பம் -அமெரிக்கா

(வாஷிங்டன்)

இலங்கையில் அசாதாரண மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமையை தமிழ், சிங்கள புதுவருடம் குறித்து 16ஆம் பக்கம் பார்க்க

### 24 வருடங்களுக்குப் பின்னர்
## காணிகளை பார்வையிட சென்றோர் நேற்றும் ஏமாற்றத்துடன் திரும்பினர்



(யாழ்ப்பாணம்)

24 வருடங்களின் பின்னர் தமது காணிகளை பார்வையிட சென்ற மக்கள் நேற்றைய தினமும் ஏமாற்றத்துடன் திரும்பியுள்ளனர். மக்கள் வாழ்ந்த இடங்களை இராணுவம் பிடித்து வைத்துக்கொண்டு 15ஆம் பக்கம் பார்க்க

அனைவருக்கும் SISIL WORLD நிறுவனத்தாரின் SONY SAMSUNG
இனிய சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
10
SISIL மின்சார சேமிப்பு up to 50%
விலை கழிவு 3000/=
ரூ.41,999/=
இல.106, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.0212219291 (சி-640)
இல.125, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம் தொ.பே.0212242335
இல.17/3 கண்டி வீதி, கிளிநொச்சி. தொ.பே.0212283755
இல.106, கண்டி வீதி, வவுனியா. தொ.பே.0778561406
DELL hp ASUS SINGER lenovo SISIL HITACHI
32" SONY விலை கழிவு 6,000/= ரூ.59,999/=
32" SAMSUNG விலை கழிவு 6,000/= ரூ.59,999/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தேர்தலில் சரத் போட்டி



(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் தான் போட்டியிடுவேன் என ஜனநாயகக் கட்சித் தலைவரும் முன்னாள் இராணுவ தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக் காட்சியொன்றில் நேற்று சனிக்கிழமை இரவு இடம்பெற்ற அரசியல விவாத நிகழ்ச்சியொன்றிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

எதிர் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தனது கட்சி தனித்து போட்டியிடும் என்பதுடன் அதில் தானும் நிச்சயம்போட்டியிடுவேன என அவர் தெரிவிதத்துள்ளார். (செ-11)


## தங்குமிடவசதி

வெள்ளவத்தையில் A/C, Non A/C உடனான தனி அறைகள் வாடகைக்குப் பெற்றுக்கொள்ள இன்றே அழையுங்கள். யாழ்.மகால் Rest

தொடர்புகளுக்கு :- 19/1, சுவி சித்தாரா றோட், வெள்ளவத்தை, கொழும்பு-06 (065)

T.P :- 0113158398, 0770260180, 0773074477

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை முதலாம் கட்டையில் 3 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. (020)

தொடர்புகளுக்கு :- 0776371753

## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து

Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும். (C-630)

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER

# SARAVANA Texs
## சரவணா புடவையகம்

### வாடிக்கையாளர்களுக்கான அறிவித்தல்

இல :- 770,772, கே.கே.எஸ் வீதி (துட்டாதெருச்சந்தி) எனும் முகவரியில் இயங்கி வந்த சரவணா ரெக்ஸ் 526, 529 பருத்தித்துறை வீதி நல்லூர் எனும் முகவரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகிறேன். (C-638)

-உரிமையாளர்

## நல்லூரில் மாபெரும் மலிவு விற்பனை



சிறுவர்களுக்கான ஆடைகள் விற்பனைக்கு உண்டு
இலங்கை வங்கி (BOC) அருகாமையில் நல்லூர் (C-645)


### இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்
### யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம் கல்வியாண்டு 2015/16

**இலங்கைத்திறந்தபல்கலைக்கழகத்தின் சமூகக்கற்கைகள் துறையினரால் பின்வரும் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.**

| கற்கைநெறிகள் | அனுமதிக் தகைமைகள் | மொழி | கற்கைநெறிக்கான காலம் | விண்ணப்பிக்கும் காலம் |
|---|---|---|---|---|
| சமூகவிஞ்ஞானத்தில் கலைமாணி (BA in Social Sciences) | க.பொ.தஉயர்தரத்தில் (பழையபாடத்திட்டம்) நான்கு பாடங்களில் சித்தி அல்லது க.பொ.த உயர்தரத்தில் (புதிய பாடத்திட்டம்) மூன்றுபாடங்களில் சித்தி அல்லது இலங்கைத்திறந்தபல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் யாதாயினும் அத்திவாரக் கற்கைநெறிச்சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும் | ஆங்கிலம் | 3 வருடங்கள் | 24.03.2015 - 30.04.2015 |
| சமூகவிஞ்ஞானத்தில் சான்றிதழ் கற்கைநெறி (Certificate in Social Sciences) | 18 வயதினைப்பூர்த்திசெய்தஅனைவரும் இக்கற்கை நெறிக்குவிண்ணப்பிக்கமுடியும் | தமிழ் | 2 வருடங்கள் | 24.03.2015 - 24.04.2015 |
| இளைஞர் அபிவிருத்தியில் டிப்ளோமா (Diploma in Youth Development) | க.பொ.தஉயர்தரத்தில் (பழையபாடத்திட்டம்) நான் பாடங்களில் சித்தி அல்லது க.பொ.த உயர்தரத்தில் (புதிய பாடத்திட்டம்) மூன்று பாடங்களில் சித்தி அல்லது இலங்கைத்திறந்தபல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் யாதாயினும் அத்திவாரக் கற்கைநெறிச்சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும் | தமிழ் | 2 வருடங்கள் | 24.03.2015 - 30.04.2015 |
| அபிவிருத்தி மற்றும் பொதுக்கொள்கையில் முதுமாணி (MA in Development Studies and Public Policy) | அங்கீகரிக்கப்பட்டபல்கலைக்கழகத்திலிருந்துபெறப்பட்ட பட்டம் அத்துடன் அபிவிருத்தித் துறையில் இரண்டுவருட சேவைஅனுபவம்பெற்றிருத்தல் வேண்டும் | ஆங்கிலம் | 2 வருடங்கள் | 24.03.2015 - 24.04.2015 |

இக்கற்கைநெறிகளுக்கானவிண்ணப்பப்படிவங்கள் பின்வரும் கற்கைநிலையங்களில் தற்போதுவிநியோகிக்கப்படுகின்றது.

| நிலையம் | முகவரி | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பிராந்தியநிலையம் | பிறவுண் வீதி,கொக்குவில்,யாழ்ப்பாணம் | 021 - 2223374 |
| வவுனியா கற்கை நிலையம் | இல 366,கண்டிவீதி,தேக்கவத்தை,வவுனியா | 024 - 2222995 |
| கிளிநொச்சி கற்கை நிலையம் | 155 ஆம் மைல்கல்,கண்டிவீதி,கிளிநொச்சி | 021 - 2283970 |
| முல்லைத்தீவு கற்கை நிலையம் | ஆதிபராசக்தி அறிவியல் கல்லூரி, 4 ஆம் வட்டாரம்,இரணைப்பாலைவீதி,புதுக்குடி யிருப்பு | 076 - 6596615 |

மேலதிக விபரங்களுக்கு உதவிப்பணிப்பாளர், இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம், யாழ்ப்பாண பிராந்தியநிலையம், பிறவுண் வீதி, கொக்குவில் எனும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

பதிவாளர்,
இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்

(C-647)

## கண்ணீர் அஞ்சலி



இணுவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபரும், முன்னாள் கோட்டக்கல்விப் பணிப் பாளர் சி.குபேரநாதன் அவர்களின் அன்புத் தாயார் அமரர் மீனாட்சி செல்லத்துரை அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

இணுவில் இந்துக் கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியம்,
இணுவில் வாழ்மக்கள்,
இணுவில் ஆசிரியர், நண்பர்கள்,
இணுவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்.

(C-646)




மிக குறுகிய காலத்தில் யாழ் மக்களின் நன் மதிப்பைப் பெற்ற ஷைலோ ஐஸ் கிறீம் நிறுவனத்தினர் ஆகிய நாம் சுத்தமான, சுவையான, ஆரோக்கியமான, இயற்கையான ஊட்டங்கள் நிறைந்த உயர் தொழில்நுட்ப முறையில் தயாரிக்கப்படும் SYLO ICE CREAM விற்பனை நிலையத்தை யாழ் நகர் பஸ் நிலையம் முன்புறம் ஆஸ்பத்திரி வீதியில் திறந்துள்ளோம் என்பதை அனைவருக்கும் அறியத் தருவதோடு அழைக்கின்றோம்.

# ஷைலோ ஐஸ் கிறீம்

Sylo Natural Ice Cream

இல. 442, ஆஸ்பத்திரி வீதி, (சைக்கிள் பார்க் எதிரில்), யாழ்ப்பாணம்.

T.P :- 021 221 7885

(9988)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாங்கள் இல்லையென்றால் மைத்திரி 10 இலட்சம் வாக்குகளால் தோல்வி!

## புதுக்கதை சொல்லும் பொன்சேகா



**(கொழும்பு) தன் கட்சியின் வாக்குகள் கிடைத்திருக்கா விட்டால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 10 இலட்சம் வாக்குகளால் தோல்வியடைந்திருப்பார் என ஜனநாயக கட்சி தலைவர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

ஜனநாயக கட்சி உறுப்பினர்களிடையே நேற்று இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில், ஜனநாயக கட்சி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவு வழங்கியிருக்காவிட்டால் 4 இலட்ச வாக்குகளில் வெற்றியடைவதற்கு பதிலாக 10இலட்ச வாக்குகளால் ஜனாதிபதி தோல்வியடைந்திருப்பார்.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி தேர்தலில் களமிறங்கிய மூன்று தடவைகளும் தோல்வியடைந்திருப்பார். எனினும் 2005ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள், வடககு மக்களுக்கு ஜனாதிபதி தேரதலில் வாக்களிக்கும் சந்தர்ப்பத்தினை வழங்காமல் புறக்கணித்தமையினால் மகிந்த தேர்தலில் வெற்றியடைநதார்.

2010ஆம் ஆண்டு எனது வெற்றி யினை பறித்துவிட்டார். 2015ஆம் ஆண்டும் தோல்வியடைந்துவிட்டார். அப்படி பார்க்கும் போது மூன்று தடவைகளும் மகிந்த ராஜபக்ஷ தோவ்வியடைந்துள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## பிரான்ஸுக்கு செல்ல முயன்ற இலங்கையர் ஒருவர் கைது

போலியான ஜேர்மன் கடவுச்சீட்டை பயன்படுத்தி சிங்கப்பூரிலிருந்து பிரான்ஸுக்கு செல்வதற்கு முயற்சித்த இலங்கையர் ஒருவர் நாடு கடத்தப்பட்ட நிலையில் அவரை கைது செய்துள்ளதாக பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய குற்றப் புலனாய்வு விசாரணை பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர். சந்தே க நபர வவுனியாவைச்சேர்ந்த 31 வயதானவர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். அவர், இலங்கை விமான சேவைக்கு சொந்தமான யு.எல்.308 என்ற விமானத்தின் ஊடாக கடந்த 8 ஆம் திகதி, சிங்கப்பூருக்கு சென்றுள்ளார். அதற்காக செல்லுபடியான கடவுச்சீட்டை பயன்படுத்தியுள்ளார் என்று விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. சிங்கப்பூரில்வைத்து முகவரிடமிருந்து போலியான கடவுச் சீட்டை பெற்று. அங்கிருந்து பிரான்ஸுக்கு செல்வதற்காக முகவருக்கு 10 இலட்சம் ரூபாய் கொடுத்து போலி யான ஆவணங்களை பெற்றுக் கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-5)

# திருவோடு ஏந்தியவாறு மீனவர்கள் போராட்டம்



தமிழக மீனவர்கள் நேற்று முந்தினம் திருவோட்டை கையில் ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இலங்கை அரசின் அத்துமீறலை கண்டிக்காமல் அலட்சியமாக உள்ள இந்திய மத்திய, மாநில அரசுகளை கண்டித்து, நேற்று இராமேஸ்வரம் பேருந்து தரிப்பிடத்திற்கு அருகில் மீனவர்கள் இவ்வாறு ஆர்ப்பாட்டம் நடத்தியதாக தமிழக ஊடகமான தினமலர் குறிப்பிட்டுள்ளது.

பின்னர் டவுன் பொலிஸ் இன்ஸ்பெக்டர் அசோக்குமார் அங்குவந்து, திருவோடு ஏந்தி ஆர்ப்பா ட்டம் செய்யக் கூடாது என கூறியதும், திரு வோடுகளை அவர்கள் கீழே போட்டுள் ளனர்.

இதில், இராமேஸ்வரம், பாம்பன் மீனவர் சங்க நிர்வாகிகள் தேவதாஸ், சேசு, எமிரேட், சிப்பிசேசு, கெட்டர் உட்பட பலர் பங்கேற்றனர். (இ-5)


**DUBAI இல் வேலைவாய்ப்பு**

யாழ்ப்பாணத்தில் 6 மாத கால சம்பளத்துடன் தொழிற்பயிற்சி. (தங்குமிடம், உணவு இலவசம்) பின்னர் Dubai இல் வேலைவாய்ப்பு.

தொடர்பு:- 077 347 8427

(038)



**Association for Rehabilitation of the Disabled (AROD)**

**47/2, Adiyapatham Veethy, Thirunelvely, Jaffna.**

**Post of ADMINISTRATOR**

Application are called by AROD for the above post from eligible candidates

The candidate shold be actively devoted to the welfare of Disabled and be between 40 and 65 years of age the applicant shold be with at least 10 years' experience in Office Managment, Financial Managment and be able to maintain all routine official records. Basic computer literacy is essential.

Eligible candidates shold apply with

1. Full bio data with experience (including contact number) written in the applicant's own handwriting
2. List of places worked
3. Salary expected
4. Reference from his/her last employer
5. Name of two non-related referees with their contact numbers

The completed Application shold reach us by 21st April 2015

**President**

**Association for Rehabilitation of the Disabled (AROD)**

**47/2, Adiyapatham Road, Thirunelvely North, Jaffna.**

(C-644)



**வேலையாள் தேவை**

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி றோட்டில் உள்ள Vcare motors கடைக்கு பெண் வேலையாள் தேவை

(060) T.P-077 614 1928



**வாழ்க்கையில் வெறுப்பா?**

பிரச்சினை எதுவானாலும், எம்முடன் தொலைபேசியில் அல்லது நேரில் பேசுங்கள். இரகசியங்களைப் பேணுவோம்.

காலை 9.00 – பி.ப 1.00

மதச்சார்பற்றது

(C-978)

**கைகொடுக்கும் நண்பர்கள்**

104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

021 222 8117, 0779008776



**வீடு விற்பனைக்கு**

காரைநகரில் ஏழரைப் பரப்பில் பிரதான வீதிக்கு அண்மையில் நான்கு அறை கொண்ட புதிய வீடு விற்பனைக்கு உள்ளது. உடன் தொடர்பு கொள்ளுங்கள். தரகர் தேவையில்லை

(063) தொடர்பு:-0768394580


# இராசி பலன்

12.04.2015

(பங்குனி 29, ஞாயிற்றுக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு

அட்டமி பிற்பகல் 4.44 மணிவரை

உத்தராடம் பின்னிரவு 2.44 மணிவரை

இராகுகாலம் 4.36-6.06 மணிவரை

சுபநேரம் 9.06-10.36 மணிவரை

அட்டமி-நவமி

வளவன்

**மீனம்:** தேவைகள் பூர்த்தியாகும் நாள் நட்புவட்டம் விரிவடையும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், குடும்ப மகிழ்ச்சி கூடும்.

**மேடம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், புதிய திட்டங்கள் எளிதில் கைகூடும், ஆரோக்கியமான நாள்.

**இடபம்:** சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும், அலைச்சல்கள் குறைந்து ஆதாயம் பெறுவீர்கள், பிரியமான சிலரோடு ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும்.

**மிதுனம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, திடீர் செலவுகள் அதிகரிக்கலாம், போசன சுகக் குறைவான நாள்.

**கும்பம்:** காரிய அலைச்சல்கள் அதிகரிக்கலாம், வழிபாட்டால் ஆர்வம் கூடும் வேலைச்சுமை அதிகரிக்கும் உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைக் குறைப்பது நல்லது சுப செலவுகளில் நாட்டம் கூடும்.

**கடகம்:** வராத உறவினர்கள் உங்கள் வீடுகளுக்கு திடீரென வரலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், போசன சுகமுண்டு.

**மகரம்:** வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், ஆழ்ந்த சிந்தனையுண்டு, பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், வருமானத்தை அதிகரிக்க முற்படுவீர்கள்.

**சிம்மம்:** இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும், எடுத்த காரியங்களில் முன்னேற்றமுண்டு.

**தனுசு:** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும் நாள், தொலைபேசி தகவல்கள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்:** உடன் பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்டுவர், பாராட்டும் புகழும் கூடும் நாள், பயணங்களால் பலன் கிடைக்கும், சுப செய்திகள் வந்து சேரலாம், [illegible]

**துலாம்:** வீட்டை அலங்கரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும், ஊக்கத் தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், சுபசெலவுகள் அதிகரிக்கும் நாள்.

**கன்னி:** பிள்ளைகள் வழியில் பெருமையான செய்திகள் வந்து சேரலாம், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், சுப செய்திகள் வந்து சேரலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மன்னார் ஜோசப்வாஸ் கிராமத்தில் நற்கருணைநாதர் ஆலயத்திறப்புவிழா

(மன்னார்)

மன்னார் ஜோசப்வாஸ் நகர் கிராமத்தில் அமைக்கப்பட்டு வரும் நற்கருணை நாதர் ஆலயத் திறப்பு விழா மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப்பு ஆண்டகையின் 75 ஆவது பிறந்த தின மாகிய எதிர்வரும் 16 ஆம் திகதி, வியாழக்கிழமை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளது.

அன்றையதினம் காலை 7 மணிக்கு இறை பிரசன்னத்தில் வடக்கு,கிழக்கு மறைமாவட்ட ஆயர்கள் ஒன்றிணைந்து அபிஷேகம் செய்து கூட்டுத்திருப்பலியை ஒப்புக்கொடுப்பர்.

மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தலைமையில், யாழ். மறை மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம், திருகோணமலை மறை மாவட்ட ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பொன்னையா ஜோசப் ஆண்டகை ஆகியோர் இணைந்து ஆலயத்தைத் திறந்து வைத்து திருப்பலியினை ஒப்புக்கொடுக்கவுள்ளனர். (2)




# பேசும் படம்-66

**இடம்: யாழ்ப்பாண பண்ணை சந்தைக்கு அருகில்**



சொப்பினுக்கு அழிவில்லையென
பறைசாற்றுகின்றன நகரத்து மாட்டுச் சாணிகள்

**குறிப்பு :** அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.

**மின்னஞ்சல் :** valampesumpadam@gmail.com
facebook: www.facebook.com/valam.puri.16
**தபால் முகவரி:** ஆசிரியர், பேசும் படம்,வலம்புரி,
இல.03, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
அல்லது நேரில்.

**அனுப்பியவர்:**
**வி.ஜெயப்பிரகாஸ்**
**(mrtc)**
**கல்மடு வவுனியா.**

## ஏமனிலிருந்து மேலும் 16 பேர் நாடு திரும்பினர்

ஏமனில் மோதல் சூழ்நிலையால் அங்கிருந்து வெளியேறிய மேலும் 16 இலங்கையர்கள் நேற்று முன்தினம் நாடு திரும்பியுள்ளனர்.

கட்டார் விமான சேவைக்கு சொந்தமான விமானம் ஒன்றின் மூலம் அவர்கள் நாடு திரும்பியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இவ்வாறு 29 இலங்கையர்கள் நாடு திரும்பி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# மரண அறிவித்தல்

## செல்லையா குஞ்சிதபாதம்

**(இளைப்பாறிய ஆசிரியர், திருநெல்வேலி றோ.க.த.க.பாடசாலை)**



விநாயகர் வீதி நல்லூர் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா குஞ்சிதபாதம் 09.04.2015 வியாழக்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா- இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தையா- பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் மனோன்மணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், மகேஸ்வரி மற்றும் தில்லைநாதன் , காலஞ்சென்றவர்களான கமலாதேவி, தணிகாசலம், பூவிலிங்கம் மற்றும் குகதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான இராசையா, மயில்வாகனம், சிவக்கொழுந்து மற்றும் இராசேந்திரம், கெங்கநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுகுமார் (அவுஸ்திரேலியா), சிவகுமார் (UK), ரூபகுமார் (UK), சுகிதா (ஆசிரியை, கொக்குவில் நாமகள் வித்தியாலயம்), செந்தில்குமார் (கொமர்ஷல்வங்கி, வவுனியா), சுரேஸ்குமார் (மு/ பெரிய புளியங்குளம்GTMS),லவீந்திரகுமார் (UK) ஆகியோரின் அன்புத் தந்தையும் மோகனா (அவுஸ்திரேலியா), கார்த்திகா (UK), கேமராகினி (UK), பரமேஸ்வரன்(பிரதி அதிபர், யா/ இந்துக் கல்லூரி), சுபாசினி (ஆசிரியை, பாணந்துறை அல்ஃறியா மத்திய கல்லூரி), தயாளினி (ஆசிரியை, யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்),கெசந்திலி (UK) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆர்த்திகா, சைனுகா, அனுஸ்கா, வருண், துஷானி, லகுஷியா, வாகினி, வாசகி,பரணி,சாயீஷன், ஶ்ரீகரி, பூர்வஜன், அம்சனா, அபீசனா, அர்ச்சனா, ஹரினி, அருணி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சந்திரசேகரப் பிள்ளையார் கோவிலடி நல்லூர்வடக்கில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று (12.04.2015) முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**சந்திரசேகரப்பிள்ளையார்**
**கோவிலடி, நல்லூர் வடக்கு.**
**தொ.பே 021 222 4855** (064)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அகதிகளை நாடுகடத்த வேண்டாம் அவுஸ்திரேலியாவிடம் கோரிக்கை

(கொழும்பு)

நாளாந்தம் முகம் கொடுக்கின்ற அச்சுறுத்தல்கள் காரணமாகவே இலங்கையில் அவுஸ்திரேலியா நோக்கி அகதிகளின் வருகை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட் டுள்ளது.

அவுஸ்திரேலியாவின் ஊடகம் ஒன்று இதனைத் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் இவ்வாறான அகதிகளை நிராகரித்து நாடுகடத்த வேண்டாம் எனக் கோரப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவில் அகதி அந்தஸ்து கோருகின்றவர்கள் நிராகரிக்கப்படும் நிலைமை முன்பில்லாத அளவு அதிகரித்துள்ளது.

அகதி அந்தஸ்து பெறுவதற்காக தற்போது கூறப்படுகின்ற காரணங்களையே, ஐந்து வருடங்களுக்கு முன்னர் கூறிய வர்களுக்கு அகதி அந்தஸ்து கிடைத்துள்ளன.

ஆனால் தற்போது இந்த கோரிக்கைகள் நிராகரிக்கப்படுகின்றன.

இதற்கு அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் அரசியல் நோக்கத்துக்கான சட்ட மாற்றங்களே காரணம்.

இதன் மூலம் அவுஸ்திரேலிய அரசாங்கம் பாரிய மனித உரிமை மீறலில் ஈடுபட்டுள்ளது என்று அந்த ஊடகம் மேலும் குற்றம் சுமத்தியுள்ளது. (இ-5)

## விஞ்ஞான பீடம் யாழ்ப்பாணப் பல்கலைகழகம் அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்திற்குப் புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ள முதலாம் வருட மாணவர்களுக்கான 2013/2014 கல்வி ஆண்டுக்கான அறிமுக நிகழ்வு 27.04.2015 திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி வியாழக்கிழமை 30.04.2015 பிற்பகல் 3.00 மணிவரை நடைபெறும். இவ்வறிமுக நிகழ்வில் தவறாது கலந்து கொள்ளுமாறு புதிய மாணவர்கள் அனைவரும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஏனைய மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகள் 05.05.2015 செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும்.

பதிவாளர். (சி-639)

AnnA ESTD 1959

## வாடாமல்லிகை

அண்ணா தொழிலக வளர்ச்சியும் எழுச்சியும்

## நூல் வெளியீடு-2015

காலம் : 12.04 2015 ஞாயிற்றுக்கிழமை
மாலை 3.00 மணி
இடம்: இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் கோவில் வீதி.

**தலைவர்**
பேராசிரியர் க.தேவராஜா அவர்கள்
(யாழ். பல்கலைக்கழகம், போசகர், இணுவில் பொதுநூலகம்)

**பிரதம விருந்தினர்.**
திரு. நா. வேதநாயகன் அவர்கள்
(யாழ். அரச அதிபர்)

**நிகழ்ச்சி நிரல்**
மங்கல விளக்கேற்றல்
தேவாரம்-திரு.கு.அனுஷன் (ஆசிரியர்)
வரவேற்புரை-திரு.ச.சிவசங்கர்(தலைவர் இணுவில் பொது நூலகம்)
ஆசியுரைகள்: சிவஸ்ரீ வை.சோமாஸ்கந்தர் குருக்கள்
சிவஸ்ரீ இ.உருத்திரமூர்த்தி குருக்கள்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்
(நல்லை ஆதீனம்)
தொடக்க உரை - செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள்
(தலைவர் துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை)

**தலைமையுரை வாழ்த்துரைகள்**
பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
(முன்னாள் துணைவேந்தர் யாழ். பல்கலைக்கழகம்)
பேராசிரியர் S.சிவலிங்கராசா அவர்கள்
(முன்னாள் தமிழ்த்துறை தலைவர் யாழ்.பல்கலைக்கழகம்)
திரு. இ.குமரன் அவர்கள்
(சிரேஷ்ட விரிவுரையாளர் தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் அவர்கள்
(இணைப்பாளர் மொழிபெயர்ப்பு யாழ். பல்கலைக்கழகம்)
மறவன்புலவு சச்சிதானந்தம் அவர்கள்
(முன்னைநாள் ஆலோசகர் ஐக்கிய நாடு சபை)
திரு. ஆ. மகேந்திரலிங்கம் அவர்கள்
(அண்ணா நிறுவன இணுவில் கிளை முகாமையாளர்)

**நூல் வெளியீட்டுரை**
கவிஞர் திரு. சோ.பத்மநாதன் அவர்கள்
(முன்னாள் அதிபர் பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலை)

**நூல் வெளியீடு- பிரதம விருந்தினர்**
முதல் பிரதி பெறுபவர்
திரு. S.P. சாமி அவர்கள்
(ஸ்தாபகர் நொதேண் கொஸ்பிற்றல் லிமிட்டெட் திருநெல்வேலி)
கௌரவ பிரதி பெறுபவர்
திரு.க.இரத்தினகோபாலன் (பெரியண்ணை) ஆசிரியர் அவர்கள்
திரு.கானமயில்நாதன் (பிரதம ஆசிரியர் உதயன் பத்திரிகை)
திரு. ஆறுமுகநாதன் (ஒப்பந்தகாரர் தெல்லிப்பழை)
திருமதி. அ.சிறிகாந்தலட்சுமி (நூலகர் யாழ். பல்கலைக்கழகம்)

**நூல் நயப்புரை:**
திருமதி கோகிலா மகேந்திரன் அவர்கள்
(முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர்)

**தொகுப்பாசிரியர் உரை:**
சைவப்புலவர் திரு.சு.செல்லத்துரை ஆசிரியர் அவர்கள்
சிறப்புரை- பேராசிரியர் அரங்க ராமலிங்கம் அவர்கள்
(முன்னாள் விரிவுரையாளர் சென்னை பல்கலைக்கழகம் தமிழ்த்துறை)
**ஊழியர் கௌரவிப்பு**
ஏற்புரை- ந.திவாகரகன் அவர்கள்
நன்றியுரை- செல்வன் ம. மதிதயனன் அவர்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
நன்றி
**விழாக்குழுவினர்**


## அழுக்கலை பயிற்சி

யாழ். பியூட்டி அக்கடமி மற்றும்
ஒறிபிளேம்யாழ்.சேவை நிலையம் இணைந்து சித்
திரை புதுவருடத்தை முன்னிட்டு 20% கட்டணக் கழிவில்



- 1 மாத கால அழகுகலை பயிற்சி - 3990 /= மட்டுமே
- 3 மாத கால டிப்ளோமா ஆழகுகலை பயிற்சி
- கேக் ஐசிங் பயிற்சி

அனைத்து பயிற்சிகளும் கூடுதலான செய்முறை விளக்கத்துடன் இடம் பெற்று ஒவ்வொரு மாணவர் மீதும் தனித்தனியாக கவனம் செலுத்தப் பட்டு மேற்படி பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

கிழமை நாள் புதிய பிரிவுகள் 21.04.2015 அன்று செவ்வாய் 10.00 மணிக்கு
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் 25.04.2015 அன்று சனி 10.00 மணிக்கு

குறிப்பு : 3 மாத கால டிப்ளோமா அழகுகலை மற்றும் கேக் ஐசிங் பயிற்சிகளுக்கு இணையும் முதல் 15 நபர்களுக்கு 8000 /= கட்டணகழிவு வழங்கப்படும்

மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் அலுவலக நேரத்தில் வருகைதரவும்...

நிறுவன அமைவிடத்தினை அறிந்து கொள்வதற்கு 021 4546 026

**Yarl Beauty Academy** No.616 Hospital Road, Jaffna.
(வேம்படி சந்தியில் மஞ்சள் கடவை முன்)



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 15 1/4 சூரிசெவ் 10இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/4398 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 54<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/888 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 31 1/4<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: B.TEC/ பொறியியலாளர்<br>தொ.இ: B/4400 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 21 சூரிசெவ் 9இல்<br>உயரம்: 5',3"<br>தகைமை/தொழில்: BSC, CIMA/ கணக்காளர்<br>தொ.இ: G/895 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 41 செவ் 7 ல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: O/L/அரச தொழில்<br>தொ.இ: B/482 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 45 செவ் 8 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்<br>தொ.இ: G/896 |
| பிறப்பு: 1968 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 13<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L கனடா<br>தொ.இ: B/484 | பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 16 1/2 செவ் 4 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: CIMA<br>தொ.இ: G/897 |

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வலி.வடக்கில் விடுவிக்கப்பட்டதாக மக்கள் பார்வைக்கு அனுமதிக்கப்பட்ட இடங்களை பார்க்கச் சென்ற மக்கள் நேற்றைய தினமும் ஏமாற்றத்துடன் திரும்பியுள்ளனர். மக்கள் வசிக்காத பற்றைக் காணிகளை விடுவித்துக்கொண்டு ஏனைய இடங்களை இராணுவம் தொடர்ந்தும் பிடித்து வைத்துள்ளதோடு அதற்குள் மக்கள் செல்வதற்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. தமது காணிகளை 24 வருடங்களின் பின்னர் மக்கள் ஆர்வத்துடன் பார்வையிடுவதனையும் இராணுவம் புதிதாக எல்லைகள் அமைப்பதனையும் மக்கள் ஏமாற்றத்துடன் திரும்புவதனையும் படங்களில் காணலாம். (படங்கள்:-உ.சாளின்)

## மக்களின் காணிகளை பிடித்து வைத்துக்கொண்டு

# இராணுவம் தனி ஆட்சி!

### சிறிதரன் எம்.பி. குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

**இராணுவம் மக்களுடைய காணிகளை பிடித்து வைத்து இங்கு தனியானதொரு ஆட்சி நடத்தி வருகின்றது என தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் குற்றஞ்சாட்டியுள்ளார். வலி.வடக்கில் நேற்றைய தினம் மக்கள் பார்வைக்கு அனுமதிக்கப்பட்ட இடங்களை நேரில் சென்று பார்வையிட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வலி.வடக்கில் நேற்றைய தினம் மக்கள் பார்வைக்கு அனுமதிக்கப்பட்ட இடங்களில் உள்ள அனைத்து வீடுகளும் தரைமட்டமாக்கப்பட்டுள்ளதோடு, இராணுவம் புதிய எல்லைகளினையும் அமைத்து வருகின்றது. இதனால் தமது வீடுகளை பார்க்க சென்ற மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பி வந்ததனை அவதானிக்க முடிந்தது.

உயர்பாதுகாப்பு வலயத்தில் உள்ள 590 ஏக்கர் நிலம் நேற்றைய தினம் மக்கள் பார்வைக்காக அனுமதிக்கப்படுவதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் அறிவித்திருந்தார். அதற்கமைய தமது காணிகளை பார்க்க சென்ற மக்கள் இராணுவம் இருந்து விட்டு சென்ற வீடுகள் அனைத்தையும் இடித்துவிட்டு சென்றுள்ளதாக குற்றஞ்சாட்டியுள்ளனர்.

மக்கள் வசிக்காத பற்றைக் காணிகளை விடுவித்துக்கொண்டு ஏனைய இடங்களை இராணுவம் தொடர்ந்தும் பிடித்து வைத்துள்ளதோடு அதற்குள் மக்கள் செல்வதற்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. தமது காணிகளை 24 வருடங்களின் பின்னர் மக்கள் ஆர்வத்துடன் பார்வையிட முயன்ற போதிலும் இராணுவம் அம்மக்களை உள்ளே செல்ல அனுமதிக்காமல் திருப்பியனுப்பியுள்ளது.

தெல்லிப்பழை பிரதேச செயலகத்துக்குட்பட்ட காங்கேசன்துறை தெற்கு (ஜே/235 கிராம அலுவலர்), பளை வீமன் காமம் வடக்கு (ஜே/236 கிராம அலுவலர்), பளை வீமன்காமம் தெற்கு (ஜே/237 கிராம அலுவலர்), கட்டுவன் (ஜே/238 கிராம அலுவலர்), தென்மயிலை (ஜே/240 கிராம அலுவலர்), வறுத்தலைவிளான் (ஜே/241 கிராம அலுவலர்), தையிட்டி தெற்கு (ஜே/250 கிராம அலுவலர்), பலாலி தெற்கு (ஜே/252 கிராம அலுவலர்) ஆகியவற்றின் காணிகளும் கோப்பாய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட வளலாய் (ஜே/284 கிராம அலுவலர்) காணிகளும் விடுவிக்கப்பட்டுள்ளன.

இக்கிராம பிரிவுகளைச்சேர்ந்த மக்கள் அனைவரும் தமது காணிகளை இருபத்திநான்கு வருடங்களுக்கு பின்னர் பார்வையிடுவதற்கு ஆர்வத்துடன் சென்றனர் இவ்வாறு விடுவிக்கப்படவுள்ள காணிகள் சிலவற்றில் ஏற்கனவே மக்கள் குடியமராத காணிகள் எனவும் விடுவிக்கப்படுகின்ற காணிகளும் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிகளிலும் முழுமையாக விடுவிக்கப்படாமல் துண்டு துண்டாகவே விடுவிக்கப்படுகின்றன எனவும் இது மக்களோடு இராணுவம் சேர்ந்து இருப்பதற்கு திட்டமிடப்படுவதாக அச்சத்தை ஏற்படுத்துகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

விடுவிக்கப்பட்ட இடங்களிலிருந்த வீடுகளை இராணுவம செல்லும் போது இடித்து தரை மட்டமாக்கி விட்டு சென்றுள்ளது.

மேலும்இங்கு அனைத்து வேலைகளையும் இராணுவம் செய்வதனை அவதானிக்க முடிகின்றது. இவ்வாறு இங்கு எங்கும் இராணுவமயமாகவே காணப்படுவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

புங்குடுதீவு கிழக்கு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்திருவிழாவுடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் இடம்பெறும்.

அதேவேளை எதிர்வரும் மே மாதம் 2 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் 3 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.(இ

## விநாயகர் முன்பள்ளியின் விளையாட்டு விழா நாளை

(யாழ்ப்பாணம்)

கைதடி தென்கிழக்கு விநாயகர் முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாலர் பாடசாலை மைதானத்தில் விநாயகர் விளையாட்டுக்கழக செயலாளர் செ.ருவிந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் முதன்மை விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கைதடி விக்னேஸ்வர வித்தியாலய அதிபர் சு.சிவானந்தம், தென்மராட்சி முன்பள்ளி இணைப்பாளர் திருமதி. த.சுபத்திராதேவி, கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய அதிபர் எஸ்.பவளகுமாரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக கைதடி பொது சுகாதார பரிசோதகர் து.கண்ணதாசன் ஜே/292 கிராம சேவையாளர் திருமதி ம.நிர்மலா, விநாயகர் சனசமூக நிலையச் செயலாளர் நி.கரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## அபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் வரியப்புலம் பூந்தோட்ட ஞானவைரவர் பெருமானுக்கு அபிஷேகமும் பொங்கல் பூசையும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது. (இ-3)

## திணைக்கள அதிகாரிகளுடன் யாழில் மீனவர்கள் முரண்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சி கிழக்கு பத்திராயன் மீனவர் சங்கத்தினர், தங்களுடைய மீன்பிடிக்கு தேவையான வலையை விடுத்து அளவில் மாற்றமுள்ள வலையை தந்ததாக கூறி, யாழ். கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் முரண்பட்டுள்ளனர்.

மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த எரிபொருள் மானியம் கடந்த வருடம் நிறுத்தப்பட்டு அதற்கு பதிலாக மீன்பிடி உபகரணங்கள் வழங்கும் நடவடிக்கை கடந்த அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டது. மீனவர்களுக்கு எவ்வாறான உபகரணங்கள் வேண்டும் என்ற தகவல்கள் பெறப்பட்டு, அவர்களுக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டன.

ஜி.பி.எஸ். உபகரணம், ஐஸ்பெட்டிகள், வலைகள், படகு இயந்திரங்கள் என்பன இவ்வாறு வழங்கப்பட்டன. பத்திராயன் மீனவர் சங்கத்தினரின் ஆழ்கடல் மீன்பிடியை செய்வதற்கு 1500 கண் நீளமும் 330 கண் அகலமும் கொண்ட மீன்பிடி வலைகள் தேவைப்படுகின்றன. எனினும் தங்களுக்கு 3 ஆயிரம் கண் நீளமும் 150 கண் அகலமும் கொண்ட வலைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த வலைகள் இரண்டாக மடித்து தைக்க வேண்டும் எனவும், தரப்பட்ட வலைகளின் இழைகளும் அரைவாசியிலும் குறைவாக காணப்படுவதால் 30 அடி அகலமான வலைகள் இன்னமும் தேவைப்படுவதாக கூறி அதிகாரிகளுடன் முரண்பட்டனர்.

இது தொடர்பாக கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகள் கருத்து கூறுகையில்,

மீனவ சங்கங்கள் விண்ணப்பப்படிவங்களில் கூறப்பட்டதின் அடிப்படையிலேயே வலைகள் வழங்கப்பட்டுள்ளன என்றனர்.

வடமராட்சி கிழக்குப் பகுதியிலுள்ள மற்றைய மீனவ சங்கங்கள் உபகரணங்களைப் பெற்றுச் சென்றுள்ள போதும், பத்திராயன் மீனவர் சங்கத்தினர் மாத்திரமே முரண்படுகின்றனர்.

மீனவர்களின் தேவைக்கேற்ற உபகரணங்களே அவர்களுக்கு வழங்கப்பட்டு வருவதாக தெரிவித்தனர். எனினும் ஏனைய சங்கங்களுக்கு தேவையான அளவு வலைகளை நீரியல் வளத் திணைக்களம் வழங்குகின்ற போதிலும் தமக்கே




## யாழ். இலக்கியக்குவியத்தின் வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இலக்கியக் குவியத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணியளவில் யாழ்.கலைத்தூது அழகியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வேலணையூர் தாஸ் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் யாழ்.பிரதேசசெயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி பத்மராணி இரவீந்திரனின் 'அமைப்பு நெறி முறைகள்' எனும் தலைப்பில் உரை இடம்பெறும்.

இப் பொதுக்கூட்டத்தில் இலக்கியக்குவிய உறுப்பினர்கள், ஆர்வலர்கள், இலக்கிய மன்றங்களின் பிரதிநிதிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்த இடத்தில் மீள்குடியேறி நிரந்தரமாக தொழிலை மேற்கொள்ள வழி ஏற்படுத்துங்கள்

## இரணைமாதா நகர் மக்கள் கோரிக்கை

(பனிக்கன்குளம்)

**கிளிநொச்சி இரணை மாதா நகர் மக்கள் தம்மை சொந்த இடங்களில் மீள்குடியேற்றுமாறும் தமக்கான நிலத்தில் சுதந்திரமாக கடற்றொழில் செய்வதற்கு அனுமதி வழங்குமாறும் கோரிக்கையொன்றை விடுத்துள்ளனர்.**

தமது மீள்குடியேற்றம் தொடர்பாக பல்வேறு தரப்பினரிடமும் கோரிக்கை விடுத்தும் இதுவரை நடவடிக்கை எதுவும் முன்னெடுக்கப்படவில்லையென பாதிக்கப்பட்ட மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

பூநகரி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட இரணைமாதா நகர் பகுதியிலிருந்து மக்கள் வன்னி இறுதி யுத்த காலத்தில் இடம்பெயர்ந்திருந்தனர்.

இந்நிலையில் மீண்டும் மக்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்பியபோது அப்பகுதியில் கடற்படையினர் கடற்படை முகாம் ஒன்றை அமைத்து தங்கியிருப்பதுடன், மக்களுக்கான மீள்குடியேற்றத்தையும் தடுத்துள்ளனர்.

இந்நிலையில் குறித்த பகுதியில் மீள்குடியேறவேண்டிய சுமார் 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்களை சேர்ந்த மக்கள் தங்கள் சொந்த நிலங்களில் மீள்குடியேற முடியாமல் உறவினரகள் நண்பர்கள் வீடுகளிலும் வேறு இடங்களிலும் தங்கி வாழ்ந்துவருகின்றனர்.

மேலும் கடற்றொழிலை அடிப்படை வாழ்வாதார தொழிலாக கொண்ட இப்பகுதி மக்கள் தமது சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்படாமையினால் வாழ்வாதார ரீதியாகவும் பல்வேறு விதமான அழுத்தங்களை சந்தித்து வருவதாக தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் குறித்த விடயம் தொடர்பாக கடந்த மாதம் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்ட நிகழ்விலும் மக்கள் சுட்டிக்காட்டியிருந்தார்கள்.

எனினும் அங்கு உரிய பதில் மக்களுக்கு வழங்கப்படவில்லை.

இந்நிலையில் புதிய அரசாங்கத்தின் 100 நாட்கள் வேலைத் திட்டத்தில் யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த நிலங்கள் விடுவிக்கப்படும் நிலையில், கிளிநொச்சி மாவட்ட த்தில் ஒரு கிராமமே மீள்குடியேற்றம் இன்றி இருக்கும் நிலையை பொறுப்பு வாய்ந்தவர்கள் கவனத்தில் எடுக்காமை எதற்காக என இரணைமாதா நகர் மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இயற்கையாக கடல்வளம் மற்றும் அதிகளவு கடலுணவு உற்பத்தியாகும் இடத்தை கடற்படை ஆக்கிரமித்திருக்கும் நிலையில், தாம் தொழில் செய்ய முடியாமல் அலைந்து திரிவதாகவும், மற்றவர்களுடைய இடங்களில் அவர்களுடைய தயவில் வாழ்ந்து கொண்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே தமக்கான சொந்த இடத்தில் மீள்குடியேற வழி அமைத்துத் தர வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-281)




# மாந்தை கிழக்கு பிரதேச சபையில் 7 பேருக்கு நிரந்தர நியமனங்கள்

## பிரதேச சபை தவிசாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட மாந்தை கிழக்கு பிரதேச சபையில் அட்டவணைப்படுத்தப்பட்டாத பதவி வெற்றிடங்களுக்கான நிரந்தர நியமனக் கடிதங்கள் நேற்றுமுன்தினம் முற்பகல் 10மணிக்கு மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டுள்ளதாக மாந்தை கிழக்கு பிரதேச சபை தவிசாளர் அம்பலவாணர் தனிநாயகம் தெரிவித்துள்ளார்.

இத தொடர்பில் அவர் தெரிவிக்கையில், மாந்தைகிழக்குபிரதேசசபையில் நிலவிய அட்டவணைப்படுத்தப்படாத 11 பதவி வெற்றிடங்களுக்கான ஆளணியினருக்கு நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு.தேர்வு செய்யப்பட்டவர்களின் விபரங்கள் வடக்குமாகாணஉள்ளூராட்சிஆணையாளரின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் 11 பதவிகளுக்கான நியமனத்தில் ஏழு பதவிகளுக்கான நிரந்தர நியமனங்களின் அனுமதி கிடைக்கப்பெற்றது. இதற்கமைய சாரதிகள் மூன்று சுகாதார தொழிலாளிஒன்று, வீதித் தொழிலாளி ஒன்று, காவலாளி ஒன்று, ஆயுள் வேத மருந்தக உத வியாளர் ஒன்று ஆகிய பதவி வெற் றிடங்களுக்கான நியமனங்களை வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எஸ்.திருவாகரன், முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி சுலோச்சனா ஆகியோர் நிரந்தர நியமனக் கடிதங்களை வழங்கி வைத்தனர். இந்நிகழ்வில் பிரதேச சபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.(2-15)

# கறைபடிந்து கொண்டிருக்கும் அரசியலை இளைஞர்களினால்தான் காப்பாற்ற முடியும்

## வினோ எம்.பி.தெரிவிப்பு

(வவுனியா)

மக்களை அணி திரட்டவும், தலைமை தாங்கவும் கூடிய சக்தியும் பலமும் இன்றைய இளைஞர் சமுதாயத்திடம் அதிகம் உள்ளது. சுயநல அரசியல்வாதிகளின் கைகளினால் கறை படிந்து கொண்டிருக்கும் தூய்மையான அரசியலை உங்களைப்போன்ற இளைஞர்களினால்தான் காப்பாற்ற முடியும் என தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோதராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியா பிரதேச இளைஞர் சம்மேளனக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

சில சுயநல அரசியல் வாதிகளின் நடவடிக்கைகளினாலும், போக்குகளினாலும் நீங்கள் அரசியலில் ஈடுபடுவதை தவிர்த்திருக்கலாம்.கடந்த காலங்களில் தமிழ் இளைஞர்கள் அரசியலில் பிரவேசிக்கும் போது அரசாங்கம் சந்தேகம் கொண்ட ஒரு நிலைமை இருந்தது. ஒரு காலத்தில் துப்பாக்கி கலாசாரம் மேலோங்கி இருந்தது.

சாதாரண இளைஞர்களுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இருந்தது. அதனால் நீங்கள் அரசியலில் ஈடுபட அச்சப்பட்டீர்கள். இன்று அந்த நிலைமை மாறியிருக்கின் றது. நீங்கள் தேர்தலிலும், அரசியலிலும் ஈடுபட நாம் வாய்ப்புக்கள் வழங்க தயாராக இருக்கின்றோம்.

நேர்மையான, உண்மையான அரசியல் பணி செய்ய நீங்கள் தயாராக வேண்டும்.ஒரு சில அரசியல் வாதிகள் செய்கின்ற தவறு களினால் ஒட்டுமொத்த அரசியல்வாதிகளும் விமர்சிக்கப்படுகின்றார்கள்.

சமூக, சமுதாய பணிகளில் நீங்கள் வெற்றி கொண்டால் அரசியல் பணிகளிலும் உங்களினால் வெற்றி கொள்ள முடியும். எமது மக்கள் எதிர்பார்க்கின்ற மாற்றங்களை உங்களினால் கொண்டு வர முடியும்.

அண்மைய அரசியல் மாற்றத்தில் இளைஞர்களின் பங்களிப்பு இதற்கு எடுத்துக்காட்டானதாக அமைந்துள்ளது.

அரசியலோடு சமூக,பொருளாதார கல்வி போன்ற விடயங்களிலும் இளைய சமுதாயம் புரட்சிகர சிந்தனைகளுடன் போராட முன்வர வேண்டும் என்றார்.(2)

# மக்களின் கருத்துக்களை கேட்டறிந்து அபிவிருத்தியை மேற்கொள்ளவேண்டும்

## வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஜி.ரி.லிங்காநாதன் தெரிவிப்பு

(குருமன்காடு)

மக்களின் கருத்துக்களை அறிந்து கிராமங்களுக்கு அபிவிருத்திகளை கொண்டு செல்லும் திட்டம் புதிய அரசின் சிறப்பு என வடமாகாணசபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பிரதேசங்களில் "வீட்டுக்கு வீடு கிராமத்திற்கு கிராமம்" எனும் 100நாட்கள் துரித வேலைத்திட்டத்தின் கீழ் 15 ஆயிரம் கிராமங்களை மேம்படுத்தும் ஆரம்ப நிகழ்வும் சாதாரண தரத்தில் சித்தியடைந்தவர்களுக்கான சமுர்த்தி திட்டத்தினால் சிப்தொர புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வும், நாவலர் முன்பள்ளிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வும் நேற்று முனதினம் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு கருத்து தெரிவிக்கையில்,



இத்திட்டமானது சமுர்த்தி அமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. அதிலும் சமுர்த்தி அமைச்சராகவுள்ள சஜித் பிரேமதாச வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்த மக்களுடன் இருந்த ஒருவர். தனது தந்தை போல் கிராமிய வளர்ச்சியில் அக்கறை கொண்டவர்.

இந்த நிலையில் நாம் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு எமது கிராமங்களை அபிவிருத்தி செய்துகொள்ள வேண்டும். அத்துடன் புதிய அரசில் எமது கட்சியும் எமது மக்களும் பங்குதாரர்களாக உள்ளனர்.

எனவே எமக்கு தேவையானவற்றை கேட்டுப்பெற்றுக்கொள்வதற்கு உரிமையுள்ளது. இந்நிலையிலேயே எமது கட்சியின் தலைவரும் ஒருங்கிணைப்பு குழுவில் கலந்துகொள்கின்றார்.

ஆகவே கடந்த காலத்தைப் போன்று இந்த அரசு பெரும்பான்மை இனத்தவர்களுக்கான அரசு என்ற எண்ணத்தை விடுத்து செயற்படவேண்டும்.

வட மாகாணசபை ஆரம்பிக்கப்பட்டு ஒருவருட காலமாக முன்னாள் ஜனாதிபதியும் வடக்கு மாகாண ஆளுநரும் பிரதம செயலாளரும் தடையாக இருந்தார்கள்.

ஆனால், தற்போது அந்த நிலை மாற்றமடைந்துள்ளது. எனவே நாம் எதிர்வரும் 4 வருடங்களில் எமது பிரதேச கிராமங்களின் வளர்ச்சியில் பங்கேற்போம் எனத் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடமாகாணசபை உறுப்பினர் ம.தியாகராசா, வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பரந்தாமன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதாந்தக் கட்டுப்பணம் செலுத்தாததால் வங்கிகளினால் 150பேருந்துகள் பறிமுதல்

(மல்லாவி)

**வடக்கு மாகாணத்திலுள்ள 5 தனியார் பேருந்து உரிமையாளர் சங்கங்களின் கீழ் பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபட்ட 150 இற்கு மேற்பட்ட பேருந்துகளை மாதாந்தம் கட்டுப்பணம் செலுத்தவில்லையென்ற காரணத்தைக் காட்டி குத்தகை அடிப்படையில் பணம் (லீசிங்) கொடுத்த வங்கிகள் மீளப் பெற்றுச் சென்றுள்ளன.**

இதனால் தமக்கான வாழ்வாதாரத்தை இழந்து பலகோடி ரூபாவிற்கு மேல் பணத்தை இழந்து நிர்க்கதியான நிலையில் வாழ்வதாகவும் அரசு தமக்கு உதவவேண்டுமென பாதிக்கப்பட்டுள்ள தனியார் பேருந்துகளின் உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பில் தெரியவருவதாவது,

வன்னியில் நடைபெற்று முடிந்த இறுதி யுத்தத்திற்கு முன்னரும் அதற்கு பின்னரான மீள்குடியேற்றக் காலப்பகுதியிலும் பொதுமக்களுக்கான போக்குவரத்து சேவையினை வழங்கி வந்த தனியார் பேருந்து உரிமையாளர்கள் அநேகமானோர் தமது பேருந்துகளை இறுதிப் போரின் போது கைவிட்டு வந்தமையால் இழந்துள்ளனர்.

இதனையடுத்து சமாதான சூழ்நிலையில் மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்து சேவைகள் அதிகரிக்கப்பட்டன.

அரச பேருந்துகளின் போக்குவரத்து சேவை இல்லாத காரணத்தினாலும் தனியார் பேருந்து உரிமையாளர்கள் ஆயிரக்கணக்கான பேருந்துகளை முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா ஆகிய 5 மாவட்டங்களிலும் வங்கிகளில் குத்தகை முறையில் கொள்வனவு செய்து பணியில் ஈடுபடுத்தி வந்தனர்.

தற்போது அரசாங்கத்தின் பேருந்துகளின் போக்குவரத்து சேவை அதிகரிக்கப்பட்டுள்ள நிலையிலும் புகையிரத சேவைகள் விஸ்தரிக்கப்பட்டதன் காரணத்தினாலும் தனியார் பேருந்துகளின் வருமானத்தில் வீழ்ச்சி ஏற்பட்டது.

இதனால் வங்கிகளில் பெற்ற குத்தகைப் பணத்தை செலுத்த முடியாமல் போனமையால் மன்னாரிலிருந்து 30 பேருந்துகளையும் முல்லைத்தீவிலிருந்து 40 பேருந்துகளையும் யாழ்ப்பாணத்திலிருந்து 25 பேருந்துகளையும் கிளிநொச்சியிலிருந்து 50 பேருந்துகளையும் வவுனியாவிலிருந்து 25 பேருந்துகளையும் தனியார் பேருந்து உரிமையாளர்கள் வங்கிகளிடம் பறிகொடுத்தனர்.

எனவே இதனைக் கருத்தில் கொண்டு அரசாங்கம் தமக்கு வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கு உதவிகள் வழங்க வேண்டுமென பாதிக்கப்பட்டுள்ள பேருந்துகளின் உரிமையாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-15)

# மன்னார்க் குடாவில் இந்திய நாட்டுப் படகுகள்

தமிழக இழுவைப் படகுகளின் அத்துமீறல்களும் நெருக்கடிகளும் முடிவின்றி தொடர்ந்து கெண்டிருக்க இன்னொரு புறத்தில் மன்னார் குடாக் கடலில் கரையோரத்திற்கு சமீபமாக நாட்டுப் படகுகளென அழைக்கப்படுகின்ற இயந்திரப் படகுகள் வாரம் முழுவதும் தங்கியிருந்து தடைசெய்யப்பட்ட தங்கூசி-படுப்பு வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டு வருவது அவதானிக்கப்பட்டுள்ளது.



அரிப்பு-கற்பார் தொடர், வங்காலை கற்பார் தொடர் பகுதிசார்ந்து தரித்து நிற்கும் இத்தகைய படகு ஒன்றில் 8 பேர் வரையில் பணியாற்றுகின்றனர். குளிரூட்டல் வசதிகளைக் கொண்ட இப்படகுகள் சுமார் 35-40 அடி நீளமானவையாகும். சில கிலோ மீற்றர் நீளம் வரையிலும் தங்கூசி வலைகளை வழிச்சல் முறையில் அல்லது வழிச்சல் அற்ற முறையில் படுக்க வைத்து பெறுமதிமிக்க நண்டு மற்றும் கல்மிதவைகள் பாரை, அறக்குளா போன்ற மீன்களை பிடித்துச் செல்கின்றன.

வாராந்த உற்பத்தி அளவுகள் சரியாக கணிப்பிட முடியாவிடினும் ஒரு படகு ஒரு வாரத்தில் 3 முதல் 4 இலட்சம் ரூபா பெறுமதியான மீன்களை பிடித்துச் செல்வதாக அப்பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர். இப்படகுகளின் வருகையினால் தமது தொழில் பாரியளவில் பாதிக்கப்படுவதாகவும் கரையோரத்திலேயே தமது வலைகளை போட்டு மீன்பிடியில் ஈடுபட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுவதாகவும் தெரிவிக்கின்றனர். ஒரு புறத்தில் உள்ளூர் மீனவர்கள் சிலரால் மேற்கொள்ளப்படும் நாசகார வேலை மீன்பிடி முறையான டைனமற் வெடி வைத்தல் முறை, அகல- கம்பி பொறி வகைகளின் பிரயோகம், மரக்குற்றிகளை அமிழ்த்துதல் போன்ற முறைகளாலும் பெருமளவில் பாதிக்கப்படுவதாகவும் உரிய இடங்களில் இவற்றை அறிவித்தபோதிலும் எவ்வித பயனும் இல்லை எனவும் அப்பகுதி மீனவர்கள் விசனம் தெரிவித்து வருகின்றனர். (இ

**மத்திய மீன்வளத்துறை அமைச்சரும் மாகாண மீன்வளத்துறை அமைச்சரும் இது விடயத்தில் அக்கறை செலுத்த வேண்டும் என அப்பகுதி மக்கள் ஆய்வாளர்களிடம் முறையிட்டு வருகின்றனர். கரையோர பாதுகாப்புப் பிரிவினராலோ அல்லது கடல்வளத் திணைக்களத்தினராலோ எதுவித பயனும் இல்லை எனவும் முறையிட்டுள்ளனர்.**

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

04.2015
12

- 1633 - ரோமன் கத்தோலிக்க மத பீடத்தினால் கலிலியோ கலிலிக்கு எதிரான விசாரணைகள் ஆரம்பமாகின.
- 1832 - இலங்கையில் கட்டாய அரச சேவையை ஒழிக்கும் ஆணையை பிரித்தானிய அரசர் பிறப்பித்தார்.
- 1861 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்புப் படைகள் ஐக்கிய அமெரிக்காவின் படைகளை தென் கரோலினாவில் தாக்கியதுடன் போர் வெடித்தது.
- 1864 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: டென்னசியில் சரணடைந்த அனைத்து ஆபிரிக்க அமெரிக்க படையினர்களும் அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பு படைகளினால் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1865 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: அலபாமாவில் மொபைல் என்ற நகரம் கூட்டணி இராணுவத்திடம் வீழ்ந்தது.
- 1927 - ஷங்காயில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.
- 1955 - ஜோனாஸ் சாலக் என்பவரினால் கண்டுபிடிக்கப்பட்ட போலியோ நோய்த் தடுப்பூசி பாதுகாப்பானதென அறிவிக்கப்பட்டது.
- 1961 - சோவியத் ஒன்றியத்தின் யூரி ககாரின் விண்வெளிக்குச் சென்ற முதல் மனிதரானார்.
- 1980 - லைபீரியாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியை அடுத்து சாமுவேல் டோ நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றினார். 130 ஆண்டுகால மக்களாட்சி அமைப்பு முறை முடிவுக்கு வந்தது.
- 1981 - முதலாவது மீள் விண்ணோடம்- கொலம்பியா விண்ணோடம் விண்வெளியை நோக்கி ஏவப்பட்டது.
- 1983 - பிரித்தானியத் திரைப்படமான காந்தி எட்டு ஒஸ்கார் விருதுகளை வென்றது.
- 1996 - யாஹூ! இனது முதற் பொதுப் பங்கு வழங்கல.
- 2007 - இந்தியா அக்னி-III என்ற தரையில் இருந்து தரைக்கு ஏவப்படும் நடுத்தர ஏவுகணையை 3000 கி.மீ தூரத்துக்கு வெற்றிகரமாகப் பரிசோதித்தது.

**பிறப்புகள்**

- கி.மு 599 - மகாவீர், ஜெய்ன மதத்தை உருவாக்கியவர். (இ. கி.மு 527)
- 1884 - ஓட்டோ மெயெரொஃப், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்றவர் (இ. 1951)
- 1907 - வி. நாகையா, திரைப்பட நடிகர், இயக்குனர்
- 1932 - லக்ஸ்மன் கதிர்காமர், இலங்கை அரசியல்வாதி (இ. 2005)

**இறப்புகள்**

- 1945 - பிராங்க்ளின் ரூஸ்வெல்ட், ஐக்கிய அமெரிக்காவின் 32 ஆவது ஜனாதிபதி (பி. 1882)
- 1971 - ஈகர் தம், நோபல் பரிசு பெற்ற உருசியர் (பி. 1895)
- 1997 - ஜார்ஜ் வால்ட், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி. 1903)
- 2006 - ராஜ்குமார், கன்னட நடிகர் (பி. 1929)

**சிறப்பு நாள்**

- சர்வதேச வீதியோரச் சிறுவர்கள் தினம்
- மனித விண்வெளிப் பயணத்துக்கான சர்வதேச தினம்

# 58 முன்னாள் அமைச்சர்களுக்கு எதிராக இலஞ்ச ஊழல் முறைப்பாடு

மகிந்த கடந்த அரசாங்கத்தில் அங்கம் வகித்த முன்னாள் அமைச்சர்கள் 58 பேருக்கு எதிராக ஊழல் மோசடி குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலஞ்ச ஊழல் மோசடிகளில் ஈடுபட்டமை தொடர்பிலேயே இவ்வாறு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

90 வீதமான முறைப்பாடுகள் அநாமதேய கடிதங்களுக்கு அடிப்படையிலானது என குறிப்பிடப்படுகின்றது.

முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தனது மகனின் வங்கி கணக்கில் 7 கோடியே 37 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாய் வைப்பு செய்துள்ளார் என அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இது தொடர்பாக அவரது மகனிடமும் விசாரணை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தனக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களில் எவ்வித உண்மையும் கிடையாது என மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

மேலும் அரசாங்கம் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் கிளையொன்றை பாராளுமன்ற வளாகத்திலேயே உருவாக்கிக் கொண்டால் இலகுவாக இருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் தமது பாராளுமன்ற உறுப்புரிமையை துறக்கப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

தமது மகனின் பெயரில் சிங்கப்பூரில் வங்கிக் கணக்கு திறந்துள்ளதாகவும் பணம் வைப்புச் செய்துள்ளதாகவும் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சரியான முறையில் விசாரணை நடத்தியே நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கீதம் தமிழில் பாட அனுமதித்த நிறைவேற்று சபைக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

**இலங்கையில் தேசிய கீதம் சிங்கள மொழியிலே பாடப்பட வேண்டும் எனவும் தமிழ் மொழியிலும் தேசிய கீதத்தைப் பாடுவதற்கு அனுமதியளித்துள்ளமை அரசியலமைப்புச் சட்டத்துக்கு விரோதமானது எனவும் தெரிவித்த சிங்கள ராவய அமைப்பின் தேசிய அமைப்பாளர் வெயவர சீலரத்ன தேரர் இவ் அனுமதியை வழங்கிய தேசிய நிறைவேற்றுச் சபை உறுப்பினர்களுக்கு எதிராக புத்தாண்டின் பின்பு வழக்குத் தொடரவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.**

நேற்றுமுன்தினம்தெஹிவளை பௌத்த மத்திய நிலையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலே அவர் மேற்கண்ட கருத்தினை வெளியிட்டார். அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில், உலகில் எல்லா நாடுகளிலும் அந்நாட்டின் தேசிய மொழியிலேயே தேசிய கீதம் இசைக்கப்படுகிறது. இந்தியாவில் பல மொழிகள் பேசும் மக்கள் இருந்தாலும் அங்கு ஒரு மொழியிலே தேசிய கீதம் பாடப்படுகிறது. தமிழ் நாட்டில் 6 கோடி மக்கள் இருந்தும் அங்கு தமிழ் மொழியில் தேசியகீதம் பாடுவதற்கு உரிமை கோரப்படவில்லை.

இலங்கையின் அரசியலமைப்புச் சட்டத்தின்படி தேசிய கீதம் சிங்கள மொழியிலே பாடப்பட வேண்டும். அரசியலமைப்பு சீர்திருத்தத்தை கொண்டு வர வேண்டுமென்றால் அதற்கு 2/3 பெரும்பான்மை தேவை. தேசிய கீதம் சிங்கள மொழியிலே பாடப்பட வேண்டும் என்பதை சபாநாயகரைச் சந்தித்து விளக்கமளித்துள்ளோம்.

அமைச்சர் கருஜயசூரியவையும் சிங்கள ராவய அமைப்பு சந்தித்து கலந்துரையாடியுள்ளது. தேசிய கீதம் தமிழ் மொழியில் பாடப்படுவதை அனுமதிப்பதா? என்பது தொடர்பில் ஆராய்ந்து தீர்மானம் மேற்கொள்வதாக அவர் உறுதியளித்திருந்தார்.

தேசிய கீதம் தமிழ் மொழியில் பாடுவதற்கு அனுமதியளிக்கப்பட்டால் பெரும்பான்மையின மக்கள் மத்தியில் தமிழ் மக்கள் மீது குரோதம் ஏற்பட காரணமாக அமையும். இதன் மூலம் இனங்களுக்கிடையிலான உறவு பாதிக்கப்படும். எனவே சிங்கள மொழியில் மாத்திரமே தேசிய கீதம் பாடப்பட வேண்டுமென நாம் வலியுறுத்துகிறோம்.

தமிழ் மொழியில் தேசிய கீதத்தைப்பாடுவதற்கு அனுமதி வழங்கியுள்ள தேசிய நிறைவேற்றுச் சபைக்கு எதிராக உயர் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## வடக்கு கல்வி நிலையை முன்னேற்ற மத்திய அரசு முக்கிய தீர்மானங்கள்

### கல்வி அமைச்சர் காரியவசம் தகவல்

வடக்கிற்கு அண்மையில் விஜயம் செய்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் ஆகியோர் பாடசாலைகளில் நிலவுகின்ற குறைபாடுகள் தொடர்பாக பெற்றுக் கொண்ட தகவல்களின் அடிப்படையில் சில முக்கிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அதன் அடிப்படையில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களை விசேட வர்த்தமானி மூலம் அறிவித்து கல்வி அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

யுத்த காலத்தின்போது அர்ப்பணிப்புடன் வடக்கு மாகாணத்தில் சேவையாற்றிய ஒப்பந்த அடிப்படையிலான ஆசிரியர்களையும் தொண்டர் ஆசிரியர்களையும் தேர்வு பரீட்சைகள் மூலம் மிகவிரைவில் நிரந்தரமாக்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

மலையகத்தில் கணிதம், விஞ்ஞானம் தொடர்பாக 23 பாடசாலைகளும் சங்கீதம், நடனம் தொடர்பாக ஒரு பாடசாலையும் விளையாட்டுத்துறை அபிவிருத்திக்காக ஒரு பாடசாலையை தரமுயர்த்தவும் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

மிகவிரைவில் இவை அமுல்படுத்தப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் மேலும் தெரிவித்தார். (இ-5)

## 19-வது திருத்தத்திற்கு ஹெல உறுமய ஆதரவு

உயர்நீதிமன்றத்தின் சட்ட விளக்கத்தை அடுத்து தாம் 19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்துக்கு ஆதரவளிக்கவுள்ளதாக ஜாதிக ஹெல உறுமய அறிவித்துள்ளது.

உயர்நீதிமன்றத்தின் சட்ட விளக்கத்தின் கீழ் திருத்தத்தில் உள்ள சில சரத்துக்கள் மாற்றியமைக்கப்படவுள்ளன.

இதேவேளை யோசனையில் உள்ள சரத்துக்கள் சிலவற்றின் மீது சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்த சரத்துக்களை நீக்குவதற்கு இணங்கியமைக்காக ஜனாதிபதிக்கும் பிரதமருக்கு தாம் நன்றி கூறுவதாக ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.



முன்னதாக இந்த திருத்தத்தில் பிரதமருக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ள தாக ஜாதிக ஹெல உறுமய குற்றஞ் சுமத்தியிருந்தமை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## அஸ்கிரிய பீடாதிபதியின் மறைவிற்கு அமெரிக்கா, சீனா ஆழ்ந்த இரங்கல்

அஸ்கிரிய பீடாதிபதி உடுகம ஸ்ரீ புத்தரக்கித்த தேரரின் மறைவிற்கு சீனாவும், அமெரிக்காவும் தமது ஆழ்ந்த இரங்கலை வெளியிட்டுள்ளன.

இலங்கைக்கு மட்டுமன்றி உலகிற்கே பௌத்தத்தை போதிப்பதற்கு அஸ்கிரிய பீடாதிபதி வழங்கிய சேவையானது அளப்பரியது எனவும், இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையிலான பௌத்த உறவுகளை வலுப்படுத்த அஸ்கிரிய பீடாதிபதி முக்கிய பங்காற்றியதாகவும் இலங்கைக்கான சீன தூதுவர் ஜி சியான்லியாங் தெரிவித்துள்ளார்.

அஸ்கிரிய பீடாதிபதி பல தடவைகள் சீனாவிற்கு விஜயம் செய்துள்ளதாகவும் அவருக்கு உயரிய மரியாதை சீனாவில் காணப்படுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட் டுள்ளார். உலகம் தலைசிறந்த மதத் தலைவர் ஒருவரை இழந்துள்ளதாகவும் அவரது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அஸ்கிரிய பீடாதிபதிக்கு அமெரிக்கா தனது இரங்கலை வெளியிட்டுள்ளது. அஸ்கிரிய பீடாதிபதியைத் தெரிந்த அமெரிக்கர்களும், இலங்கையர்களும் அவர் மீது மிகுந்த மரியாதை கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. பௌத்த மத விழுமியங்களின் அடிப்படையில் வாழ்ந்த அஸ்கிரிய பீடாதிபதி அனைவ ருக்கும் முன்னுதாரணமாக திகழ்ந்தார் என குறிப்பிட்டுள்ளது. (இ-5)

## ஈழத்தமிழருக்கு ஆதரவாக கனேடிய நீதிமன்றம் தீர்ப்பு!

இலங்கை தமிழர் ஒருவர் நாடு கடத்தப்படுவதை கனேடிய பிராந்திய நீதிமன்றம் ஒன்று தடுத்துள்ளது.

அவர் பலாத்காரமாக இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டால், உயிருக்கு ஆபத்து உள்ளதாக கூறியே நீதிபதி சீன் ஹரிங்டன் இந்த நாடு கடத்தலை தடுக்க நேற்று முன்தினம் உத்தரவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனபோது குறித்த நபருக்கு இலங்கையில் ஆபத்தில்லை என்று கனேடிய குடிவரவுத் திணைக்களம் தெரிவித்த கருத்தையும் அவர் நிராகரித்தார்.

விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தில் வரி அறவிடும் பணியை மேற்கொண்டு வந்ததாக கூறப்படும் புவநேசன் துரைராஜா என்பவர் தொடர்பிலேயே இந்தத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இவர் பிரித்தானியாவுக்கு சென்று அடைக்கலம் கோரியபோதும் அது நிராகரிக்கப்பட்டது. இதனையடுத்து போலியான கடவுச்சீட்டை காண்பித்து அவர் கனடாவுக்குள் பிரவேசித்தார்.

இந்தநிலையில் போர்க்காலத்தில் விடுதலைப்புலிகள் பலாத்காரமாகவே வரியை அறவிட்டனர் என்ற அடிப்படையில் அவர் மீது வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

விடுதலைப் புலிகளின் நிதி திணைக்களத்தில் பணியாற்றியமை காரணமாக அவருக்கு விடுதலைப் புலிகள் மேற்கொள்கின்ற குற்றங்கள் தெரிந்திருந்தன என்றும் பொலிஸார் புவநேசன் மீது குற்றஞ் சுமத்தியிருந்தனர். எனினும் புவநேசன் குற்றத்தை செய்ய பயன்படுத்தப்பட்டவரே ஒழிய குற்றமுள்ளவர் அல்லர் என்று நீதிபதி தமது தீர்ப்பில் எழுதியுள்ளார். எனவே இலங்கையில் அவருக்கு பாதுகாப்பு பிரச்சினை உள்ளமையால் அவர் கனேடிய பாதுகாப்பில் இருக்க வேண்டியவர் என்றும் நீதிபதி தீர்ப்பில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## வாரம் ஒரு தகவல்

### முட்டைகள் பலவிதம்

மாணவர்களே! இன்றைக்கு முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் விலங்கினங்களைப் பற்றிப் பாடம் நடத்தப் போகிறேன். அதற்கு முன் உங்களிடம் ஒரு கேள்வி....

"கேளுங்கள் சேர்."

"குஞ்சு பொரிக்காத முட்டையை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?"

"பார்த்திருக்கிறோம் சேர் "

"எங்கே ? "

எங்கள் பரீட்சைத் தாளில் நீங்கள் போடுற முட்டையெல்லாம் குஞ்சு பொரிக்கிறதில்லை சேர். "

"தமாஷான பிள்ளைகள். நான் பாடத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கும் ஒரு முட்டையைப் பற்றிச் சொல்லப் போகிறேன்!. "சொல்லுங்கள் சேர்"

"இருதய நோய் உள்ள நோயாளிகள் சாப்பிடுவதற்கு அவுஸ்திரேலியாவில் கொலஸ்ரோல் இல்லாத முட்டையொன்றை கண்டு பிடித்திருக்கிறார்களாம்"

" அது எப்படியிருக்கும்? "

"அதில் மஞ்சட்கரு இருக்காது. சாதாரண முட்டையில் உள்ளதை விட 90 சதவீதம் கொலஸ்ரோல் குறைவாக இருக்கிறதாம்.

"இது ஒரு நல்ல கண்டுபிடிப்பு தான் சேர்.

சரி...பாடத்தை ஆரம்பிக்கலாமா?"ஆரம்பிக்கலாம் சேர்."

"அதற்கு முன் உங்களிடம் இன்னொரு கேள்வி கேட்கப் போகிறேன்"

"கேளுங்கள் சேர். "

"கோழி முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கிறது. ஒட்டகம் ஏன் முட்டையிட்டு குஞ்சு பொரிப்பதில்லை? யாருக்காவது பதில் தெரியுமா? "

"அது ஒட்டகத்துக்கே தெரியும் சேர்."

"என்ன தெரியும்"

"தான் முட்டை போட்டால், போடும் போதே அது தரையில் விழுந்து உடைந்து விடும் என்று "

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கூட்டமைப்பை உடைக்க முனைகிறாரா ரணில் விக்ரமசிங்க?

...ரணில் விக்கிரமசிங்கவின் நரித்தந்திரம் பலித்துப் போகுமோ என்ற அச்சத்தையும் அவர்களுக்குள் ஏற்படுத்தியது.

தனது வடக்குக்கான பயணத்தில் வடமாகாண முதலமைச்சரையும் வடமாகாணசபையையும் ஓரம்கட்டுவதை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறியாக கொண்டிருந்தார் என்பது வெளிப்படையான விடயமாகியுள்ளது.

இந்த நிலையில், கட்சியை வளர்க்க வடக்குக்கு வந்த ரணில் விக்கிரமசிங்க பங்கேற்கும் நிகழ்வுகளில், தான் பங்கேற்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் அவர் உயர் பாதுகாப்பு வலய முகாம்களை படிப்படியாக அகற்றி மக்களை மீளக்குடியேற்றுவதாக அறிவித்தால், அவருடன் கைகோர்க்க தயார் என்றும் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அறிவித்தார்.

இத்தோடு இந்த விவகாரம் முடிந்துவிடவில்லை, முடியப்போவதும் இல்லை. ஏனென்றால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பொறுத்தவரையில் வடக்கில் தனது கட்சியை காலூன்றவைப்பதற்கு முயற்சிக்கிறார் என்பது தெளிவாகத் தெரிகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலமாகவும் உறுதியாகவும் ஒன்றுபட்டு நிற்கும்வரைக்கும் அது சாத்தியமாகப் போவதில்லை என்பதும் அவருக்குத் தெரியும். எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் பிளவை எற்படுத்தினால், அந்த இடைவெளிக்குள் தாம் நுழைந்துகொள்ளலாம் என்று அவர் கணக்கு போடுவதாகத் தெரிகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை உடைத்து, அடுத்த தேர்தலில் ஐ.தே.கட்சியை பலமான நிலைக்கு கொண்டுவருவதற்கு அவர் எத்தகைய வியூகத்தை பயன்படுத்துகிறாரோ, அதேபோன்றதொரு வியூகத்தை சற்று வித்தியாசமான வடிவத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகவும் பயன்படுத்திக்கொள்கிறார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை ஓரங்கட்டுவது அவரது முதற்குறியாக தெரிகிறது. முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் உறுதியான, நியாயமான சில செயற்பாடுகளால் அதிருப்தியடைந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் சிலரும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நரித்தனத்துக்கு பலியாக தொடங்கியுள்ளனர் என்ற பேச்சும் உள்ளது.

எவ்வாறாயினும், இந்த விவகாரம் ரணில் விக்கிரமசிங்க, சி.வி.விக்னேஸ்வரன் என்ற இரண்டு தனிப்பட்ட நபர்களுக்கு இடையிலான பிரச்சினை அல்ல. ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இருக்கும் சிலர், அவ்வாறானதொரு தோற்றப்பாட்டை உருவாக்குவதன் மூலம் தமது செயலை நியாயப்படுத்த முனைவதாக தெரிகிறது.

அதேவேளை, இது இன ரீதியான பிளவு, வரலாற்று ரீதியாக தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்டு வந்த அநீதிகளின் தொடர்ச்சி என்றவாறான விமர்சனங்களும் ஊடகங்களில் முன்வைக்கப்படுகின்றன. அவ்வாறு முன்வைக்கப்படும் நியாயங்கள் தட்டிக்கழிக்கப்பட முடியாதவை என்பதை ஏற்றுக்கொண்டேயாக வேண்டும்.

தமிழரின் அரசியல் பலத்தை சிதைப்பது என்பதே எப்போதும் கொழும்பு அரசின் மைய நோக்கமாக இருந்து வந்திருக்கிறது என்பது கசப்பானதொரு உண்மை. கொழும்பு அரசின் மையமாக விளங்கிய தலைவர்கள் எல்லோருமே இதனையே செய்திருக்கிறார்கள். அந்த வகையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கூட, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சிதைக்க முயற்சிப்பதாக கூறப்படும் குற்றச்சாட்டுகளை முற்றாகப் புறமொதுக்க முடியாது.

இந்தக் கட்டத்தில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் பிரதமர் ரணில விக்கிரமசிங்கவுக்கும் இடையில் தோன்றியுள்ள முரண்பாடுகள், தமிழ் மக்களிடையே மட்டும் கவனிப்பை ஏற்படுத்தவில்லை. சர்வதேச சமூகமும் கூட இந்த விவகாரத்தை உன்னிப்பாக அவதானிக்கிறது, உற்றுநோக்குகிறது என்பதை தெளிவாக உணரமுடிகிறது.

இலங்கையில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தை அடுத்து உருவாகியுள்ள புதிய அரசாங்கம் ஜனநாயகம், மனித உரிமைகள், நல்லாட்சி உள்ளிட்ட விடயங்களில் முன்னைய அரசாங்கத்தை விடவும் சாதகமானதொரு நிலைமைக்கு நாட்டைக் கொண்டு செல்லும் என்ற நம்பிக்கை சர்வதேச சமூகத்திடம் நிரம்பியிருக்கிறது.

அந்த எதிர்பார்ப்பை பல்வேறு நாடுகளும் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் வெளிப்படையாகவே எடுத்துக் கூறியிருக்கின்றன.

இத்தகைய நிலையில், ஆட்சி மாற்றத்துக்கு பின்னர், வடமாகாண முதலமைச்சருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் தோன்றியுள்ள முரணபாடு, தமிழ் - சிங்கள இனங்களுக்கு இடையிலான நல்லிணக்க முயற்சிகளை சிதைத்துவிடுமோ என்ற கவலையை சர்வதேச சமூகத்திடம் ஏற்படுத்தியுள்ளது.

அண்மைய நாட்களில் வடமாகாணத்துக்கு கள நிலைகளை கண்டறிவதற்காக பயணம் மேற்கொள்ளும் வெளிநாட்டு இராஜதந்திரிகள், சர்வதேச பிரமுகர்கள், இந்த முரண்பாடு குறித்தும் கவனம் செலுத்தி வருகின்றனர். ஜேர்மனி, அவுஸ்திரேலிய தூதுவர்கள் யாழ். ஆயரிடம் இது பற்றி விசாரித்தறிந்துள்ளனர்.

இந்த விவகாரத்தில் யார் பக்கம் நியாயம் உள்ளது என்பதை அறிந்துகொள்வதற்காக வேறு பல மட்டங்களிலும் அவர்கள கலந்துரையாடல்களை நடத்தியிருக்கின்றனர். ஆட்சி மாற்றத்துக்கு பிந்திய சூழலில் தமிழ் மக்களுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்திக்கொள்வதற்கு அரசாங்கம் முன்னுரிமை கொடுக்கவேண்டும் என்பது சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்பாக உள்ளது. அந்த சூழல் இந்த முரண்பாட்டினால் சிதைக்கப்பட்டுவிடுமோ என்ற கவலை வெளிநாட்டு இராஜதந்திர மட்டங்களில் ஏற்பட்டிருப்பதில் வியப்பில்லை.

தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற புதிய அரசாங்கம் தவறிவிட்டது என்று வடமாகாண முதலமைச்சர், அவுஸ்திரேலிய தூதுவரிடம் குறிப்பிட்டிருந்தார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினது செயற்பாடுகளின் மீதுள்ள அதிருப்தி கூட அவரை இந்தளவுக்கு விரைவாக இத்தகைய கருத்தை வெளிப்படுத்த தோன்றியிருக்கலாம்.

தற்போதைய அரசாங்கம், வரையறுக்கப்பட்ட காலமே பதவியில் இருக்கக்கூடியது என்பதும் வரையறுக்கப்பட்ட எல்லைகளை தாண்டாது என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சரி, வடமாகாண முதலமைச்சரும் சரி நன்றாகவே அறிந்திருக்கின்றனர். ஆனாலும், அரசாங்கத்தின் செயற்பாடுகள் மீது அதிருப்தியை, அவநம்பிக்கையை வெளிப்படுத்தும் அவசரம் அவர்கள் மத்தியில் தோன்றியுள்ளது என்றால், அதற்கு அடிப்படைக் காரணம் அவர்களின் மீது ரணில விக்கிரமசிங்க கைவைக்க முயன்றதே.

எனவே, இந்த முறுகல், தமிழர் அரசியலை ஓரங்கட்டி பழகிப்போன தென்னிலங்கையின் அரசியல் பாரம்பரியத்தின் விளைவு என்பதே சரியான கருத்தாக தெரிகிறது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வடக்கிலுள்ள தமிழர்களிடம் எப்படி அரசியல் நடத்துவது என்பதை அறியாதவராக இருக்கிறார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதையில் பயணிக்க நினைப்பதே அவர் செய்யும் தவறு. இது அவரையும் அதே படுகுழிக்குள் தள்ளிச் செல்லும்.

-கே.சஞ்சயன்-




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாந்தோட்டை துறைமுக செலவை கொழும்பு ஏற்க இடமளிக்க முடியாது

## அமைச்சர் அர்ஜுன எதிர்ப்பு



(கொழும்பு)

**அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கான செலவீனங்களை தொடர்ந்தும் கொழும்பு துறைமுகமே ஏற்றுக்கொள்வதற்கு இடமளிக்க முடியாது என துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சின் முன்னேற்றம் தொடர்பான மீளாய்வு கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய துறைமுகங்களிற்கு தனித்தனியே இலாப, நட்ட கணக்குகளை ஆரம்பிக்க வேண்டியுள்ளது என அவர் தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கென இதுவரை இலாப நட்டகணக்கு ஆரம்பிக்கப் படாத நிலையில் கொழும்பு துறைமுகத்தின் இலாப நட்டகணக்கின் கீழ் இயங்கி வந்துள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் 2012ஆம் ஆண்டிற்கான மொத்த செலவீனம் 812 மில்லியன் ரூபாவாகவும், மொத்த வருமானம் 135 மில்லியன் ரூபாவாகவும் காணப்படுகின்றது.

இருந்த போதிலும் அம்பாந்தோட்டை துறைமுகத்தினால் ஏற்பட்டுள்ள நட்டம் கொழும்பு துறைமுகத்தின் வருமானத்திலிருந்து ஈடு செய்யப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் கொழும்பு துறைமுகத்தின் அபிவிருத்தி பணிகளுக்கு பாரிய அளவில் அழுத்தம் விடுக்கப்பட்டுள்ளதாகவும் இக்கூட்டத்தின் போது அதிகாரிகளினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 30 | 30 | 30 | 40-50 | 40 |
| உருளைக்கிழங்கு | 100 | 80 | 70 | 80 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 40 | 40 | 60 | 80 | 50 | 40 |
| தக்காளி | 100 | 50 | 50 | 60 | 40 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 50 | 60 | 40 | 40 |
| கோவா | 60 | 30 | 40 | 60 | 30 | 40 |
| கரட் | 180 | 140 | 110 | 120 | 120 | 100 |
| பூசணி | 60 | 40 | 40 | 40 | 30 | 30 |
| புடோல் | 60 | 40 | 40 | 40 | 50 | 40 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 60 | 30 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 70 | 70 | 120 | 80 | 50 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 80 | 80 | 100 | 90 |
| பாகற்காய் | 100 | 100 | 100 | 80 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 40 | 60 | 50 | 50 |
| கருணைக் கிழங்கு | 100 | 70 | 60 | 80 | 50 | 80 |
| பயற்றங்காய் | 100 | 80 | 40 | 100 | 60 | 80 |
| லீக்ஸ் | 250 | 200 | 150 | 180 | 140 | 140 |
| பீற்றூட் | 100 | 50 | 60 | 60 | 40 | 40 |
| கறிமிளகாய் | 200 | 100 | 100 | 100 | 70-100 | 100 |
| முருங்கைக்காய் | 300 | 400 | 280 | 400 | 400-450 | 500 |
| போஞ்சி | 200 | 80 | 100 | 120 | 100 | 120 |
| கத்தரிதம்புள்ள | 10 | 20 | 20 | 20 | — | — |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 30 | 30 | 25-30 | 30 |
| தேசிக்காய் | 100 | 120 | 80 | 100 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 25-70 | 60 | 40-50 | 50-60 | 60 | 60 |
| இராசவள்ளி | 200 | 80 | — | 120 | 120 | 120 |
| வெங்காயப்பூ | 200 | — | — | — | — | — |
| முள்ளங்கி | 40 | 20 | 40 | 80 | 40 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 40 | 30 | 30 | 30 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 | 10 | 20 |

# முறைப்பாடுகள் அதிகரிப்பு

ஏப்ரல் முதலாம் திகதி முதல் இதுவரையிலுமான காலப்பகுதியில், நுகர்வோரிடமிருந்து ஆயித்து 58 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இவற்றுள் உணவு வகைகள், ஆடை அணிகள் மற்றும் மின் உபகரணங்கள் தொடர்பிலேயே அதிகமான முறைப்பாடுகள் கிடைக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

அத்துடன் வெதுப்பக உற்பத்திகள் தொடர்பிலும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒரு கோப்பை பாலிடாத தேநீர் 10 ரூபாவுக்கும், பால் தேநீர் 25 ரூபாவுக்கும், அப்பம் 10 ரூபாவுக்கும் விற்பனை செய்ய வேண்டும் என அரசாங்கம் அண்மையில் அறிவித்தது.

எனினும், சிற்றுண்டிச்சாலை மற்றும் உணவகங்களில் மாத்திரம் 40 சதவீத விலைக்குறைப்பு செய்யப்பட்டுள்ளதாகவும் முறையிடப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

அதன்காரணமாக அரசாங்கம் அளிக்கும் நன்மைகள் பொதுமக்களுக்கு கிடைக்கச் செய்வது தொடர்பில் எதிர்வரும் 20ஆம் திகதி தொடக்கம் வர்த்தகர்களுக்கு தெளிவுபடுத்தும் வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது. (இ-5)

# தேர்தல் திருத்தச் சட்டம் தற்போதைக்கு இல்லை!

## பிரதியமைச்சர் பெரேரா தெரிவிப்பு

(கொழும்பு)

புதிய தேர்தல் முறைமை தற்போதைக்கு கொண்டுவரப்பட மாட்டாது என வெளிவிவகார பிரதியமைச்சர் அஜித் பி.பெரேரா தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

19ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் நிறைவேற்று அதிகாரங்கள் குறைந்த ஜனாதிபதி முறைமை எஞ்சியே உள்ளது.

முன்னதாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டுமாயின், பாராளுமன்ற தேர்தல் முறைமையில் மாற்றம் கொண்டு வரப்படவேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உட்பட சில அரசியல் சக்திகள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தன.

தற்போது உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானத்திற்கு அமைவாக உத்தேச 19ஆவது திருத்தச் சட்டத்தில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டி நாளைப்படும் சரத்துக்கள் அகற்றப்பட்ட பின்னர் அதனை நடைமுறைப்படுத்துவதால் அப்பிரச்சினையிலிருந்து வெளிவரக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

அத்திருத்தம் நிறைவேற்றப்படும் பட்சத்தில் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களில் நிச்சயம் குறைவு ஏற்படும்.

19ஆவது திருத்தச்சட்டம் பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படும் எனவும் தெரிவித்தார்.

19ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் பாராளுமன்றம் கலைக்கப்படும் பட்சத்தில் தற்போதுள்ள முறைமையிலேயே தேர்தல் நடைபெறும். தேர்தல் முறைமை தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளருடன் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

குறிப்பாக இந்த 19ஆவது திருத்தச்சட்ட நடைமுறையின் பின்னர் அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய புதிய தேர்தல் முறைமையொன்று அமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்.

தற்போதைக்கு தேர்தல் முறையில் மாற்றம் கொண்டுவரப்பட மாட்டாது எனவும் அவர் தெரிவித்தார். (இ-5)

# பிரிவுத்துயர் பகிர்வு

### அந்தோனிப்பிள்ளை செல்வராசா



கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் நவாலி தெற்கு, மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை செல்வராசா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 2மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் 1வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### செல்லர் அரியம்



ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் நவாலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லம் அரியம் கடந்த 9ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் இன்று ஞாயிற்றுக் கிழமை மு.ப 10.30 மணிக்கு நவாலி ஆரியம்பிட்டி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

### அம்பலவாணர் சிவபாதம்



கரம்பன் கிழக்கு,காளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் புத்தூர் கிழக்கு கேணியடிவீதி,கொக்குவில்மேற்கு ஆகிய இடங்களை வசிப்பிட மாகவும் கொண்ட அம்பலவாணர் சிவபாதம் கடந்த 8ஆம்திகதிபுதன்கிழமைஅன்றுகாலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் மு.ப 10மணியளவில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### திருமதி செல்லத்துரை மீனாட்சி



உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் அநுராதபுரம், பளை வீமன்காமம், இணுவில் கிழக்கு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை மீனாட்சி கடந்த 7ஆம் திகதி அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞயிற்றுக்கிழமை காலை 9மணியளவில் அவரது இல்லத் தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் இணுவில் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### சின்னத்தம்பி நவரத்தினம்

(ஓய்வுபெற்ற மீன்பிடித் திணைக்கள பரிசோதகர்)



கெருடாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நவரத்தினம் கடந்த 9ஆம் திகதி வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் காட்டுப்புலம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### பொன்னையா சிவசம்பு



கோவிலாக்கண்டி மத்தியைப் பிறப்பிடமாகவும் கனடா Mortreal ஐ வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சிவசம்பு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று காலை 9மணி தொடக்கம் பி.ப 12.45 மணிவரை Aeterna Funeral Complex, 55 Rue Gince Street, Saint Laurent, QC H4N1J7, Canada என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.

### திருமதி.நடராசா ஜெகரூபி



உரும்பிராயை பிறப்பிடமாகவும் நந்தாவில் கொக்குவில், பாமன் கடைலேன் வெள்ளவத்தை ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா ஜெயரூபி கடந்த 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்றுகாலை 9.30 மணியளவில் பாமன் கடைலேன் வெள்ளவத்தையில் நடைபெற்று பின்னர் பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் பொறளை கனத்தை மயான த்தில் தகனம் செய்யப்படும்.

### தம்பிப்பிள்ளை இரத்தினசுந்தரம்

(ஓய்வுபெற்ற ஆணையாளர் நாயகம் இறை வரித் திணைக்களம்)



அரியாலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை இரத்தினசுந்தரம் கடந்த 8ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணியளவில் நடைபெற்று பின்னர் பூதவுடல் மு.ப 10.30மணியளவில் பொறளை இந்து மயானத்தில் தகனம் செய்ய ப்படும்.

### செல்லையா குஞ்சிதபாதம்

(இளைப்பாறிய ஆசிரியர் திருநெல்வேலி றோ.க.த.க. பாடசாலை)



நல்லூர் வடக்கு விநாயகர் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா குஞ்சிதபாதம் கடந்த 9ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று மு.ப 10மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு கூ சத்தமிட்டவர்களுக்கு மகிந்த பாராட்டாம்

குருநாகல் மலியதேவ பெண்கள் கல்லூரியில் நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அதிகார சபைக் கூட்டத்தின் போது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு எதிராக கூ கூ சத்தம் இட்டு தடையேற்படுத்தியவர்களுக்கு மகிந்த ராஜபக்ஷவின் பாராட்டுக்கள் கிடைத்துள்ளதாக கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சந்திரிகாவுக்கு எதிராக கூ சத்தம் இடும் நடவடிக்கைக்கு வடமேல் மாகாண முதலமைச்சர் தயாசிறி ஜயசேகரவே ஒருங்கிணைப்பாளராக செயற்பட்டுள்ளார். இதே விதமாக நாடு முழுவதும் சந்திரிகா கலந்து கொள்ளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டங்களில் அவருக்கு எதிராக கூ சத்தமிட்டு அவமதிக்கும் செயலை மகிந்த ராஜபக்ஷ குருநாகலில் ஆரம்பித்து வைத்துள்ளதுடன் அந்த நடவடிக்கைக்கு பச்சை கொடியை காட்டியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்டால், அங்கும் அவருக்கு எதிராக கூ சத்தம் இடும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதுடன் அதற்கு மகிந்த ராஜபக்ஷவின் ஆசியும் கிடைத்துள்ளது.

கட்சிக்குள் ஏற்பட்டுள்ள இந்த அதிகார போட்டி சம்பந்தமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் வெறுப்படைந்திருப்பதாகவும் இவர்களில் சிலர் நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் ஐக்கிய தேசிய க்கட்சியில் இணைவது குறித்து தற்போது பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அரசாங்கம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்துள்ள 19ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் தோல்வியடைந்தால், அன்றைய தினமே நாடாளுமன்றம் கலைக்கப்படஉள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி 19ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் நாடாளு மன்றத்தில் அனுமதிபெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட உள்ளதுடன் வாக்கெடுப்பு நடத்தப்படும் போது தோல்வியடைந்தால், அன்றைய தினமே நாடாளுமன்றத்தை கலைக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுக்க உள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும் மே மாதம் 5 ஆம் திகதி நாடாளுமன்றத்தை கலைப்பது என கட்சி தலைவர்களுக்கு இடையில் இணக்கம் ஏற்பட்டுள்ளது. (இ-5)




நன்றி:- மிரர்

தேசிய கீதம் தமிழில் பாடப்படுவதை எதிர்த்து

# வழக்கு தொடர்வதை வரவேற்கின்றேன்!

## மனோ கணேசன் தெரிவிப்பு

**தேசிய கீதத்தை தமிழில் பாட அனுமதியளித்த தேசிய நிறைவேற்று சபை உறுப்பினர்களுக்கு எதிராக வழக்கு தொடர போவதாக சிங்கள ராவய அமைப்பு தெரிவித்துள்ளதை தான் முழு மனதுடன் வரவேற்பதாக ஜனநாயக மக்கள் முன்னணி தலைவரும், தேசிய நிறைவேற்று சபை உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் மனோ கணேசன் மேலும் தெரிவிக்கையில்,

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடத்திய ஒரு ஊடகவியலாளர் மாநாட்டில் சிங்கள ராவய அமைப்பின் தேசிய அமைப்பாளர் சீலரத்ன தேரர், தேசிய கீதத்தை தமிழில் பாட அனுமதியளித் தமைககாக தேசிய நிறைவேற்று சபை உறுப்பினர்களை கண்டித்து அவர்களுக்கு எதிராக வழக்கு தொடர போவதாக அறிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பை கண்டு நான் பயந்துவிடவோ அல்லது கவலைபடவோ போவது இல்லை. உண்மையில் சிங்கள ராவய தேரர்களின் இந்த அறிவிப்பை நான் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றேன்.

இதன்மூலம் நம் நாட்டில் தமிழ் மொழியை தாய் மொழியாக கொண்டு பேசி வாழ்வோரது அந்தஸ்து என்ன என்பதை பற்றி உலகம் அறிந்து கொள்ள முடியும்.

உண்மையை வெளியே கொண்டு வர முயலும் சிங்கள ராவய அமைப்புக்கு இதற்காக நன்றி தெரிவித்துக் கொள்ளவே விரும்புகிறேன்.

உண்மையில் இந்த நாட்டில் தேசிய மொழிகள் எவை என்பது பற்றி இவர்களுக்கு தெளிவில்லை. உலகத்தில் பல நாடுகளில் தேசிய கீதம் பாடப்படும் முறைகள் பற்றியும் இவர்களுக்கு தெரியவில்லை. இதையிட்டுதான் நான் வருத்தமடைகிறேன்.

சிங்கள ராவய மற்றும் பொதுபல சேனா ஆகிய பிக்குகளின் தலைமையிலான அமைப்புகளுக்கு இடையில் யார் சிங்கள பௌத்தர்களின் தலைவர்கள் என்று பலத்த போட்டி நிலவுவது எனக்கு தெரியும். இதனால் தான் இவர்கள் இத்தகைய அரசியல் கருத்துகளை வெளியிடுகிறார்கள்.

இவர்களுக்கு போட்டியாக பொதுபல சேனா அமைப்பு என்னையும், தேசிய நிறைவேற்று சபையில் எனது நிலைப்பாட்டுக்கு இவ்விவகாரத்தில ஆதரவாக இருக்கின்ற ஏனைய உறுப்பினர்களையும் நாடுகடத்தவேண்டும் என்றும் சொல்லலாம என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# மகிந்த தேர்தல் பிரசாரத்துக்காக லொத்தர்சபையின் பணம் செலவீடு

2014ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் 2015 ஜனவரி வரையிலான மூன்று மாத காலப்பகுதியில் அதிகளவான செலவுகள் ஏற்பட்டமை தொடர்பில் தேசிய லொத்தர் சபையில் கணக்காய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சபையின் புதிய தலைவர் சியாமளா பெரேரா இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலுக்காகவே லொத்தர் சபையில் இருந்து அதிகளவான செலவுகள் ஏற்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

கிடைத்துள்ள முறைப்பாட்டின் படி ஜனாதிபதி தேர்தலின் போது லொத்தர் சபையின் 90 வீத விற்பனை மேம்படுத்தலுக்கான 400 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு அது தேர்தல் பணிகளுக்காக செலவிடப்பட்டுள்ளன.

பெரும்பாலும் இவை, இசைக்கச்சேரிகள், உணவு மற்றும் கார்ல்டன் ஸ்போட்ஸ் நெற்வேக்கின் விளையாட்டுப் போட்டிகள் என்பவற்றை நடத்த செலவழிக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில் குறித்த செலவுகள் தொடர்பில் அடுத்தவாரம் இலஞ்சம் மற்றும் ஊழல்களுக்கு எதிரான ஆணைக்குழுவில் முறையிடவுள்ளதாக லொத்தர் சபையின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# மக்களின் உதவியை நாடும் குற்றப் புலனாய்வுப் பிரிவு

சமந்த குமார எனப்படும் வெலே சுதாவுடன் தொடர்புடைய சொத் துக்கள் தொடர்பில் தகவல் அறிந்தவர்கள் குற்றப் புலனாய்வு பிரிவிறகு அறிவிக்குமாறு பொலிஸார் பொது மக்களிடம் வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

வெலே சுதா மற்றும் அவருடன் தொடர்புடைய வங்கிகணக்குகள்தொடரபாக தொடர்ந்து விசாரணைகள்மேற்கொள்ளப்பட்டு வருவதாக, பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதி பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

சமந்த எனப்படும் வெலே சுதா பாரிய போதைப்பொருள் வியாபாரம் தொடர்பாக முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ள நிலையில், அவருடன் தொடர்புடையதாக கூறப்படும் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் வங்கி கணக்குகளும் சோதனையிடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# இன, மத பேதமின்றி புதுவருடத்தை கொண்டாடுவதற்கு நல்ல சந்தர்ப்பம்

## பிரதமர் ரணில் வாழ்த்துச் செய்தி



இன, மத பேதமின்றி ஒரே இலங்கை மக்களாக புத்தாண்டை கொண்டாட சந்தர்ப்பம் கிடைத்துள்ளது எனவும் அழுத்தங்களும் அடக்குமுறை உணர்வுகளும் இல்லாது பண்டிகையை கொண்டாடும் சந்தர்ப்பம் பிறந்துள்ளதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் பிரதமர் இதனை கூறியுள்ளார்.

தமிழ், சிங்கள புத்தாண்டு இனங்களுக்கு இடையில் ஐக்கியத்தை உறுதிப்படுத்தி சமாதானத்தையும், மகிழ்ச்சியையும், சௌபாக்கியத்தையும் ஏற்படுத்த வேண்டும் என பிரார்த்திப்பதாக பிரதமர் தெரிவித்தார்.

தமிழ், சிங்கள புத்தாண்டு என்பது இலங்கை மக்களுக்கு மிகவும் முக்கியமான கலாசார பண்டிகையாகும் எனவும் ரணில் விக்கிரமசிங்க தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

ஸ்ரீலங்கன் விமான சேவை

# ஊழல் மோசடிகள் தொடர்பில் முன்னாள் தலைவர் விளக்கம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கன் விமான சேவையில் இடம்பெற்ற ஊழல்மோசடிகள்தொடரபிலான அறிக்கை குறித்து முன்னாள் தலைவர் நிசாந்த விக்ரமசிங்க அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர்மீதான குற்றச்சாட்டுக்கள முற்றிலும் மறுக்கப்பட்டுள்ளன.

அதாவது அவர் மாற்றுவழிகள் இருந்த போதிலும் 2.3 பில்லியன் ரூபா பெறுமதியான விமானங்களை அமெரிக்காவிலிருந்து கொள்வனவு செய்தார் என் குற்றம் சுமத்தப்பட்டது.

விமான சேவையில் காணப்பட்ட அனைத்து விமானங்களும் 12 முதல் 18 வருடங்கள் வரை பழைமையானவை எனும் காரணத்தினால் ஏனைய நிறுவனங்களுடன் போட்டியிடும் நோக்கில் புதிய விமானங்களை கொள்வனவு செய்ததாக முன்னாள் தலைவர் தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கு விளக்கமளித்துள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தனக்கு தனக்கென்றால்
சுளகு படக்குப் படக்கு என்னுமாம்
~ தமிழ் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நாட்டில் ஒற்றுமை ஏற்பட சமயத்திலும் சமத்துவம் தேவை

அஸ்கிரிய பீடாதிபதி வணக்கத்துக்குரிய உடுகம ஸ்ரீ புத்தரஹித்த தேரர் தேகவியோகம் அடைந்தார் என்ற செய்தியோடு இன்றைய தினம் அன்னாரின் இறுதி நிகழ்வுகள் நடப்பதற்கு ஏற்பாடாகியுள்ளன.

அதேநேரம் அவரின் மறைவையொட்டி இன்றைய நாள் தேசிய துக்க தினமாக அரசினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

மதத் தலைவர் ஒருவரின் மறைவுக்கு அரசு வழங்குகின்ற மரியாதையாக தேசிய துக்க தினத்தை கொள்ள முடியும் எனினும் அரசினால் அறிவிக்கப்பட்ட-அஸ்கிரிய பீடாதிபதியின் மறைவிற்கான தேசிய துக்கதினம் என்பதை பௌத்த மதமும் சிங்கள மக்களும் தவிர்ந்த, ஏனைய மதத்தவர்களும் இனத்தவர்களும் எப்படிப் பார்க்கிறார்கள் என்றறிவது அவசியம்.

அவ்வாறானதொரு பார்வையில் கடந்த காலத்தில் எங்கள் மதத்தலைவர்கள் மறைந்த போதெல்லாம், இப்படியானதொரு துக்கதின அறிவிப்புகள் அரசினால் விடப்படவில்லை. சமயத்தலைவர்கள் மதிக்கப்பட வேண்டும் என்றால் அது எல்லா மதங்களுக்கும் பொருந்துவதாக இருக்கவேண்டும்.

இதை விடுத்து அரசாள்பவர்கள் சார்ந்த சமயம் என்பதால் பௌத்த மதத்திற்கு விசேட ஏற்பாடுகள் என்ற நிலைமை இந்த நாட்டில் தொடர்வது அவ்வளவு நல்லதல்ல.

அஸ்கிரிய பீடாதிபதியின் மறைவுக்கு தேசிய துக்க தினம் அனுஷ்டிப்பது தேவையான ஒன்று என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. அதேநேரம் இந்த நாட்டில் பின்பற்றப்படுகின்ற ஏனைய மதங்களுக்கும் அவை சார்ந்த மதத் தலைவர்களுக்கும் உரிய மதிப்பு அளிக்கப்பட வேண்டும்.

அப்போதுதான் இலங்கை என்ற நாட்டில் நாம் அனைவரும் சமம் என்ற கருத்து நிலை ஏற்படுவதுடன் அஸ்கிரிய பீடாதிபதி வணக்கத்துக்குரிய உடுகம ஸ்ரீ புத்தரஹித்த தேரரின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் பொருட்டு இன்றைய நாளில் இலங்கை அரசு தேசிய துக்கதினமாக அறிவித் ததற்குள் இருக்கக்கூடிய தாற்பரியம் பிற சம யத்தவர்களாலும் உணரப்படும்.

தேசிய துக்கதினம் என்பது நாடு முழுமைக்குமானது. தேசிய துக்கதினத்தன்று தேசியக் கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படுவதுடன் நாட்டில் நடைபெற இருந்த அத்தனை நிகழ்வுகளும் இரத்துச் செய்யப்படும்.

எனவே, தேசிய துக்கதினம் என்பது நாட்டில் உள்ள சகல மக்களினதும் நாளாந்த நடவடிக்கையில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துவதாகும்.

ஆக, பௌத்த மதத்தலைவர் ஒருவரின் மறைவுக்காக அரசினால் அறிவிக்கப்பட்ட தேசிய துக்கதினம் என்பதை ஏனைய மதத்தலைவர்களும் அனுஷ்டிப்பதென்பதற்குள் இருக்கக்கூடிய ஒற்றுமை எல்லா சமயங்களையும் சமத்துவமாக நோக்குவதாகும்.

இல்லையேல் நாங்கள் அறிவித்தால் நீங்கள் அனுஷ்டித்துத்தான் ஆக வேண்டும் என்பதாக நிலைமை முடியும். இது சர்வாதிகாரமாகிவிடும். ஆகையால் மறைந்த அஸ்கிரிய பீடாதிபதிக்கான தேசிய துக்கதின அனுஷ்டிப்போடு எல்லா சமயங்களையும் சமத்துவமாக மதித்தல் என்ற உயரிய கொள்கையை அரசு பிரகடனப்படுத்தி அதனை நடைமுறைப்படுத்தும் போதுதான் அஸ்கிரிய பீடாதிபதிக்கு அரசு வழங்கும் தேசிய துக்கதினம் என்ற உயரிய இறுதி மரியாதை கௌரவம் பெறும்.

# மைத்திரி அரசில் நீதிபதிகளுக்கு பூரண சுதந்திரம் உண்டு - சஜித்

நல்லாட்சி அரசாங்கத்தின் வருகையால் தாம் வழங்கும் தீர்ப்புக்கள் குறித்து கலந்துரையாடுவதற்கு உயர்நீதிமன்ற நீதியரசர்கள் அலரி மாளிகைக்கு செல்வதில்லை என அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

தங்காலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத்தினால் நீதிமன்ற தீர்ப்புக்கள் சவால்களுக்கு உட்படுத்தப்படுவதில்லை என அவர் தெரிவித்ததோடு, தற்போதைய அரசாங்கம் நீதிபதிகளுக்கு கல் எறிவதோ, சேறு பூசுவதோ கிடையாது எனவும் குறிப்பிட்டார்.

மேலும் ஜனாதிபதி தலைமையிலான தற்போதைய அரசாங்கம் 19-வது திருத்த சட்டம் குறித்து உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை முழுமனதோடு ஏற்று கொண்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், கடந்த அரசாங்கத்தின் ஆட்சியில் திவிநெகும சட்ட மூலத்திற்கு பல நிபந்தனைகளை விதித்ததாக கூறி, முன்னாள் நீதியரசரின் தீர்ப்பை சவாலுக்கு உட்படுத்தி, அவரை வீட்டுக்கு அனுப்ப நாடாளுமன்றத்தை கங்காரு நீதிமன்றமாக மாற்றினர்.

தற்போது எந்தவொரு வழக்கு தொடர்பிலும் நீதிபதிகளுக்கு நாட்டின் எதிர்காலம் குறித்து சிந்தித்து சுயாதீனமான முடிவொன்றை எடுக்க முடியும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அத்துடன் மகிந்த அரசாங்கத்தை போல நீதிமன்றத்திற்கு தற்போதைய அரசாங்கம் ஒருபோதும் பாதிப்பை ஏற்படுத்துவதில்லை எனவும் அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். (செ-11)

## மாதாந்த உதவி நிகழ்வு இன்று

(கோண்டாவில்)

மக்கள் நலன் பேணும் அமைப்பினால் கல்விக்கான மாதாந்த உதவித்திட்ட நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை கோண்டாவில் சி.சி.த.க பாடசாலையில் மாலை 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் 35 மாணவர்களுக்கு மாதாந்தம் ஆயிரம் ரூபாய் வீதமும் ஒரு பாடசாலைக்கு மதிய உணவு வழங்கும் செயற்பாட்டை விரிவுபடுத்துவதற்கு ஆயிரம் ரூபாயும் வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## யாழில் மூன்று கடைகளில் பணம், பொருட்கள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் நேற்று அதிகாலை வேளை மூன்று கடைகள் உடைக்கப்பட்டு துணிகர திருட்டுச் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் சத்திரச் சந்தியில் உள்ள பான்சி கடை மற்றும் பலசரக்குக் கடைகள் இரண்டு ஆகியவற்றிலேயே மேற்படி திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

கடைகளின் பின்பக்க யன்னல் மற்றும் கூரைகளை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் 3 கடைகளிலும் சுமார் ஒரு லட் சத்து இருபதாயிரம் ரூபாய் பெறுமதியான பணம் மற்றும் பொருட்கள் பலவற்றை திருடியுள்ளதாக கூறப்படுகிறது.

இத்திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் யாழ்.வணிகர் கழகத்திலும் இத் திருட்டுச் சம்பவங்கள் குறித்து முறையிடப்பட்டுள்ளது.

மேற்படி திருட்டுச் சம்பவங்கள் குறித்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (செ-3)

## மனம்திறந்து ஓர் ஆறுதல் வார்த்தையாவது மற்றவர்களுக்கு கூறுவோமா?

## பரமபிதா காட்டிய பாதை

ம.பிரான்சிஸ்
கத்தோலிக்க சுதந்திரப் பத்திரிகையாளர்

இன்று உயிர்த்த இயேசு தம் சீடர்களுக்கு காட்சி கொடுத்த நிகழ்வை பைபிள் பகுதி எமக்கு தருகின்றது: யூதர்களுக்கு அஞ்சிச் சீடர்கள் தாங்கள் இருந்த இடத்தின் கதவுகளை மூடிவைத்திருந்தார்கள். அப்போது இயேசு அங்கு வந்து அவர்கள் நடுவில் நின்று, "உங்களுக்கு அமைதி உரித்தாகுக!" என்று வாழ்த்தினார்.

யூதர்களுக்கு மறைவாக சீடர்கள் தங்கியிருந்த அறை, இயேசுவோடு அவர்கள் கடைசி இரவு உணவு உண்ட அறையாக இருக்கலாம். அவர்கள் இருந்தது மேல் அறை. யூதர்களின் கோபம், வெறுப்பு முதலானவை சீடர்களுக்கு நன்றாகத்தெரியும். இயேசுவை ஒழித்துவிட்டார்கள். இனி எப்படியும், அடுத்த இலக்கு தாங்களதான் என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். எந்தநேரமும் தலைமைச் சங்ககாவலர்கள் வந்து தங்களை கைது செய்யலாம் என்று நினைத்தனர். எனவே, மேலறையிலிருந்து அவர்களுக்கு கேட்கும் ஒவ்வொரு சத்தமும், அவர்களின் இருதயத்தை கலங்கடித்துக்கொண்டிருந்தன. இவ் அனுபவத்தை நாம் நன்றாக புரிவதற்கு நம்நாட்டு நிலவரம் தொடர்ந்து நன்றாக பாடம் புகட்டிக்கொண்டே இருக்கிறது எனலாம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் தான் உயிர்த்த இயேசு அவர்களுக்குத் தோன்றுகிறார்.

உயிர்த்த இயேசு அவர்களுக்கு சொல்லும் செய்தி: உங்களுக்கு அமைதி உண்டாகுக!. கலங்கிப் போயிருந்த சீடர்களின் கலக்கத்தை இயேசு அறியாதவரல்லர். அவர்களின் வேதனையை இயேசு உணராதவரும் அல்லர். அவருக்கு சாவின் பயம் நன்றாகத்தெரியும். ஏனென்றால், சாவை எதிர்நோக்கியிருந்த அவரே, கெத்சமெனி தோட்டத்தில், திகிலும் மனக்கலக்கமும் அடைந்திருந்தார். 'எனது உள்ளம் சாவு வருமளவுக்கு ஆழ்துயரம் கொண்டுள்ளது' என்று அவரே சொல்லியிருக்கிறார். எனவே சீடர்களின் உணர்வு களைப்புரிந்து கொண்ட இயேசு, அவர்களுக்கு அந்த நேரத்தில் எது தேவையோ, அதை அறிந்து வார்த்தைகளில் வெளிப்படுத்துகிறார். கலங்கிப்போயிருக்கிற சீடர்களுக்கு அப்போதைய தேவை அமைதி. இயேசுவின் வார்த்தைகளைக் கேட்ட சீடர்களின் பயஉணர்வுகள் அகன்று போனது. அவர்கள் மகிழ்ச்சி கொண்டார்கள். உயிர்த்த இயேசு கலங்கிப்போயிருந்த சீடர்களுக்கு கலக்கத்தைப்போக்கி மகிழ்ச்சியைத் தருகிறார்.

இன்று தோமா இயேசுவைக் கண்டு அவரில் நம்பிக்கை கொண்ட நிகழ்ச்சியையும் நம் பார்க்கிறோம். இயேசு தம் சீடர்களுக்கு தோன்றியபோது தோமா அங்கே அவர்களோடு இல்லை. தோமாவிடம் மற்ற சீடர்கள் தாங்கள் இயேசுவைக் கண்டதாகக் கூறியபிறகும் அவர் நம்பமறுக்கிறார். தாமாகவே நேரடியாக இயேசுவைக் கண்டால்தான் நம்பமுடியும் என அவர் உறுதியாகக் கூறிவிடுகிறார். எட்டு நாட்களுக்குப் பிறகு இயேசு மீண்டும் ஒருமுறை சீடர்களுக்குத் தோன்றியபோது தோமாவும் கூட இருக்கிறார். இயேசு தோமாவை அழைக்கிறார். தம் அருகே வந்து தம்மைத் தொட்டுப்பார்க்கச் சொல்கிறார். ஐயம் தவிர்த்து நம்பிக்கை கொள்ளக் கேட்கிறார். இயேசுவை அணுகிச் சென்று, அவரைத் தொட்டுப் பார்க்கும் துணிச்சல் தோமாவுக்கு வரவில்லை. கலக்கம் அடைகிறார். ஆயினும் இயேசுவின் குரலைக் கேட்டதுமே அவருடைய உள்ளம் நெகிழ்ந்துவிட்டது. தம் தலைவரும் போதகருமான இயேசுவே தம் முன்னால் நிற்கிறார் என்னும் எண்ணம் தோமாவின் இதயத்தை நிரப்பிவிட தோமா இயேசுவைத் தம் 'ஆண்டவர்' என்றும் 'கடவுள்' என்றும் அறிக்கையிட்டு ஏற்றுக்கொண்டார்.

வாழ்வில் கலக்கம் வரும்போது, உயிர்த்த இயேசு நமக்கு தரும் அமைதி மிகப்பெரிய கொடை. விரக்தியடைந்த அன்பர் ஒருவர் நாம் மிக அண்மையில் வாழ்வில் கலக்கத்துடனும் அடுத்த கணம் என்ன செய்வது என்று தெரியாது இருளை நாடும் வௌவால்போல், இறைவனின் பிரசன்னம் என்ற ஒளியைத் தேடாமலே இருளிலிருந்து வெளி வர முடியாது ஆழ்துயரத்துடன் தற் கொலை செய்து விடலாமோ என்ற எண்ணத்திலிருந்தபோது அன்ரனி என்னும் நண்பர் தினமும் பலதடவை தொலைபேசியை எடுத்து கடவுள் உன்னை கைவிடமாட்டார் உன்னோடு இருப்பார் அவரது ஒளி உனக்கு வாழ்வுதரும் என்று சொலலிக் கொண்டே இருந்தாராம். அத்துடன் பல மாதக்கணக்காக தொடர்பில்லாத பல நண்பர்களுடனும் தொடர்பை ஏற்படுத்தி ஆறுதல் வார்த்தைகளை கூறிக்கொண்டிருந்தார்களாம். அந்த மாதிரியான தருணத்தில்தான் இயேசு நம்முடைய கவலைகளை, துயரங்களை அறிந்தவர், நம்மைக் கைவிடப் போவதில்லை. நம்முடைய கலக்கத்தைப போக்கி நமக்கு மகிழ்ச்சியை, மன அமைதியை தருவதற்காக காத்துக் கொண்டிருக்கிறார். மனிதர்கள் ஊடாக நமக்கு வழிகாட்டுவார் என்ற உணர்வை புரிந்துகொண்டு அப்போதே அந்த அமைதியை, மகிழ்ச்சியைப் பெற்றுக்கொண்டேன் என்று உண்மைக்குச் சாட்சி கூறியுள்ளார். இ வ்வாறு நீங்களும் இயேசுவின் பராமரிப்பை பலதடவை அனுபவித்திருப்பீர்கள். எனவே நமது மனக்கலக்கங்களையும் ஐயங் களையும், அச்சங்களையும் தீர்க்க, உயிர்த்த இயேசு நம்மை அழைக்கிறார். தன்னைத் தொட்டுப்பார்த்து, நாம் நம்பிக்கையில் உறுதிபெற வேண்டும் என்பதை அவர் விரும்புகிறார். உயிர்த்த ஆண்டவரில் நம் நம்பிக்கையை வைப்போம் என்று மற்றவர்களுக்கு ஆறுதல் வார்த்தையாவது கூறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழகம், நியூஸ்ரார்ஸ் வெற்றி



யாழ்.மாவட்ட ஹொக்கிச் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட ஹொக்கி அணிகளுக்கிடையில் நடைபெற்று வரும் ஹொக்கிச் சுற்றுப்போட்டியின் முதற்சுற்று ஆட்டங்களில், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணியும் நியூஸ்ரார்ஸ் அணியும் வெற்றிபெற்றன.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 10 அணிகள் பங்குபற்றும் ஹொக்கிச் சுற்றுப்போட்டியானது, சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மைத்தானங்களில் இடம்பெற்று வருகின்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற போட்டியொன்றில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியை எதிர்த்து மல்லாகம் நியூ வாரியர்ஸ் அணி மோதியது. முதல் பாதியாட்டத்தில் இரு அணிகளும் தலா 2 கோல்களைப் பெற்றன.

இரண்டாவது பாதியாட்டத்தில் பல்கலைக்கழக அணி 2 கோல்களைப் பெற்று வெற்றியை உறுதி செய்தது. பல்கலைக்கழக அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற போட்டியில் தெல்லிப்பழை மகாஜனன்ஸ் அணியும் யாழ்ப்பாணம் நியூஸ்ரார்ஸ் அணியும் மோதிக்கொண்டன. போட்டி ஆரம்பித்த நிமிடம் தொடக்கம் நியூஸ்ரார்ஸ் அணியின் ஆதிக்கம் மைதானத்தில் நிலைபெற அவ்வணி முதற்பாதியாட்டத்தில் 3 கோல்களை போட்டது. இரண்டாவது பாதியாட்டத்திலும் அதே உற்சாகத்துடன் ஆடிய நியூஸ்ரார்ஸ அணி, மேலும் 3 கோல்களைப் போட்டு, தமது வெற்றியை உறுதி செய்தது. நியூஸ்ரார்ஸ் அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது. இந்த வெற்றியின் மூலம் இரு அணிகளும் அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளன. (க)

# முர்ரே-கிம் சியர்ஸ்சுக்கு இன்று டும்...டும்...டும்



பிரிட்டன் நாட்டு டென்னிஸ் வீரரான ஆண்டி முர்ரே, தனது ஒன்பது ஆண்டு கால பெண் தோழியான கிம் சியர்சை திருமணம் செய்துகொள்ளப்போவதாக கடந்த நவம்பர் மாதம் அறிவித்தார்.

இதனால் பிரிட்டன் மக்கள் அனைவரும் மகிழ்ச்சியில் திளைத்தனர். குறிப்பாக ஸ்கொட்லாந்து டென்னிஸ் ரசிகர்கள் அளவற்ற மகிழ்ச்சியுடன் வாழ்த்து அட்டைகளையும், பூங்கொத்துகளையும் டன்பிளேனில் உள்ள முர்ரேவின் இல்லத்திற்கு அனுப்பி வைத்தனர். ரசிகர்கள் எதிர்பார்த்த மணநாளும் அறிவிக்கப்பட்டது.

அதன்படி காதல் புறாக்களின் திருமணம், இன்று நடைபெற உள்ள நிலையில் டன்பிளேன் விழாக்கோலம் பூண்டுள்ளது. இதற்காக மணமகள் கிம்முடன், முர்ரே நேற்று டன்பிளேனுக்கு வருகை தந்தார். மணமகள் கிம், கறுப்பு நிற ஜீன்ஸ் பேண்ட், லெதர் கோட், நீல நிற ஸ்கார்ப் அணிந்திருக்க, முர்ரேவோ எளிமையான ஜீன்ஸ் அணிந்து வந்தார். டன்பிளேனில் உள்ள கதீட்ரல் தேவாலயத்தில் முர்ரே-கிம் திருமண வைபவம் நடைபெறவுள்ளது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# விளையாட்டு மைதானத்துக்கு சிங்கத்துடன் வந்த ரசிகர்

பாலஸ்தீனத்தில் காற்பந்தாட்ட ரசிகர் ஒருவர் சிங்கக்குட்டியுடன் மைதானத்தில் அமர்ந்து விளையாட்டை ரசித்தது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியாவில் நடத்தப்படும் 'பிரிமயர் லீக்' விளையாட்டு போட்டிகளை போன்றே, பாலஸ்தீனத்திலும் விளையாட்டு போட்டிகள் நடத்தப்படடு வருகின்றன. குறிப்பாக அங்கு காற்பந்தாட்ட ரசிகர்கள் அதிகம் என்பதால், அடிக்கடி காற்பந்தாட்ட விளையாட்டு போட்டிகள் நடத்தப்படும். ஒவ்வொரு முறை யும் நிரம்பி வழியும் ரசிகர்களின் கூட்டத்தால், ஆட்டங்கள் களை கட்டும்.

இந்தநிலையில் கடந்த 3 ஆம் திகதி சாஹாபாப் ரபாப் அணிக் கும், எல்-சடாக்கா அணிக்கும் இடையே பரபரப்பான போட்டி நடந்து கொண்டிருந்தது. இருப்பினும் ரசிகர்கள் காற்பந்தாட்ட விளையாட்டினை ரசிக்காமல், காலரியில் நின்று கொண்டிருந்த சாத் அல்தீன் அல்-ஜமால் என்ற ரசிகரை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தனர். அதற்கு காரணம் அல்-ஜமால் தனது கையில் சிங்கக்குட்டியை வைத்துக் கொண்டு ஆட்டத்தை ரசித்தது தான்.

அலெக்ஸ் என்ற பெயரிடப்பட்ட அந்த சிங்கக்குட்டியை, அவ்வப்போது செல்லமாக அணைத்துக் கொண்டு ஆட்டத்தை கண்டுகளித்துக் கொண்டிருந்தார் அல்-ஜமால். இதற்கு ஒரு படிமேலாக அந்த சிங்கக்குட்டிக்கு தனது விருப்பமான காற்பந்தாட்ட அணியின் ஜெர்ஸியை அணிவித்து தன்னுடன் கொண்டு வந்திருந்தார்.

காற்பந்தாட்ட ரசிகரான அல்-ஜமால் தனது வீட்டில், அலெக்ஸ் மற்றும் மோனா என்ற இரண்டு சிங்கக்குட்டிகளை வளர்த்து வருகிறார். தெற்கு காசாவில் உள்ள ரபா என்ற நகரில் வசித்துவரும் அல்-ஜமால், அங்கிருக்கும் வன விலங்கு பூங்காவிலிருந்து இந்த இரு சிங்கக்குட்டிகளையும் தத்தெடுத்து வளர்த்து வருகிறார்.

அல்-ஜமாலின் குடும்ப உறுப்பினர்கள் போன்று பழகிவிட்ட இந்த சிங்கக்குட்டிகள், அல்-ஜமாலு டன் இணைந்து காற்பந்தும் விளையாடுகின்றன. குளிப்பது, உண்பது, உறங்குவது என அத்தனை அன்றாட நிகழ்வுகளையும் அல்-ஜமாலுடன் தான் அவை செலவிட்டு மகிழ்கின்றன. இது பற்றிய செய்திகள் வலைத்தளங்களில் பரவ, அல்-ஜமாலுக்கு பாராட்டுக்களும், குற்றச்சாட்டுகளும் குவிந்த வண்ணம் உள்ளன. (க)



# ஒலிம்பிக் போட்டியிலும் பதக்கம் வெல்வேன்

## சாய்னா நம்பிக்கை



இந்தியாவை சேர்ந்த முன்னணி பட்மின்டன் வீராங்கனை சாய்னா நேவால் அவர் சமீபத்தில் நம்பர்1 இடத்தை பெற்று சாதனை புரிந்தார். பின்னர் 2ஆவது இடத்துக்கு பின் தங்கினார். கடந்த 2 மாதத்தில் இரண்டு பட்டங்களை வென்ற சாய்னா 2016 ஆம் ஆண்டு ரியோடி ஜெனீரோவில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டியிலும் பதக்கம் வெல்வேன் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது,

தற்போது எனது ஆட்டம் மிகவும் நல்ல நிலையில் இருந்து வருகிறது. எனது அடுத்த இலக்கு 2016 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் வெல்வதை மிகவும் ஆவலுடன் எதிர்நோக்குகிறேன். என்னால் சிறப்பாக விளையாடி பதக்கம் வெல்ல முடியும்.

இவ்வாறு சாய்னா நேவால் கூறியுள்ளார்.

சாய்னாநேவால் 2012 ஆம் ஆண்டு லண்டனில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் ஒற்றையர் பிரிவில் வெண்கல பதக்கம் வென்று இருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

# நடுவரை அவமதித்த காற்பந்து வீரருக்கு போட்டியில் விளையாடத்தடை

பிரான்ஸ் நாட்டையும் நடுவரையும் அவமதித்த காரணத்திற்காக பாரீஸ் செயின்ட்-ஜெர்மைன் காற்பந்து கிளப் அணியின் வீரர் ஸ்லாடன் இப்ராகிமோவிக் 4 போட்டியில் விளையாடத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் 15ஆம் திகதி செயின்ட் ஜெர்மைன் அணி போர்ட்டி யாக்ஸ் அணியிடம் 2-3 என்ற கோல்கணக்கில் தோல்வியடைந்தது. இந்த போட்டியில் நடுவர் செயின்ட்-ஜெர்மைன் அணிக்கு எதிராக செயற்பட்டதாக இப்ராகிமோவிக் கடுமையாக விமர்சித்தார். மேலும், அவர் பிரான்ஸ் நாட்டையும் அவமரியாதையாக பேசியது அங்கிருந்த கமராவில் பதிவானது.

இதுபற்றி விசாரணை நடத்திய ஒழுங்கு நடவடிக்கை குழு, இப்ராகிமோவிக்கு தடை உத்தரவு செய்து பிறப்பித்தது. இந்த தடையால் அடுத்த வாரத்தில் நடைபெற இருக்கும் நைஸ், லில்லே, மெட்ஸ் மற்றும் நன்டேஸ் ஆகிய அணிகளுக்கு எதிரான போட்டியில் ஸ்லாடன் விளையாட மாட்டார். ஆனால், இந்த சீசனின் கடைசி 3 போட்டிகளுக்கு திரும்புவார்.

இப்ராகிமோவிக் தனது தவறுக்கு மன்னிப்பு கேட்க வேண்டும் என்று பிரான்ஸ் விளையாட்டுத் துறை அமைச்சர் கேட்டுக் கொண்டதன் பேரில் அவர் வருத்தம் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.(க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணிகளை...

ஏனைய பற்றைகள் நிறைந்த காணிகளை விடுவித்தமையினாலேயே மக்கள் ஏமாற்றமடைந்துள்ளனர்

உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள மக்களின் காணிகளில் ஆயிரம் ஏக்கர் காணிகள் விடுவிக்கபபடுவதாக புதிய அரசாங்கம் அறிவித்த அறிவிப்புக்கமைய முதற் கட்டமாக வளலாய் பகுதியில் 233 ஏக்கரும், வசாவிளான் பகுதியில் 197 ஏக்கரும் ஆக மொத்தம் 430 ஏக்கர் காணிகள் கடந்த மார்ச் மாதம் 24ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் கையளிக்கப்பட்டது.

இந்நிலையில் இரண்டாம் கட்டமாக வலி.வடக்கில் 590 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டு நேற்றைய தினம் அக்காணிகளை மக்கள் சென்று பார்வையிட முடியும் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நேற்று முன்தினம் அறிவித்திருந்தார். இதற்கமைய தமது காணிகளை இருபத்து நான்கு வருடங்களிற்கு பின்னர் பார்க்க போகின்றோம் என்ற ஆவலில் பெருமளவிலான மக்கள் தமது காணிகளை பார்க்க சென்றுள்ளனர்.

எனினும் விடுவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட காணிகளில் பெரும்பாலான காணிகள் ஏற்கெனவே மக்கள் வசிக்காத பற்றைகள் நிறைந்த காணிகள் எனவும் தமது வீடுகளை தற்போதும் ராணு[illegible] பிடித்து வைத்துள்ளது எனவும் அங்கு வந்த மக்கள் தெரிவித்தனர்.

மற்றும் விடுவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட கிராம சேவகர் பிரிவுகளில் முழுவதுமாக விடுவிக்கப்படாமல் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகளிலும் சீரான இடங்களை இராணுவம் பிடித்து வைத்துக்கொண்டு ஏனைய இடங்களையே மக்களிடம் இராணுவம் கையளித்துள்ளது.

தெல்லிப்பழை பிரதேச செயலகத்துக்குட்பட்ட காங்கேசன்துறை தெற்கு (ஜே - 235 கிராம அலுவலர்), பளை வீமன்காமம் வடக்கு (ஜே - 236 கிராம அலுவலர்), பளை வீமன்காமம் தெற்கு (ஜே - 237 கிராம அலுவலர்), கட்டுவன் (ஜே - 238 கிராம அலுவலர்), [illegible]ன்மயிலை (ஜே - 240 கிராம அலுவலர்), வறுத்தலைவிளான் (ஜே - 241 கிராம அலுவலர்), தையிட்டி தெற்கு (ஜே - 250 கிராம அலுவலர்), பலாலி தெற்கு (ஜே - 252 கிராம அலுவலர்) ஆகியவற்றின் காணிகளும் கோப்பாய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட வளலாய் (ஜே - 284 கிராம அலுவலர்) காணிகளும் விடுவிக்கப்பட்டு ள்ளன என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் அறிவித்திருந்தார்.

இக்கிராம பிரிவுகளைச்சேர்ந்த மக்கள் அனைவரும் தமது காணிகளை இருபத்து நான்கு வருடங்களுக்கு பின்னர் பார்வையிடுவதற்கு ஆர்வத்துடன் நேற்றுக் காலை ஒன்பது மணியளவிலேயே மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் பகுதியூடாகவும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை வீதியூடாகவும் சென்றனர். இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ள காணிகள் சிலவற்றில் ஏற்கெனவே மக்கள் குடியமராத காணிகள் எனவும் விடுவிக்கப்படுகின்ற காணிகளும் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகளிலும் முழுமையாக விடுவிக்கப்படாமல் துண்டு துண்டாகவே விடுவித்துள்ளனர், வளம் மிக்க காணிகளை இராணுவம் தொடர்ந்தும் பிடித்து வைத்துள்ளதாகவும் நேற்றைய தினம் அங்கு வந்திருந்த மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

விடுவிக்கப்பட்ட இடங்களில் உள்ள வீடுகளை இராணுவம் பயன்படுத்திவிட்டு அவற்றை விட்டு செல்லும் போது அவற்றை இடித்து தரைமட்டமாக்கிவிட்டு சென்றுள்ளது. மக்களது காணிகளில் இராணுவத்தினர் பயிற்சிக் கூடங்கள் மற்றும் விவசாயம் போன்ற வற்றினை செய்து வருகின்றமையும் அவதானிக்க முடிந்தது.

தமது காணிகளை விடுவிப்பதாக அறிவித்துவிட்டு ஏன் பின்னர் இவ்வாறு விடுகின்றனர் இல்லை என சினந்து கொண்ட மக்கள். இவ்வாறு பொய்கூறி எம்மை ஏமாற்ற புதிய அரசும் பழகிவிட்டது. எமது காணிகளை விடுவிக்காமல் எமது காணிகளையும் வீதிகளையும் பார்வையிடுவதற்காகவா அழைத்து வந்தனர் என மக்கள் கேள்வி எழுப்பியிருந்தனர்.

கண்முன்னே தமது வீடுகளை இராணுவம் பயிற்சி முகாமாகவும் அலுவலகங்களாகவும் பயன்படுத்தி வருவதனை பார்த்த மக்கள் விரக்தியுற்று இராணுவத்தோடு வாக்குவாதத்திலும் ஈடுபட்டிருந்தனர். தமது வீடுகள் கண்முன்னே இருக்கின்ற போதிலும் அங்கு எம்மால் செல்ல முடியவில்லையே என்ற ஏமாற்றத்தில் வீட்டினை மறித்து போடப்பட்டுள்ள முட்கம்பிகளை பிடித்துக்கொண்டு வெறித்து பார்த்து விட்டு ஏமாற்றத்துடன் திரும்பியதனையும் அவதானிக்க முடிந்தது. (செ-4)

## குடும்பப் பெண்...

பருத்தித்துறை வியாபாரிமூலையில் நேற்று முன்தினமிரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கரவெட்டி கரணவாய் மணியகாரன் தோட்டம்பாடசாலைவீதிபணக்கார வளவைச் சேர்ந்த சுதாகரன் கவிதா (வயது 4?) என்றபெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் திருமணம் முடித்த பிரஸ்தாப பெண் வியாபாரிமூலையில் தனது கணவனுடன் வசித்து வந்துள்ளார். இந்நிலையில் நேற்றுக்காலை வீட்டின் பின்புறத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கால்கள் இரண்டும் தரையில் முட்டியபடி கயிற்றில் தொங்கிய நிலையில் சடலம் காணப்பட்டுள்ளது. இதே வேளை பிரஸ்தாப பெண் யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூக நீரோட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவ இடத்திற்குச் சென்ற பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி த.சிவராஜா பிரேத பரிசோதனைக்காக சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு பணித்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-3,60)

## கிளிநொச்சியில்...

இதனால் இரணைமடு பொதுச் சந்தையினுள் அமைக்கப்பட்டிருந்த கடைத்தொகுதிகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டுள்ளதுடன் கடையினுள் வைக்கப்பட்டிருந்த பொருட்களும் சேதமடைந்தன.

மின்கம்பம் ஒன்று முறிந்து விழுந்ததால் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

பலத்த காற்றின் காரணமாக மரங்களின் கிளைகள் ஆங்காங்கே முறிந்து விழுந்தன.

இதனால் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்பட்டதையடுத்து வாகனங்கள் பயணம் மேற்கொள்ள முடியாமல் தரித்து நின்றன.

குறித்த பொதுச் சந்தையினுள் அடைக்கப்பட்டிருந்த இறைச்சிக் கடைகள், அழகு சாதனக்கடை இரண்டு,பாதணிக்கடை ஒன்று, தையல் கடை ஒன்று புடைவை வாணிபம் இரண்டு, உணவகம் ஒன்று ஆகிய கடைகளின் கூரைகள் முற்றாக தூக்கி வீசப்பட்டிருந்தன.

இது தொடர்பில் இரணைமடு பொதுச் சந்தை வர்த்தகர்கள் தெரிவிக்கையில்,

நேற்று பிற்பகல் திடீரென பலத்த மழை பெய்யத் தொடங்கியது. இதனையடுத்து காற்று வேகமாக வீச ஆரம்பித்தது.

கடையினுள் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த வேளை காற்றின் வேகத்தினால் அச்சமடைந்து வெளியே வந்தோம்.

கடைகளின் கூரைகள் காற்றின் வேகத்தினால் தூக்கி வீசப்பட்டன.

அத்துடன் கூரைகள் இன்றி கடைகள் காணப்படுகையால் கடையினுள் வைக்கப்பட்டிருந்த அனைத்து பொருட்களும் மழை நீரில் நனைந்து சேதமடைந்தன என் அவர்கள் தெரிவித்தனர்.

தகவல்அறிந்தகிளி.மின்சாரசபையினர் இச்சம்பவ இடத்திற்கு விரைந்து முறிந்த மின் கம்பத்தை சீர் செய்யும் பணியில் ஈடுபட்டனர்.

இரணைமடு பொதுச் சந்தையானது கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதி என்பது குறிப்பிடத்தக்கது. (செ-2,271)

## துப்பாக்கி...

கிளிநொச்சி - பரந்தன் கோரக்கன்கட்டு பூங்காவனம் சந்திப் பகுதியில் உள்ள தனியார் காணியொன்றில் நிலத்துக்குள் மறைத்து வைக்கப்பட்டி ருந்த நிலையில் 15 பெட்டி துப்பாக்கி ரவைகள், மற்றும் மிதிவெடி ஒன்று ஆகிய மீட்கப்பட்டுள்ளன.

குறித்த காணியை உழுது கொண்ட போதே இவ் வெடிப் பொருட்கள் இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் இராணுவத்தினருக்கு அறிவிக்கப்பட்டதனையடுத்த அங்கு வந்த இராணுவத்தினர் மற்றும் புலனாய்வு பிரிவினர் வெடிபொருட்களை பாதுகாப்பாக அகற்றிச் செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். (செ)

### ஹெயில் வாணவேடிக்கை

## றோயல் சலஞ்சர்ஸ் வெற்றி



ஹெயிலின் அதிரடியால் கொல்கத்தாவுக்கு எதிரான போட்டியில் றோயல் சலஞ்சர்ஸ் அணி வெற்றி பெற்றுள்ளது.

இந்தியன் பிரிமியர் லீக் 20 ஓவர் கிரிக்கெட் போட்டித் தொடரின் 8 ஆவது சீசன் 5ஆவது லீக் ஆட்டத்தில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு-கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதின. இதில் நாணயச்சுழற்சியில் வென்ற றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணியின் கப்டன் விராட் ஹோலி பந்து வீச்சை தேர்வு செய்தார். இதனை தொடர்ந்து களமிறங்கிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 177 ஓட்டங்களை எடுத்தது.

பின்னர் 178 ஓட்டங்களை என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய றோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணி 19 ஓவர்களில் 7 விக்கெட்டுகள் இழப்பிற்கு 179 ஓட்டங்கள் எடுத்தது.

துடுப்பாட்டத்தில் ஹெயில் 96 ஓட்டங்களைக் குவித்தார்.

முடிவில் 3 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணி வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்டநாயகனாக பெங்களூரு அணியின் ஹெயில் தெரிவானார். (க)

### சுப்பர் கிங்ஸ் வெற்றி



சென்னை 209/4 (20 ஓவர்கள்)
சன்ரைசர்ஸ் 164/6 (20 ஓவர்கள்)
ஆட்டநாயகன்: மக்கலம் (சென்னை)

## இன்று...

துக்க தினமாக அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ளது. இதே வேளை அவரது உடலிற்கு அரச மரியாதையுடன் இறுதிக் கிரியைகள் கண்டி பொலிஸ் மைதானத்தில் நடைபெறவுள்ளது. நாட்டிலுள்ள அனைத்து மதுபானசாலைகளையும் இன்றுமுதல் மூன்று நாட்களுக்கு மூடுமாறு கலால் திணைக்களம் உத்தரவிட்டுள்ளது.

எதிர்வரும் தமிழ்-சிங்கள புது வருட பண்டிகையை முன்னிட்டு 13 ஆம் 14 ஆம் திகதிகளிலும் அனைத்து மதுபானசாலைகளும் மூடப்பட வேண்டுமென கலால் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளரும் கலால் அத்தியட்சகருமான பிரபாத் ஜயவிக்ரம தெரிவித்துள்ளார். (செ-11)




விடுதலைப் பிரசவம் இன்னும் தாமதம் ஏனம்மா?...

அகதிவாழ்வில் கருவுற்ற பங்குனித் தாயே விடுதலைப் பிரசவம்
இன்னும் தாமதம் ஏனம்மா? - பங்குனித் தாயே

விடுதலைப் பிரசவம் டாக்டர் கூறுகின்றார்...

பிள்ளை தப்பினால் தாய்க்கு ஆபத்தாம் தாயைக் காப்பாற்ற
பிள்ளைக்கு ஆபத்தாம் - பங்குனித் தாயே

இச்செய்தி கேட்ட ஈசுர விநாயகன்...

தாயையும் காப்பாற்றி பிள்ளையையும் காப்பாற்ற

விக்னேஸ்வரன் வடிவம் தாங்கி வந்திருக்கின்றார்
-பங்குனித் தாயே

ஆளில்லாத காரணத்தால் நானே வருகின்றேன் என்று
கூறியருளியவர் யாரம்மா? - பங்குனித் தாயே
வல்வினை அறுக்கும் வல்லவன் பறாளாயில் பள்ளி கொண்டவன்
அவர்தான் ஈசுர விநாயகன் - பங்குனித் தாயே
நடப்பவை யாவும் நன்மையாக முடியும் என்று

வரும் மன்மதனிடம் சொல்லிச் சென்றுவாம்மா

- பங்குனித் தாயே

12.04.2015 (065) சோழியூரான் - [illegible]



17ம் நாளில் நன்றியுடன் நினைக்கின்றோம்

அன்புடன்
16 - 05 - 1931



பிரிவுடன்
28 - 03 - 2015

ம.அன்பு

(உரிமையாளர் சாள்ஸ் மீசாலை)

அன்பு எனும் மூன்றெழுத்தில் உருவாகி
அமைதி எனும் மூன்றெழுத்தை கடைப்பிடித்து
பிரிவு எனும் மூன்றெழுத்தில் எமைவிட்டு சென்றீர்

இருப்பினும் இறைவனின் திட்டம் அதுவெனில்
நித்திய வான்வீட்டில் நிம்மதியாக உறங்க
நித்தமும் இறைவனை
வேண்டி நிற்கின்றோம் தந்தையே!

சாள்ஸ்
பங்களா வீதி, மீசாலை.

(066)

குடும்பத்தினர்
0779591101
0777470832


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின்...

நிற்பதாக ஐக்கிய அமெரிக்கா தெரிவித்துள்ளது

தமிழ், சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள தமது வாழ்த்துச் செய்தியில் இராஜாங்க செயலாளர் ஜோன் கெரி இதனை குறிப்பிட்டுள்ளார்.

இந்த புதுவருடம், பிரதிநிதித்துவத்தை மாற்றி நல்லிணக்கம், சகிப்புத்தன்மை மற்றும் சமாதானத்துக்கான சந்தர்ப்பத்தை புதுப்பித்துள்ளது என்றும் கெரி தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் ஜனாதிபதி ஒபாமாவின் சார்பில், இலங்கை மக்களுக்கும், சர்வதேசத்தில் உள்ள புலம்பெயர் இலங்கை மக்களுக்கும் புதுவருட வாழ்த்து தெரிவிப்பதாக கெரி குறிப்பிட் டுள்ளார். (செ-11)

## யாராவது இலஞ்சம்...

நாம் கைப்பற்றினோம்.இலஞ்சம் வாங்கும் படலம் இத்துடன் நிறைவடையவுள்ளது.

எனவே இனி யாராவது இலஞ்சம் வாங்கினால் தயவு செய்து என்னிடம் கூறுங்கள் என முன்னாள் ஜனாதிபதி கோரிக்கை விடுத்துள்ளார். (செ-11)

## கடற்றொழிலுக்கு...

(வயது-68) என்ற 6 பிள்ளைகளின் தந்தையான முதியவரே நேற்றுக்காலை உயிரிழந்துள்ளார்.

நேற்று அதிகாலை 3 மணியளவில் பள்ளிக்குடாக் கடற்பகுதியை நோக்கி புறப்பட்ட குறித்த முதியவர் அங்கு கரைவலை இழுக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்த நிலையில் உடற் சோர்வு ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து ஓய்வுஎடுத்துக் கொண்டிருந்த நிலையில் கடலில் மயங்கி வீழ்ந்ததாகவும் கூறப்படுகின்றது. கடலில் மயக்கமடைந்த நிலையில் காலை 6 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக கொண்டுவரப்பட்டார்.

இருப்பினும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இவரது மரணம் தொடர்பாக யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

## 19ஐ இணைந்து...

சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இரகசிய பேச்சுவார்த்தை நடத்துவது குறித்து தெரியவந்துள்ளதை அடுத்தே ஜனாதிபதியும், பிரதமரும்மேற்படி தீர்மானத்தை விரைந்து எடுத்துள்ளனர்.

மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தரப்பில் இருந்து பிரச்சினைகள் தோற்றுவிக்கப்படுகின்றன. உள்ளக பிரச்சினைகள் அரசியல் முரண்பாடுகளில் தளம்பலான அரசியல் தலைமை என்பவை காரணமாகவே இந்த பிரச்சினைகள் தோற்றுவதாக அரசியல் அவதானிகள் கூறுகின்றனர். (செ-11)


நீங்கள் முடிஉதிர்வு, பொடுகு, அரிப்பு என்பவற்றால் அவதிப்படுகின்றீர்களா???

இப்பிரச்சினைகளிற்கு தீர்வாக இன்றே பாவியுங்கள் சிறந்த மூலிகைகள் அடங்கிய 'றோயல் அகஸ்தியா கூந்தல் எண்ணெய்

தலைக்கு குளிர்ச்சியினை அளித்து, தலைச் சருமத்திற்கு ஊட்டமளித்து, முடி உதிர்வைத் தடுத்து, கூந்தலை கருமையாகவும், நீளமாகவும், அடர்த்தியாகவும் வளரச் செய்து, முகத்திற்கு பொலிவை அளிக்கவல்லது.

இன்றே நாடுங்கள்!
சிவா நறுமணப் பூங்கா
இல. 288,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சத்திரச் சந்திக்கு அருகாமையில்)
தொ.பே. 021 222 2567

Quality Royal Akasthiya Hair Oil Guaranteed

(சி-631)

அனைத்துப் பாமசிகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

Manufactured by:- Royal Industries Colombo-13





வெளிநாடுகளுக்கான

தபால் பொதிகள் சேவை

- உள்நாட்டு, வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவை
- உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
- வெளிநாடுகளில் இருந்து பொதிகளை பெற்றுக்கொள்ளும் வசதி

Speed Lanka Express (Pvt) Ltd.

135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே - 0776217926, 021 2217180
www.speedlanka.net
(சி-629)



யாழ்ப்பாணத்தில் காண்டம் வாசிக்கப்படுகிறது

ஸ்ரீ கௌசிக அகஸ்திய நாடி சோதிட நிலையம் (PVT) LTD

P.ஜெய்சங்கர்

கொழும்பில் கடந்த 25 வருடங்களாக, கௌசிக அகஸ்திய முனிவர்களால் எழுதப்பட்ட ஏட்டுச் சுவடிகள் மூலம், தங்களின் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம், கல்வி, திருமணம், குழந்தைகள், தொழில் வாய்ப்புகள், வெளிநாட்டுப் பயணம் போன்றவற்றைக் கூறிப் புகழ்பெற்ற சோதிடர்களால், தற்போது யாழ்ப்பாணத்தில் பலருடைய வேண்டுகோளுக்கு இணங்கி கீழ்க்கண்ட முகவரியில் காண்டம் வாசிக்கப்படுகிறது.

தொடர்புகளுக்கு:-384, A, நாவலர் வீதி,
(கைலாச பிள்ளையார் கோயில் அருகில் நல்லூர்)
தொலைபேசி:-021 221 7944

கொழும்பு முகவரி:
19, 1/1, கொத்தலாவல மாவத்தை, பம்பலப்பிட்டி,
தொலைபேசி:-011 258 6180/011 258 6208
(054)



TCT MULTI TRADE CENTRE

ரிசிரி பல்பொருள் விற்பனை நிலையம்

மலரும் மன்மத வருடத்தினை முன்னிட்டு நாம் வழங்கும்
உங்கள் மனம் கவரும் வியாபார சலுகைகள்

Promotion

கோடை வெயிலில் உங்களை குளிர்விக்கும் வகையில்...

- சோடா வகைகளுக்கு விலை குறைப்பு
- Elephant Ice Cream வகைகளுக்கு 10% விலை குறைப்பு
- Smak Kist 1L குளிர்பான வகைகளுக்கு இலவச இணைப்புக்கள்
- Sunquick கோடியல் வகைகளுக்கு விலை குறைப்பு
- Short eats வகைகள்

புத்தாண்டை உங்கள் நண்பர்கள், உறவினர்களுடன் மகிழ்வுடன் கொண்டாடிட...

- Maliban luckyland, Little lion, Master, Diana பிஸ்கட் வகைகளுக்கு இலவச இணைப்புக்கள்

மற்றும்...

- Fortune, Tastyy, Turkey oil வகைகளுக்கு இலவச இணைப்புக்களும், விலை குறைப்புகளும்
- Wattawala, Ceylonta, Zesta Tea வகைகளுக்கு இலவச இணைப்புக்கள்
- Prima, Delmage Ruhunnu நூடில்ஸ் வகைகளுக்கு இலவச இணைப்புகளும், சோயா வகைகளுக்கும் இலவச இணைப்புக்கள்.
- Sunlight, Baby Cheramy soap, Dettol, Santoor Soap வகைகளுக்கு இலவச இணைப்புக்கள்

Baby Diaper வகைகளுக்கு இலவச இணைப்புகளும், Eva Sanitary வகைகளுக்கு விலைகுறைப்பும்

பான்சியகத்தில்

இறக்குமதி செய்யப்பட்ட பாதணிகளுக்கு 10 % விலைக்கழிவும் மின்விசிறி வகைகளுக்கு 1 வருடம் உத்தரவாதமும், 10% விலைக்கழிவும் தெரிவு செய்யப்பட்ட CFL மின்குமிழ்களுக்கு 1 வருட முதல் 3 வருடம் வரையிலான உத்தரவாதமும், 5 % முதல் 20 % வரையிலான விலைக்கழிவும்

TCT புடைவையகம்

புதுவருடத்தை குடும்பத்துடன் கொண்டாடி மகிழ குறைந்த விலையில் சிறுவர் முதல் பெரியோர்வரை அனைவரையும் கவரக்கூடிய இறக்குமதி செய்யப்பட்ட நவநாகரிக புடைவைகளுக்கு நாடவேண்டிய ஒரே இடம் TCT புடைவையகம். தெரிவு செய்யப்பட்ட ஆடைகளுக்கு விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும். இவை தவிர இன்னும் பல தரமான பொருட்களை மிக மலிவான விலையில் எங்கும் கிடைக்காத விலை நிர்ணயத்தில் இங்கு பெற்றுக் கொள்ள முடியும்.(கையிருப்பு உள்ளவரை மட்டுமே)

எங்களிடம் ஏற்கனவே 250 இற்கு மேற்பட்ட பொருட்கள் குறித்த விலையிலிருந்து விலை குறைப்பு செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது என்பதனை மீண்டும் நினைவூட்டுகின்றோம்.

வாடிக்கையாளர்களின் திருப்தியே எங்களின் திருப்தி.
அறப்பணியே முதல் பணி

ரிசிரி பல்பொருள் விற்பனை நிலையம்
527, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே.இல : 021-7451895
(C-641)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.04.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி
# சங்குநாதம்
Sankunatham
வள்ளுவர் ஆண்டு 2046 12.04.2015 தொலைபேசி : 021 222 3378
நாதம் 10



# ரணிலோடு மட்டுப்படும் கூட்டமைப்பின் சந்திப்பு




உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ரணிலோடு மட்டுப்படும் கூட்டமைப்பின் சந்திப்பு


குருஷேத்திரம்

எதிர்க்கட்சித் தலைமைப் பதவியைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வழங்க இன்னமும் ஆளும் வர்க்கம் தயாராகவில்லை.

தமிழர்களின் உரிமையை வழங்குவோம் என்று கூறிய வர்களால் எதிர்க்கட்சித் தலைமையைக்கூட வழங்க முடியவில்லை என்பதில் இருந்த சிங்கள ஆட்சியாளர்களின் நிலைப்பாடு என்ன என்பதைப் புரிந்து கொள்ளமுடியும்.

எதுவாயினும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது பதவிக்குரிய ஆளுமையை இன்னமும் வெளிக்காட்டவில்லை என்பதையே பாராளுமன்றத்தில் நடக்கும் சம்பவங்கள் காட்டி நிற்கின்றன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனக்கிருக்கின்ற அதிகாரங்களை உரிய முறையில் பிரயோகிக்கத் தவறும் பட்சத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்து நிற்பவர்க்ளும் தமது எதிர்ப்பு முறைமையை மாற்றி மகிந்த பக்கம் தாவுவதற்குச் சந்தர்ப்பம் உண்டு.

எனவே தேர்தல் காலங்களில் மகிந்தவை எதிர்த்து நின்று தனக்கு ஆதரவு வழங்கியவர்களைக் காப்பாற்றுகின்ற கடமையையாவது ஜனாதிபதி மைத்திரி அதிரடியாகச் செய்தாக வேண்டும்.

இவை ஒருபுறம் இருக்க, 19 ஆவது திருத்தச் சட்ட மூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னதாகவே பிரதமருக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டு விட்டதான ஒரு தோற்றப்பாடு தெரிவதைக் காண முடியும்.

அதிலும் வடபகுதியின் அனைத்து நிர்வாகத்திற்கும் தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே பொறுப்பு என்பது போல நிலைமையுள்ளது.

அதனை உறுதிப்படுத்துவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஜனாதிபதி மைத்திரியைச் சந்திப்பதைத் தவிர்த்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து வருவதைக் காணமுடிகின்றது.

பொதுவில் ஜனாதிபதியைச் சந்திப்பதன் ஊடாகப் பிரச்சினைகளைத் தீர்த்து வருகின்ற நடைமுறை இருந்த போதிலும் இப்போது அத்தகையதொரு நிலைப்பாடு இருப்பதாகத் தெரியவில்லை.

தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் சந்திப்பை மேற்கொண்டு வரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முன்னாள் பிரதமர் டி.எம்.ஜயரத்னவுடன் எந்தச் சந்தர்ப்பத்திலாவது சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதான பதிவுகள் இருப்பதாகத் தெரியவில்லை.

அப்படியானால் முன்னாள் பிரதமர் டி.எம்.ஜயரத்னவுக்கும் தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்குமிடையில் அதிகார மாற்றங்கள் ஏதேனும் நடந்தனவா? என்ற கேள்வி எழும்.





இந்தக் கேள்விக்குப் பதில் எதுவுமில்லை என்பதாக இருக்கும்போது, தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு பிரதமர் ரணிலை முதன்மைப்படுத்தி அவரைச் சந்திப்பதிலும் அவரோடு மட்டும் பிரச்சினைகளைக் கதைப்பதிலும் ஈடுபட்டுள்ளமை எதற்கானது என்ற வினா ஆனபதில் இன்றி தொக்கி நிற்கிறது.

தமிழ்மக்களின் ஆதரவு என்பது மைத்திரிக்கானது. ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்து அவரை ஜனாதிபதியாக்கிவிட்டு, பிரதமர் ரணிலோடு மட்டும் சந்திப்பை மட்டுப்படுத்திக் கொள்வதன்மூலம் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு எதனைச் சாதிக்க நினைக்கிறது என்பது புரியாமலேயுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சந்திப்பது தவறு என்பது நம் கருத்தன்று. மாறாக பிரதமர் ரணிலைச் சந்திக்கும் அதே வேளை ஜனாதிபதி மைத்திரியையும் சந்திப்பது நல்லது என்பதுடன் இஃது அரசியல் சந்திப்பில் ஒரு சமத்துவத்தை ஏற்படுத்துவதாகவும் இருக்கும் என்பதே நம் தாழ்மையான முன்மொழிவு.

### பிரதமருடனான சந்திப்பு முரண்பாட்டைத் தரும்

ஜனாதிபதி மைத்திரியைச் சந்திக்காமல் பிரதமர் ரணிலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் சந்திப்பை நடத்திக் கொள்வதில் இருந்து ஒரு முக்கியமான முடிவுக்கு நாம் வரமுடியும். அதாவது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்திப்பதை பிரதமர் ரணில் விரும்பவில்லை என்பதே அதுவாகும்.

கூட்டமைப்பும் ஜனாதிபதியும் சந்திக்கும்போது ஜனாதிபதி மைத்திரி கூட்டமைப்பிடம் சில வாக்குறுதிகளை வழங்கிவிட்டால் நிலைமை மோசமாகிவிடும்.

எனவே ஜனாதிபதி மைத்திரிபாலவுடனான சந்திப்பைத் தடுத்து தமிழ்த் தேசியக்கூட்டமைப்புடன் தானே சந்தித்துக் கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாட்டில் ரணில் உள்ளார் என்ற முடிவுக்கு நாம் வரமுடியும்.

பிரதமர் ரணிலின் இத்தகையதொரு உள்நோக்கத்தைப் புரிந்துகொள்ளாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது சந்திப்பை அவரோடு மட்டுப்படுத்திக் கொள்வதால் கூட்டமைப்பு உள்ளக முரண்பாட்டை எதிர் கொள்ளும் சூழ்நிலைக்கு ஆட்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

அதாவது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுடன் முரண்பாட்டைத் தோற்றுவித்துள்ளார். முதல்வர் விக்னேஸ்வரனுடன் சந்திக்கமாட்டேன் என்ற கோபாவேசத்தோடு முதல்வர் விக்கி பொய் சொல்கிறார் என்பது வரையான ரணிலின் கடுப்பான வார்த்தைகள் வடக்கின் முதல்வருடனான பிரதமரின் உறவை முறித்துவிட்டது.

பிரதமர் ரணில் ஏன்? இப்படி நடந்து கொண்டார் என்பது புரியாத விடமாயினும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பை பிரிக்கவே ரணில் முயற்சி செய்கிறார் என்ற முதல்வர் விக்கியின் கருத்து ரணில் தொடர்பான தமிழ் மக்களின் எண்ணக்கருவில் எதிர்த்தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதென்றே கூறவேண்டும்.

நிலைமை இதுவாக இருக்கையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை மட்டும் அடிக்கடி சந்தித்துக் கொள்ளும் போது, முதல்வர் விக்னேஸ்வரனை கூட்டமைப்பு ஓரங்கட்டுகிறது என்ற கருத்து நிலை உருவாகும்.

அதேநேரம் ரணில்- கூட்டமைப்பு என்ற சந்திப்பில் முதல்வர் விக்கியின் பங்குபற்றுதலுக்கான வாய்ப்பு அறவே இல்லாமல் போகிறது.

இந்நிலையில் வடக்கு மாகாண அரசு எதிர்கொள்ளும் பிரச்சினைகளை முதலமைச்சர் யாரிடம் முறையிடுவது என்ற கேள்வி எழுவது நியாயமானதே.

எனவே, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பிரதமர் ரணிலுடன் நடத்திக்கொள்ளும் ஒவ்வொரு சந்திப்பும் கூட்டமைப்பும் . முதல்வர் விக்னேஸ்வரனும் முரண்படுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தும் என்பது உணரப்பட வேண்டும்.

பிரதமர் ரணிலைச் சந்திப்பது தவிர்க்க முடியாதது என்றொரு நிலைப்பாட்டை கூட்டமைப்பு கொண்டிருக்குமாயின் அவர்கள் செய்யவேண்டிய முதல் வேலை பிரதமர் ரணிலையும் முதல்வர் விக்கியையும் ஒற்றுமைப்படுத்தி சந்திப்பில் இருவரும் பங்குபற்றும் சூழ்நிலையைத் தோற்றுவிப்பதாகும்.

இதைவிடுத்து பிரதமர் ரணிலுடன் கூட்டமைப்பு தனித்து சந்திக்குமாயின் இலங்கை அரசு தொடர்பில் முதல்வர் விக்கியின் கருத்து நிலை எதிரானதாகவே இருக்கும்.

தன்னைச் சந்திக்கவரும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடம் இலங்கை அரசு பற்றி அவர் மாறுபாடான கருத்தை வெளியிடுவார். இந்நிலைமை அரசுடன் இணங்கிப்போதல் என்ற கூட்டமைப்பின் கொள்கைக்குக் குந்தகமாக அமையும் என்பது நிறுதிட்டமான உண்மை.

விதுரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வாத்தியார்:** எங்கட காலத்தில இப்படியொரு இடமாற்றப் பிரச்சினையே இருக்கவில்லை. மலையகத்தில முதலாவது நியமனம் பிற்காலத்தில யாழ்ப்பாணத்தில சேவையாற்றுகிற சந்தர்ப்பம். எங்கட சேவையை மலையகப் பகுதி மக்கள் இன்றைக்கும் போற்றுகினம்.

யாழ்ப்பாணத்து வாத்திமார் படிப்பிச்சுத் கொடுத்ததாலதான் நாங்கள் இன்றைக்கு நல்லா இருக்கிறம் என்று அந்தப் பிள்ளையள் சொல்லுறதக் கேட்கிறதில இருக்கிற ஆத்மதிருப்தி இருக்கிறதே அதுதான் ஆசிரியத் தொழிலின் மகத்துவத்தை இன்றைக்கும் பாதுகாக்குது.

**விதானையார்:** அதுசரி வாத்தியார் ஆசிரிய இடமாற்றம் இன்னமும் முடியலையோ?

**வாத்தியார்:** இது பாருங்கோ முடிகிற பிரச்சினையில்லை மூக்கு இருக்கும் வரை... ஏதோ இருக்கும் என்பார்கள் அதுபோலத்தான் ஆசிரிய இடமாற்றப் பிரச்சினையும்.

**பண்டிதர்:** ஒரு அமைச்சின்ர செயலாளின்ர மனைவி ஆசிரியராக இருக்கிறாராம். அவருக்கு இடமாற்றம் வழங்கவில்லையென்று ஒரு ஆசிரியர் சங்கம் கடுப்பாநிற்கிறதாகக் கேள்வி. அதென்ன வாத்தியார் சங்கதி.

**வாத்தியார்:** பண்டிதர் இந்த குறை அளப்புகளாலதான் எங்கடஇனத்தின்ர முன்னேற்றம் தடைப்படுகுது. ஒரு அமைச்சின்ர செயலாளரின் மனைவி ஆசிரியராக இருக்கிற போது அவருக்கும் இடமாற்றம் கொடுக்கவேணும் என்று கேட்கிறது மனச்சாட்சிக்கு விரோதமான காரியம் பாருங்கோ. சட்டத்தில இடம் இருந்தாலும் எழுதாத யாப்பு ஒன்று இருக்கிறத நாங்கள் மறக்கக்கூடாது.

**மூப்பர்:** என்ன வாத்தியார் எழுதாத யாப்போ. அதென்ன பொருள்.

**வாத்தியார்:** எழுதாத யாப்பு என்பது மனச்சாட்சியைத்தான் குறிக்கும். ஒரு அமைச்சின் செயலாளர் என்றால் அவருக்கு ஏகப்பட்ட பொறுப்புகளும் பணிகளும் இருக்கும். திடீரென்று கொழும்புக்கு வரச்சொல்லிக் கூப்பிடுவார்கள். ஏன்? சிலவேளை வெளிநாட்டிற்கும் செல்ல வேண்டியிருக்கும்.

இதுக்கு மேலாக நாளாந்தம் நடக்கிற கூட்டங்கள், ஆளுநரின்ர அழைப்புகள் இப்படி ஏகப்பட்ட வேலைகள் இருக்கும். இந்நிலையில செயலாளராக இருக்கிறவற்ற மனைவி ஆசிரியர் என்றால் அவருக்கும் இடமாற்றம் கொடுக்கவேணும் என்று கேட்கிறது அவ்வளவு நல்லதல்ல.

நிலைமைகளுக்கேற்ப தொழிற்சங்கங்கள் தீர்மானம் எடுக்கவேணும். இதை விடுத்து செயலாளற்ற மனைவி ஆசிரியர். ஆகையால் அவருக்கு இடமாற்றம் வழங்கப்படவில்லை எனக் கோசம் போடுறதெல்லாம் எங்களிட்ட ஒரு மனச்சாட்சி இல்லை என்பதைத்தான் காட்டும்.

**விதானையார்:** வாத்தியார் சொல்லுறதிலும் நியாயம் இருக்கத்தான் செய்யுது. ஆசிரியர் தொழிற்சங்கத்தில இருக்கிற முக்கியஸ்தர்கள் கூட்டங்களில கலந்து கொள்ளும் பொருட்டு அவர்களுக்கு விசேடலீவுகள் இருக்குது. இதையறியாமல் பொது மக்கள் இந்த ஆசிரியர் எப்ப பார்த்தாலும் கூட்டம் என்கிறார். பிள்ளையளுக்குப் படிப்பிப்பதேயில்லையென்று கூறலாமோ! எதையும் தீரவிசாரித்து அறிய வேணும். செயலாளர் மட்டுமல்ல பொறுப்பான உயர் பதவிகளில் இருக்கிறவர்களுடைய வேலைப்பளுக்கள் அதிகம் என்பதாலும் அவர்களின்ர குடும்பங்களும் கவனிக்கப்படவேண்டும் என்ற அடிப்படையில், எழுதப்படாத யாப்புகளைப் பயன்படுத்துவது நல்லது என்ற தீர்மானத்தை இந்த மாநாடு இன்றைக்கு நிறைவேற்றுகிறது.

(இப்படி விதானையார் விசுவலிங்கம் அறிவிக்க, அந்த நேரம் பார்த்துக் கங்காணி கார்த்திகேசன் வேர்க்க விறுவிறுக்க மாநாட்டிற்கு வருகிறார்)



## கிணற்று நீரில் கலந்த கழிவு ஓயிலும் அரசியலும்

**மூப்பர்:** கங்காணியாரைச் சில நாளாகக் காணவில்லை. எங்கயும் தூரப் பயணம் போனதோ?

**கங்காணி:** சீ...சீ... எங்கட அளவெட்டி கும்பிளாவளைப் பிள்ளையார் கோயில் கும்பாபிஷேகமல்லோ! அதுதான் அங்கபோனனான்.

**பண்டிதர்:** அளவெட்டிக் கும்பிளாவளைப்பிள்ளையார் பெருமை வாய்ந்த கோயில். எப்படிக் கும்பாபிஷேகம் சிறப்பாக நடந்ததோ?

**கங்காணி:** கும்பாபிஷேகம் சிறப்பாக நடந்தது. ஆனால் கும்பாபிஷேகக் கிரியைகள் நடந்து கொண்டிருந்தபோது இடம்பெற்ற சம்பவங்கள் தான் மனதுக்கு வேதனை தருகிறது.

**விதானையார்:** ஏன், என்ன நடந்தது?

**கங்காணி:** கும்பாபிஷேகக் கிரியைகள் ஆரம்பமாகும் போதே குழப்பம் ஏற்படத் தொடங்கிற்று. எங்க கும்பாபிஷேகம் தடைப்பட்டுப் போயிடுமோ என்று பயந்து கொண்டிருந்தனாங்கள். எனினும் பிரதியமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கோயிலுக்கு வந்து பிரச்சினையை ஒரு மாதிரியாகத் தீர்த்து வைத்தார்.

**வாத்தியார்:** எங்கட கூட்டமைப்புக்காரர் ஒருத்தரும் வரவில்லையோ?

**கங்காணி:** அவையள் இதுக்கெல்லாம் வராயினம்.

**பண்டிதர்:** எங்கட சமயத்தில இதுதானே இருக்கிற பெரிய பிரச்சினை. கும்பாபிஷேகம் செய்யிறது பிள்ளையாருக்கென்றோ அல்லது கடவுளுக்கென்றோ கனபேர் நினைக்கிறதில்லை. ஏதோ! தங்கட கெட்டித்தனத்தில கும்பாபிஷேகம் நடப்பதான நினைப்பு. இந்த நினைப்பு வந்தால் பிறகென்ன எல்லாம் குழப்பம்தானே! முதலில் கடவுள் என்ற எண்ணத்தோட ஆலயப் பணிகள் இருக்க வேணும். அப்பதான் கோயில்கள் சுமுகமாக இயங்கும். இந்த எண்ணம் இப்ப யாரிட்ட இருக்குது.

**மூப்பர்:** கங்காணி சொல்லத்தான் எனக்கும் ஞாபகம் வருகுது. புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவைப் பிள்ளையார் கோயிலிலும் இப்படியொரு பிரச்சினை நடந்தது.

**பண்டிதர்:** என்ர பிள்ளையாரே, ஒரு காலத்தில இந்து ஆலயங்கள் மக்களிட்ட ஏற்பட்ட பிணக்குகளைத் தீர்த்துவைத்தன. கர்ப்பூரம் அணைத்துச் சத்தியம் செய்யிற தீர்ப்பு முறைதானே எங்கட சனங்களை ஒற்றுமைப்படுத்தியது. ஆனா இப்ப ஆலயங்களில பிணக்கு. இதால நீதிமன்றம் வரை ஆலயங்களை இழுத்துச் செல்லும் பரிதாபம்.

**மூப்பர்:** ஏன் பண்டிதர் இந்து ஆலயங்களில ஏற்படுகின்ற பிணக்குகளைத் தீர்ப்பதற்கென்று ஒரு பஞ்சாயத்துச் சபை மாதிரி ஒன்றை உருவாக்க முடியாதோ!

**பண்டிதர்:** ஏன் முடியாது? பஞ்சாயத்துச்சபை கூறுகிற தீர்ப்பை ஏற்றுக் கொள்ள வேணுமே. அப்படி ஏற்றுக் கொள்கிற நடைமுறைக்கு எல்லோரும் வந்தால் ஆலயங்களில் ஏற்படுகிற பிணக்குகளை உடனுக்குடன் தீர்க்க முடியும். ஆனா ஆரு பூனைக்கு மணிகட்டுறது என்ற பிரச்சினை.

ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டுகிற இந்தக் காலத்தில பஞ்சாயம் வழங்குகிற தீர்ப்பையும் ஊழல் என்று ஒரு தரப்புச் சொல்லியே ஆகும். அதால வேண்டாம் ராசா என்று நினைக்கினம்.

**விதானையார்:** அதுசரி பண்டிதர் எங்கட சுன்னாகத்துக் கிணற்றுநீரில கழிவு ஒயில் என்ற பிரச்சினை. என்னமாதிரிப் போச்சுது.

**பண்டிதர்:** அதையேன் கேட்கிறியள் கழிவு ஒயில விட மோசமான கழிவு அரசியல் தண்ணியில கலந்து படுத்தாப்பாடு. கழிவு ஒயிலப் பிரித்தெடுக்கிற தொழில் நுட்பம் ஜப்பானில இருக்காம். ஆனா கழிவு அரசியலைப் பிரித்தெடுக்கிற தொழில் நுட்பத்தை ஒரு நாடும் கொண்டிராததால தான் தண்ணிப்பிரச்சினை படாப்பாடுபடுகுது.

**மூப்பர்:** சரி பண்டிதர். தண்ணியில கலந்த ஒயிலால ஆபத்து இல்லையாமே!

**பண்டிதர்:** இதொரு நாசமறுந்தகதை. சனத்துக்குத் தண்ணியில கலந்த ஒயில்தான் பிரச்சினையல்லாது ஒயிலில இருக்கிற நைதரேற் பிரச்சினையே இல்லை.

சனத்துக்கு ஒயில் பிரச்சினை. நிபுணர்குழுவுக்கு நைதரேற் பிரச்சினை. ஆக, வரப்போகும் பொதுத்தேர்தலிலும் சுன்னாகத்துக் கிணற்றுத் தண்ணிதான் பீரங்கிப் பிரசாரமாக இருக்கும்.

(இப்படிப் பண்டிதர் சொல்ல அதை ஆமோதிப்பது போல பிள்ளையார் கோயில் மணியும் ஒலிக்க மாநாடு கலைந்தது.)

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்




சித்தனூரில் இனிப்புக் கடை ஒன்று இருந்தது. சிறுவர்கள் அந்தக் கடையில் இனிப்பு வாங்கிச் சாப்பிடுவர். அந்தக் கடைக்கார கிழவனுக்கு சிறுவர்களைக் கண்டால் பிடிக்காது. அவர்கள் மீது எரிந்து விழுவான். அவர்களால் ஏதேனும் வேலை ஆக வேண்டியிருந்தால் அவர்களை அழைப்பான்.

இந்த வேலையை முடியுங்கள்; இனிப்பு தருகிறேன் என்பான். அவர்கள் அதைச் செய்து முடித்ததும் இனிப்பு தர மாட்டான். மாறாக அவர்களை விரட்டிவிடுவான். இதனால் சிறுவர்களுக்கு அவனைக் கண்டாலே பிடிக்காது. நண்பகல் நேரத்தில் கடைக்குள் படுத்துத் தூங்குவான். சிறுவனாக இருந்த அவன் மகன், அப்போதுதான் கடையைப் பார்த்துக் கொள்வான். ஒருமுறை அந்தக் கடைக்காரன் மண்பாண்டம் செய்பவர்களிடம் சென்றான்.

பலகாரங்கள் வைப்பதற்காக வாய் அகன்ற பானைகள் முப்பது செய்ய வேண்டும். எப்போது செய்து தருவீர்கள்? என்று கேட்டான். ஒரு வாரத்தில் தயாராகிவிடும் என்றனர்.

குறிப்பிட்ட நாள் வந்தது. அந்தப் பானைகளைக் கடைக்குள் எடுத்துவர வேண்டுமே. என்ன செய்வது என்று சிந்தித்தான் கடைக்காரன். வழக்கம் போலச் சிறுவர்களை ஏமாற்றுவோம் என்று நினைத்தான்.

சிறுவர்களை அழைத்த அவன், மண்பாண்டம் செய்பவர்களிடம் முப்பது பானைகள் உள்ளன. அவற்றைக் கவனமாக எடுத்து வரவேண்டும். எடுத்து வருகிறீர்களா? என்று கேட்டான்.

அப்படி நாங்கள் எடுத்து வந்தால் எல்லோருக்கும் நிறைய இனிப்பு தருவீர்களா? என்று கேட்டான் அவர்களில் ஒருவன். கொண்டு வாருங்கள். பிறகு பார்க்கலாம் என்றான் கடைக்காரன்.

நிறைய இனிப்பு கிடைக்கப்போகிறது என்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர் சிறுவர்கள்.

ஒவ்வொரு பானையாக அவர்கள் கடைக்குக்கொண்டு வந்தனர். எல்லாப் பானைகளும் வந்து சேர்ந்தன.

எங்களுக்குத் தருவதாகச் சொன்ன இனிப்பைத் தாருங்கள். நாங்கள் சாப்பிட்டுக் கொண்டே செல்கிறோம் என்றனர் சிறுவர்கள்.

நான் எப்போது உங்களுக்கு இனிப்பு தருவதாகச் சொன்னேன்? நீங்கள் கேட்டதற்கு கொண்டு வாருங்கள். பிறகு பார்க்கலாம் என்றுதானே சொன்னேன். இப்போதும் அதையேதான் சொல்கிறேன். பிறகு பார்க்கலாம் என்று அவர்களை விரட்டினான் கடைக்காரன்.

தாங்கள் ஏமாந்துவிட்டதை எண்ணிப் புலம்பியபடியே அங்கிருந்து சென்றனர் சிறுவர்கள். இந்த வழியாக வந்த கோபால், ஏன் அழுது கொண்டே செல்கிறீர்கள்? என்று கேட்டார்.

கோபால் மாமா! அந்த இனிப்புக் கடைக்காரர் எங்களை ஏமாற்றிவிட்டார், என்று நடந்ததை எல்லாம் சிறுவர்கள் கூறினர்.

கவலை வேண்டாம்! உங்களுக்குக் கிடைக்க வேண்டிய இனிப்பிற்கு அதிகமாகவே கொண்டு வருகிறேன். நீங்கள் யாரும் அந்தக் கடைக்குள் வரக்கூடாது. வெளியே நில்லுங்கள் என்ற கோபால் கடைக்குள் நுழைந்தார். அப்போது கடைக்காரனின் மகன்தான் கடையைக் கவனித்துக்கொண்டிருந்தான். உள்ளே இருந்த அறைக்குள் கடைக்காரன் தூங்கிக் கொண்டிருந்தான். இவனை எளிதாக ஏமாற்றலாம் என்று நினைத்த கோபால் இனிப்புப் பாத்திரத்திற்குள் கையை விட்டான். இனிப்புகளை எடுத்துச் சாப்பிட்டான். இதைப் பார்த்த சிறுவன், என்ன இனிப்பை எடுத்து சாப்பிடுகிறாய்? பணம் தராமல் எதையும் தொடக்கூடாது என்று கத்தினான்.

தம்பி! உன் தந்தைக்கு என்னை நன்றாகத் தெரியும். நான் இப்படி இனிப்பை சாப்பிடுவதை அவர் பொருட்படுத்தமாட்டார். என் பெயர் எறும்பு. நீ வேண்டுமானால் அவரிடம் இனிப்பை நான் சாப்பிடுவதாகச் சொல். அவர் ஒன்றும் சொல்ல மாட்டார், என்றான் கோபால்.

அப்பா! கடைக்குள் எறும்பு வந்துள்ளது. நான் சொல்லியும் கேளாமல் இனிப்பை எடுத்துச் சாப்பிடுகிறது என்று கத்தினான் சிறுவன்.

தூக்கம் கலைந்ததால், எரிச்சல் அடைந்த கடைக்காரன், மகனே எறும்பு வந்தால் விரட்டு.... இல்லையேல் அதை அப்படியே விட்டுவிடு. எறும்பைச் சமாளிக்க உன்னால் முடியும்.

இதைக்கேட்ட கோபால் உள்ளுக்குள் சிரித்துக்கொண்டான். இனிப்பு நிறைந்திருந்த ஒரு பாத்திரத்தைத் தூக்கினான். சிறுவர்களுக்கு வழங்க இது போதும் என்று நினைத்து அங்கிருந்து புறப்பட்டான்.

இதைப் பார்த்து அதிர்ச்சியடைந்த அவன், அப்பா நிறைய இனிப்புகளை எறும்பு எடுத்துச் செல்கிறது. பணம் ஏதும் தரவில்லைஎன்றுகத்தினான்.

இதைக்கேட்ட கடைக்காரன் கோபம் கொண்டான். என் தூக்கத்தைக் கெடுக்காதே என்று எத்தனை முறை சொல்வது? நான் எழுந்து வந்தால் உன் தோலை உரித்து விடுவேன். எறும்பு இனிப்பை எடுத்துச் செல்வதற்காக யாராவது கவலைப்படுவார்களா? போனால் போகட்டும் எவ்வளவு இனிப்பை எடுத்துச் சென்று விடப் போகிறது. பேசாமல் இரு என்று கத்தினான்.

இனிப்புப் பாத்திரத்துடன் வெளியே வந்தான் கோபால். அங்கிருந்த சிறுவர்களுக்கு ஒன்றுக்கு இரண்டாக இனிப்புக்களைத் தந்தான். அவர்களும் மகிழ்ச்சியாகச் சாப்பிட்டனர்.

உங்களை ஏமாற்ற முயன்ற கடைக்காரனை நன்றாக ஏமாற்றிவிட்டேன் என்ற கோபால் அங்கிருந்து புறப்பட்டான்.

தூக்கம் கலைந்து எழுந்த கிழவன், விடயம் அறிந்ததும் குய்யோ, முய்யோ என கத்தினான். யார் அந்த எறும்பு என்று தெரியாமல் நொந்து போனான்.

## சிறு துணுக்குகள்



ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை ஒரு முறை ரெயில் கடவை அருகே சென்றுகொண்டிருந்தபோது...

அங்கே இருந்த பலகையில், கோச்சி வரும் கவனம் என எழுதப்பட்டிருந்ததாம். (சிங்களத்தில் ரயிலை கோச்சி என்று சொல்வார்கள்)

உடனே,அதன்கீழ் கொப்பரும் வருவார் கவனம் என்று எழுதிவிட்டு சென்றுவிட்டார்.

பின்னர் ரெயில்வே அதிகாரிகள் அதைப் பார்த்துவிட்டு... அவர்மீது வழக்குத் தொடுத்துள்ளார்கள்....

நீதிபதி விசாரித்தபோது...

கோச்சி என்றால் தமிழில் அம்மா என்றும் அர்த்தமுள்ளது.... அதனால்த்தான் கொப்பரும் வருவார் என்று எழுதினேன்.... பிழை எனதல்ல.... தமிழை சரியாய்ப் பயன்படுத்தாமல் தவறாக எழுதியதுதான் பிழை என சுட்டிக் காட்டினார்.

(நாட்டின் பேச்சு வழக்கில் கோத்தை அல்லது கொம்மா- அம்மா, கொப்பர்-அப்பா)

## பொது அறிவுகள்

1.காந்தியை முதன் முதலில் தேசபிதா என்று அழைத்தவர் யார்? நேதாஜி.

2.திருக்குறளில் பயன்படுத்தப்பட்ட எழுத்துக்கள் எத்தனை? 210

3.உப்பை விரும்பி சாம்பிடும் விலங்கு எது? முள்ளம்பன்றி

4.சீனாவின் புதை விலங்கு எது? பன்றி

5.மண்புழுவுக்கு எத்தனை இதயங்கள்? 10

6.வெட்டுக்கிளிக்கு எத்தனை கண்கள்? 5

7.மிகக் குறைந்த நேரம் தூங்கும் மிருகம் எது? கழுதை (ஒருமணிநேரம்)

8.உலக வங்கி உள்ள இடம் எது? வோஷிங்டன்

9.அதிக மோப்ப சக்தி உள்ள பறவை எது? கழுது

10.சார்க் அமைப்பு ஏற்படுத்தப்பட்ட ஆண்டு எது? 1985

ப.சாருஜன், தரம்–5 f யா. இந்து ஆரம்ப் பாடசாலை



ந.லக்ஷிகா, தரம் -4- யாழ்.நல்லூர் காசிப்பிள்ளை மகா வித்தியாலயம்



தரம் -2-

## உலகம் போற்றும் விஞ்ஞானிகள்



பென்சிலின் மருந்தைக் கண்டுபிடித்தவர்- அலெக்சாண்டர் பிளமிங்

மின்குமிழைக் கண்டுபிடித்தவர்-தோமஸ் அல்வா எடிசன்

வானொலியைக் கண்டு பிடித்தவர்- மார்க்கோனி

விமானத்தைக் கண்டுபிடித்தவர்-ரைட் சகோதரர்கள்

திசையறி கருவியைக் கண்டு பிடித்தவர்- கிரகம்பெல்

மின்கலத்தைக் கண்டுபிடித்தவர்-அலெக்சாண்டர் வோல்டா

புவியீர்ப்பு சக்தியைக் கண்டுபிடித்தவர் சேர் ஜசாக் நியூட்டன்

அம்மைப்பால் தடுப்பூசியைக் கண்டுபிடித்தவர்- மேரி கியூரி அம்மையார்

தொலை நோக்கியைக் கண்டுபிடித்தவர்- கலிலியோ கலிலி.

[illegible] 9 யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி

by Noolaham Foundation.
.org | aavanaham.org





# வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்)
021 567 1532



## ஆடைவிடயத்தில் இன்றைய பெணகள் கையாளும் கொள்கை?

**ஜி.கோபி — மந்திகை**

**என் அன்பைப் புரிந்து கொள்ளாத தங்கைக்கு ஏதாவது நல்ல கருத்துச் சொல்லுங்க**

அண்ணன்களைப் புரிந்து கொண்ட தங்கைகள் இப்போ எங்கேயடா உண்டு. சென்று, பட்டு, நொந்து வரும். அப்போது அணைத்துக்கொள். இப்போது அதைவிடு...

**நாகராசா — சாவகச்சேரி**

**கிரிக்கெட் பிரியரான நீங்கள் IPL இல் எந்த அணிக்கு ஆதரவு?**

IPL அதிரடிக்கும் கிளுகிளுப்புக்கும் பஞ்சமில்லை என்பதால் எல்லா அணியையும் பிடிக்கிறது. சிக்சர், பவுண்டரி அடிக்க வேண்டும் என்று தான் மனம் ஏங்குகிறது. அப்போது தானே அழகு மங்கைகள் ஆட்டம் போடுவார்கள்.

**கிஷோக் — கொண்டலடி**

**அடுத்த சுப்பர்ஸ்ரார் யார்?**

யாருக்குத் தெரியும் எந்தப் புற்றில் எந்தப் பாம்பிருக்கோ?

**கவிதா — சாவகச்சேரி**

**நடிப்பில் சிறந்தவர்கள் ஆண்களா, பெண்களா?**

பெண்கள் தெரியாத மாதிரி நடிப்பதிலும் ஆண்கள் தெரிந்த மாதிரி நடிப்பதிலும் முதுகலைப்பட்டம் பெற்று விடுவார்கள்.

**மதுசனன் — கொடிகாமம்**

**மனிதனுக்கு எதிர்பார்த்தது கிடைக்கிறதா?**

நம் நாட்டில்தான் எதிர்ப்பார்த்த எதுவுமே கிடைக்காதே. பஸ்சில் சில்லறையை எதிர்ப்பாக்கும் கொண்டக்டருக்கு நோட்டை நீட்டுவோம். நோட்டை எதிர்பார்த்து பாத்திரத்தை நீட்டும் பிச்சைக்காரனுக்கு சில்லறைகளைப் போடுவோம் இதுதான் நியம்.

**பிரியந்தன் — யாழ்ப்பாணம்**

**கடவுளுக்கு நேர்த்தி வைப்பதைப்பற்றி?**

காசு கொடுத்துக் கடவுளைப் பார்க்கப்போய் கடவுளுக்கும் காசு கொடுத்து கடைசியில் கடவுளிடமே காசு வேணும் என கேட்கிறவன்தான் இந்த பாழாய்ப்போன மனிதன்.

**அனு — வரணி**

**என் அக்கா எந்தநேரமும் கதைத்துக் கொண்டிருக்கிறா என்னசெய்ய?**

கதையில் இருந்து கரண்ட் எடுக்கலாம் என்றால் நம் நாட்டில் கரண்ட் கட் ஏற்படாது. என்ன செய்ய. அப்படியொரு கண்டுபிடிப்பு நடக்கவில்லையே.

## உங்களுக்கு ஒரே காதல் கடிதம் வருகுதாமே?

**குருபரந்தாமன் — அல்வாய்.**

**காதலிக்கும் போது பெண் மட்டும் போதும் கல்யாணம் என்றால் சீதனம் வேண்டும் என்கிறார்கள் அது ஏன்?**

காதலிக்க காதலி மட்டும்தான் தேவை. கல்யாணம் என்றவுடன் காதலியில் க அழிந்து அரவு அடுத்த தாவுடன் சேர தாலி வரும். தாலிக்கு பணம் தேவை. அதை காதலியிடம் கேட்கிறார்கள் போல.

**எஸ்.ஆர்.கரன் — சுழிபுரம்**

**தமிழுக்கும் வேறு மொழிக்குமுள்ள வித்தியாசம்?**

எங்கள் மொழியில் இனிப்பான சில விடயங்கள் பிற மொழியில் முகம் சுழிக்க வைக்கின்றன. (ஆமிக் கெடுபிடியில் அடையாள அட்டைகாட்டும் போது அடிக்கடி அவர்கள் சிரிச்சு சிரிச்சு கேட்பது)

மன்னா! இராமன் இருக்கும் இடம் தான் சீதைக்கு அயோத்தி
சொன்னால்கேள் மகாராணி பதுங்கு குழியில் இடம் பத்தாது



**நந்த் — நெல்லியடி.**

**கற்பழிப்புக்கள் அதிகரிக்கக் காரணம் என்ன?**

மாட்டுவண்டிக் கலாசாரத்தை கொண்டு வர வேண்டும் (ஆழமாய் சிந்தித்தால் பதில் கிடைக்கும்)

**புலோலியூர் — வேல்நந்தன்**

**ஆடைவிடயத்தில் இன்றைய பெண்கள் கையாளும் கொள்கை?**

பஞ்சாபி என்ற உடை ஒரு பண்பாடுடையது என்பதை ஏற்கத்தான் வேண்டும்.இன்றைய பஞ்சாபிகள் அப்படிப்பட்டவையா? அந்தப் பஞ்சாபிக்கு எதற்காக துப்பட்டா போடப்படுகிறது என்பது யாருக்கும் புரிவதில்லை என்பது எம் கருத்து. ஏனென்றால் யாரும் துப்பட்டாவை போட வேண்டிய இடத்தில் போடுவதில்லையே?

**நிரோஷ் — பருத்தித்துறை**

**கணனி வல்லுநர்கள் பற்றி?**

எனக்குத் தெரியாத விடயம் இன்னொருவருக்குத் தெரியும் போது அவர் பற்றிய எண்ணம் பெரிதாகவே இருக்கும்.

## மனிதனுக்கு எதிர்பார்த்தது கிடைக்கிறதா?

**உடுவிலூர் — கலா**

**கட்டிய மனைவியை கை நீட்டி அடிக்கும் கணவன்களைப் பற்றி?**

கணவான்களே உங்களுக்கு கோபம் வரும் போது ஒருடம்ளர் தண்ணீரை பொறுமையாய்க் குடியுங்கள். மனைவியிடத்தே பல முறை உங்கள் கை நீளும். ஆனால் ஒரே ஒருமுறை அவள் கை நீண்டால்... சிந்தியுங்கள் செயற்படுங்கள்.

**அ.அச்சுதன் — J.H.C**

**தொலைபேசியில் பேசிக்கொண்டே வாகனம் ஓட்டுபவர்கள் பற்றி?**

விலையில்லா உயிரை தொலைபேசியால் தொலைக்கப் போகிறான் பாவி... இதைவிட வேறு எதைச் சொல்ல முடியும்.

**கவிச்செல்வன் — திருவையாறு**

**பெண்கள் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொருமாதிரி இருப்பதேன்?**

பெண்கள் பச்சோந்தி போன்றவர்கள். பிறந்த வீட்டில் மகளாகவும், புகுந்தவீட்டில் மருமகளாகவும், சொந்தவீட்டில் கணவனுக்கு மனைவியாய்,குழந்தைகளுக்கு தாயாய் இந்த உலகிற்கே ஒளியாய் இருப்பதால்.

**சுமி — ஆனைக்கோட்டை**

**உங்களுக்கு ஒரே காதல் கடிதம் வருகுதாமே?**

ம்ம்... வந்தது உண்மை. மூன்று கடிதங்களுக்கு பதில் போட்டதும் உண்மை. அதன் பின்தான் தெரியும் அந்த வனிதாவும், கவிதாவும், சுமிதாவும் என் மனைவியின் ஏற்பாடு என்று.

**ஜெபா, ஈசா — மெதடிஸ்தநகர்**

**காதலில் ஆண்களா பெண்களா நன்றாக நடிப்பார்கள்?**

பெண்கள். நிறைய விடயம் தெரிந்திருந்தும் தெரியாதது போல நடிப்பார்கள்.அதற்கும் ஒரு காரணம் இருக்கிறது. அப்போதுதானே ஆண்கள் மீண்டும் மீண்டும் சொல்லிக்கொடுப்பார்கள் என்பதனால்தான் போலும்.

**மதன் — அல்வாய்**

**பணம், பட்டம், பதவி பார்த்துக் காதலிப்பது ஆண்களா, பெண்களா?**

ஆண் ,பெண் இருவரும் காதலிக்கும் போது அந்தக் காதலில் பணமோ, பட்டமோ, பதவியோ தெரியாது. காதல் காய் கல்யாணமாய் கனியும் போது இந்த புறக்காரணங்கள் தாக்கம் செலுத்தியே தீரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்



## வாழ்ந்துபார்

வசந்தம் வழிமாறும்
வாழ்க்கை நிறம் மாறும்
வந்த சுகம்
தொலைந்து போகும்
வாழ்ந்துபார்...
உறவுகள் திசைமாறும்
உள்ளங்கள் நிலைமாறும்
உண்மைகள் விலைபோகும்
வாழ்ந்துபார்...
காலம் நீளும்
கண்ணியம் களுவேறும்
கருத்துக்கள்
நரைத்துப்போகும்
வாழ்ந்துபார்...
இரவுகள்
தங்கமறுக்கும்
இம்சைகள்
தூங்க தவிர்க்கும்
இனியவை
கடந்து போகும்
வாழ்ந்துபார்...
பந்தங்கள் வந்திடும்
பாசங்கள்
சேர்ந்திடும்
பணம் போனால்
பாதைமாறிடும்
வாழ்ந்துபார்...

க.நாகேஸ்வரா, சண்டிலிப்பாய்

## எம் தாய் நிலமே

மீண்டும்
வந்துள்ளோம்
எம் தாய்நிலமே
யுகம்யுகமாய்
எம்மைத் தாலாட்டி
வளர்த்த மண்ணே
உன்னில்
எம்பாதம்
பதிகையில்
எத்தனை நினைவுகள்
எத்தனை சிலிர்ப்புக்கள்
காடாகி மேடாகி
போர் தின்று
பாலையாகிப் போன
எம் தாய் நிலமே
கலங்காதே
மீண்டும் வளம்பெற
வைத்திடுவோம்
உன் புதல்வர் நாம்

புலோலியூர்
வேல்நந்தன்

## இமயம் தொட

இரவுக்குப் பயந்து
பரலோகம் போக
நினைப்பவனை
இழுத்துப்பிடி
உலகம் உருண்டை
அதுசுற்றும்போது
இதுமாறிமாறி வ ரும் என
உறைக்கவை
உன் பணி எதுவோ
அதைமுதலாய் முழுமையாய்
செய் செய் செய்...!

மாவை. நா.கஜேந்திரன்

## ஒயில் கிணறு

என் ஈர் விழிகளிலும்
கண்ணீர் வருவதற்கே
கதியில்லாக் காலமதில்
வீட்டுக் கிணற்று ஊற்றொன்றுடைந்து
பன்னீர் வருவதாக பெருங்கனவு கண்டிருக்க
ஓடிச்சென்று ஒரு பிடியள்ளி
உள்ளங்கை நனைக்கையிலே
கூடித்திரண்டு விரலிடுக்கு பிசுபிசுக்க
ஆடிப்போனது என் நெஞ்சு
அதிகாரி படையெடுப்பும்
ஆய்வுகூடச் சோதனையும்
ஒய்வின்றி கவலைதர
ஊர் கிணறு பலவோடு
ஒயில் கிணறு இதுவென்று
என் கிணறும் பட்டம் பெற
கலங்கிய மனசோடு கலன்
கணக்கில் சுமக்கின்றேன்
தண்ணீருடன் கண்ணீரையும்

மேகலைவன்

## புது உலகம்

பகைமை அற்ற உலகம் -நல்
நட்பு உற்ற உலகம்
சிரித்துச் சிரித்து மகிழ
கோபத்தையும் ஏக்கத்தையும் அடக்க
உகந்த உலகம் அந்த உலகம்
வேற்றுமை தவிர்த்த உலகம்
நட்பை விதைத்த உலகம்
எம்மை ஆறுதல்படுத்தும் உலகம்
எம்வாழ்வை வளப்படுத்தும் உலகம்
நாம் சிந்தித்துச் சிறக்க
அது ஓர் சிந்தனை உலகம்
எம் முகத்தில் புன்னகை காண
பாடுபடும் உலகம்
இது ஓர் உள்ளத்தில் இருக்கும் உலகம்
அதுவே எம் நண்பர்கள் உலகம்

அ.அச்சுதன்
யா/ இந்துக் கல்லூரி

# மௌனத்தின் தேடல்– 245



## சாராம்சம்

இருளுக்கு வெளிச்சம் தந்து
வெளிச்சத்தில் மறைந்த இருள்
குடிநீருடன் பரவியதோ!
பென்சிலைப்பிடிக்கும் பிஞ்சுக்
கைகள் நான்கு பேருக்கு– தாகம்
தீர்த்தகாலம் மிகுந்து
மூன்றுபேர் பங்குகேட்கின்றனரே
இரண்டு குடம் நீருக்கு
நிலையான செல்வமென– நீரினை
நினைத்திருந்த யாழில்
மின்சாரம் தந்த
சாராம்சம் இதுதானோ?

எம்.சற்குணம்
சங்கானை

## பொசுங்கும் பொக்கிஷம்

பெரிசுகள் பொறுப்பிழந்து
போதைக்குள் குளிர்காய
பள்ளிப் பராயத்து பொக்கிஷம்
பொறுப்பெடுத்து பொசுங்குவது
பொறுப்பதிகாரிகளுக்கு
தெரியவில்லையா?

ச.சிவாஜினி
சுன்னாகம்

## நீருக்காக அலையும்...

மண்ணழத் தண்ணீரும்
மாசுபட்டதால் குடிக்க
தண்ணீருமின்றி தவித்துக்
கண்ணீர்விடும் சிறுமியர்
எங்கோ திரிந்தலைந்து
இருபானைகளில்
நீர் நிறைத்துக் கொண்டுவரச்
செல்கின்றார் இவர்களது
முயற்சிதிருவினையாக்கும்

துரை
தென்மட்டுவில்

## வறட்சியா?

கூட்டணி சேர்ந்து தினந்தினமும்
குஞ்சுகளே தண்ணீர் சுமக்கின்றீரே!
வாட்டமான வறட்சியால்
வந்த கொடுமையா? அன்றி
பாதகர் சதியால் பரிதவிப்பில்
பாழாய் உம் ஊற்று மாசான கதியா??
ஏதாயினும் தண்ணீரிலாவது
எம்மவர் ஒற்றுமை நிலைக்கட்டும்

பொ.புனிதன்
வரியப்புலம்

## பலன்தரும் கூட்டணி

எதிர்காலச் செல்வங்கள்
ஏற்படுத்திய கூட்டணி
காத்திட்ட ஒற்றுமை
நீக்கிடுதே குடிநீர்ப்பஞ்சம்
வீட்டினிலே!
நாட்டிலே– எம்பிரதிநிதிகள்
எப்போது கற்றிடுவார்?
இந்த ஒற்றுமைப்பாடம்
இவர்களிடம்

அராலியூர்
சோ.சிவகுமாரன்

## எம்நிலை

தொடர் யுத்தத்தின் அவலம்
சமாதானத்திற்காய்
ஏங்கினோம்
நொதேர்ன் பவர் செய்த துரோகம்
குடிநீரின் முகவரி தேடுகிறோம்
உடல்தின்னும் கழுகுகள்
வந்துவிட்டால்
எம்நிலை??? இங்கு

உடுவிலூர் கலா

## நீரைத்தேடி

தீர்க்கமான முடிவின்றி
இழுபட்டுச் செல்லும்
கழிவொயில் கலப்பானது
பெரியவர்களை மட்டுமா
சிறார்களான எம்மையும்
பெரிதும் பாதிக்கின்றது
அறிவுத் தேடலைக்கைவிட்டு
நீருக்காக அலைகின்றோம்
உடல் நலத்தைப் பாதிக்கும்
இடம்மாறவைக்கும்
பொதுப்பிரச்சினையிலாவது
ஒற்றுமை மிகவும் அவசியம்

க.நாகராசா
நுணாவில்

## பயணம்

பிஞ்சுக் குழந்தைகளின் குடிநீரில்
நஞ்சிடவும் வேண்டாம்
நெஞ்சினில் வஞ்சகம்
சேர்க்கவும் வேண்டாம்
பஞ்சமும் தாகமும் தீர்க்க
அஞ்சாமையோடு
பயணிக்க வழிவிடுங்கள்

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

## நிறைகுடம்

தளம்புகின்ற குடங்களாக இல்லாமல்
எப்போதும் தளம்பாத நிறைகுடங்களாக
நீங்கள் வாழ்க்கையில் சிறந்து
விளங்க வேண்டும்

அ.அன்பரசன்
யா/ வரணி மத்திய கல்லூரி

## அடம்பன்

கண்ணீரோடு தொடரும் வாழ்விலே...
தண்ணீருக்கான போராட்டம்
நடக்கின்றது
குழந்தைகளே.. நீங்கள் சுமப்பது
தண்ணீர்க்குடமல்ல
எந்தநிலை வந்தாலும்
துவண்டு போகமாட்டோம்
ஒன்றுபட்டு நிற்போம் என்ற
உயர்ந்த தத்துவத்தை

யோ.சாதுரியா

## மாறுமா?

அன்றாட தேவையை மறந்து
மெகாசீரியலில் லயித்திருந்து
கண்ணீர் சிந்தும் அன்னையருக்காக
பெற்றெடுத்த பிள்ளைகள் நாம்
பிஞ்சுக்கரங்கள் வலிக்க
தண்ணீர் சுமக்கின்றோம்
எப்போதுதான் இந்நிலை
மாறுமோ எமக்கு...?

த.தனுஜா, அல்வாய்

# மௌனத்தின் தேடல் –246



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 15.04.2015ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மற்றவர்களை ஊக்கப்படுத்துகின்றாயா?



நண்பா! வாழ்வின் நம்பிக்கைகளை நிற்க வைக்கின்ற மிகப்பெரிய தூண்கள் எவை தெரியுமா? மற்றவர்கள் நம்மைப் பாராட்டும் தருணங்கள், ஊக்கப்படுத்தும் நொடிகள். பல சவால்களைக் கடந்து நாம் வரும் வழியில், துன்பங்கள் தொடர்ந்து எம்மைத் துரத்திய போதும், காய்ந்த கள்ளிச் செடிகளிலும் இலைகளைத்துளிர்க்கச் செய்தது நம் ஒவ்வொருவரது உள்ளத்திலிருந்து புறப்பட்டு வாய்வழி வந்த, ஊக்கப்படுத்தல் வார்த்தைகள் தான். நண்பா! நீ உன்னுடைய வாழ்க்கையில் யாரையாவது பாராட்டிப் பேசி ஊக்கப்படுத்தியிருக்கின்றாயா? வார்த்தைகளால் ஊக்கப்படுத்துவது என்பது, உண்மையில் மற்றவர்கள் மனதில் ஆழ்மனதில் தான் செய்கின்ற காரியங்களில் உள்நோக்கி ஈர்க்கப்பட்டு, தன்னம்பிக்கையையும், செய்து முடிக்க வேண்டும் என்ற ஆர்வத்தையும் ஏற்படுத்துவதாகும். பாராட்டுதல் என்பது நீ எதிர்பார்க்கின்ற ஓர் விடயமாக இருந்தாலும், நீயும் மற்றவர்களைப் பாராட்டக் கற்றுக் கொள்ள வேண்டும்.

**கெட்டிக்காரி/ கெட்டிக்காரன்:** கெட்டிக்காரன் என்ற வார்த்தைக்கு பெறுமதி அதிகம். நாங்கள் செய்கின்ற

**யாழ் தர்ஷி**

செயல்களுக்கு யாராவது கெட்டிக்காரர்கள் என்று சொல்லும் போது, ஆராய்ச்சி எதுவும் செய்யாமல் மனம் ஒருகணம் சந்தோசத்தில் மிதப்பதை உணர்கின்றோம். அந்த உணர்வு எங்களை மேலும் அச்செயலை நன்றாகச் செய்ய வேண்டும் என்ற தன்னம்பிக்கையை விதைப்பது மட்டுமன்றி, சரியான பாதையில் எங்களை வழிநடத்துகின்றது. வார்த்தையைக் கொண்டு எங்களை நாங்களே வழிப்படுத்திக் கொள்கின்றோம். படிக்கும் காலத்தில், பரீட்சை ரிப்போர்ட்டைக் கொண்டு ஓடிவரும்போது நடக்கும் சம்பவத்தை நினைத்துப்பார், "நான் ரிப்போர்ட்டை கொண்டு வந்து குடுத்ததும் அப்பா பாத்திட்டுக் கெட்டிக்காரன் என்டு சொன்னார். எனக்கு அண்டைக்கு முழுதும் ஒரே சந்தோசமா இருக்கும். இனி எல்லா முறையும் இப்பிடி நல்ல மாக்ஸ் எடுக்க வேணும் போலயே இருக்கும்"

**நன்றாக இருக்கிறது!/ அழகாக இருக்கிறது!:** நாம் செய்கின்ற செயல்களை யாராவது ஒருவர் நன்றாக இருக்கிறது, அழகாகச் செய்திருக்கின்றீர்கள் என்று சொல்லி ஊக்குவிக்கும் போது அந்தச் செயல் திருப்திகரமாகவும், பூரணமாகவும் செய்து முடிக்கப்பட்டு விட்டது என்ற உணர்வு எங்கள் மனதில் எட்டிப்பார்ப்பதை நாம் அனுபவித்திருப்போம். நீயும் அனுபவித்திருப்பாய். வாழ்க்கையின் பல சந்தர்ப்பங்களில் சந்தோசத்தை அனுபவித்திருக்கின்றோம்.

உதாரணமாக, "நான் செய்து குடுத்த மூக்கு வைச்ச பொம்மையை எங்கடை ரீச்சர் வகுப்பிலை எல்லாருக்கும் காட்டி பிள்ளைகளே இது மாதிரி எல்லோரும் செய்யப் பழக வேண்டும். என்ரை பிள்ளையள் எப்பவுமே கெட்டிக்காரப்பிள்ளைகள் எல்லாம் செய்திடுவாங்கள். எண்டு சொன்னது எனக்கு இண்டைக்கும் மறக்க ஏலாது. அந்த மூக்குப் பொம்மையை இப்பவும் வைச்சிருக்கிறன்" சிறு வயது சம்பவங்கள் நினைவிருக்கா உனக்கு?

**உங்களால் ஏலும், உன்னாலை முடியும்:** உங்களால் செய்ய முடியும், இந்த வேலைக்கு நான் தேவையில்லை, தனிய செய்திடுவாய், கலக்கீட்டீங்க, எனக்கு அப்பவே தெரியும் நீ செய்திடுவாய் என்று போன்ற வார்த்தைகள் நம் ஒவ்வொருவருக்கும் நம்பிக்கைக் கற்களை செதுக்கிவிடும் உளிகளைப் போன்றது. நாளை வடிக்கவிருக்கும் நல்லதொரு சிற்பத்துக்கு தருகின்ற ஊக்கப்படுத்தல் செய்முறை ஆகும். வார்த்தைகளில் உள்ள சக்தியை நாம் அப்போது உணர்ந்துவிடுகின்றோம். உதாரணச் சம்பவமாக, " எனக்கு முந்தியெல்லாம் வங்கிக்கு போய் காசு எடுக்கிறதோ, வைப்புச் செய்யுறதோ அதெல்லாம் செய்யப்பயம், ஒரு நாள் நான் போய் காசு எடுத்துக் கொண்டு வர எங்கடை அவர் "பேந்தென்ன இனி நான் தேவையில்லை" எண்டு சொன்னது எனக்கு எவ்வளவு சந்தோமா இருந்தது. இப்பெல்லாம் நான் பயமில்லாமல் போய் காசு எடுத்துக் கொண்டு வாறனான்"

**நீ செய்யாத வேலையா? மறுபடியும் முயற்சி செய்:** எத்தனையோ தடயங்களில் எங்கள் முயற்சிகளின் வீணான சுவடுகள் இல்லாமலில்லை. ஆனாலும் நாங்கள் மீண்டும் முயற்சிக்கவும் தயங்குவதில்லை. சில வேளைகளில் முயற்சிகள், தடங்கலை ஏற்படுத்தும் போது மனம் சோர்ந்து தடுமாறித் தனியே இருக்கின்ற சந்தர்ப்பங்களில் யாராவது ஒருவர் கூறுகின்ற உற்சாகமான வார்த்தைகள் அந்த நாட்களில் நாங்கள் செய்து முடிக்க வேண்டிய காரியங்களில் உள்ள தடைகளை நீக்கிவிடும். அதேவேளை யாருக்காவது நாங்கள் சொல்லுகின்ற உற்சாக வார்த்தைகள் நம்பிக்கையை ஏற்படுத்தும். அப்போது அந்த வார்த்தைக்கு இருக்கின்ற சக்தி அளவற்றதாகி விடுகின்றது. நம் வாழ்வில் பல தருணங்களில் இந்நிலையை அனுபவித்திருக்கின்றோம்.

"என்ரை வெங்காயத் தோட்டம் மழையிலை அழிஞ்சு போய் நான் இனிமேல் என்ன செய்யுறதெண்டு மனமுடைஞ்சு போய் இருந்த நேரம் மணியண்ணை சொன்ன வார்த்தை : தம்பி நடந்தால் நாடெல்லாம் உறவு, படுத்தால் பாயும் பகையடா! ,ப்ப என்ன நடந்து போச்சு நாங்கள் இருக்கிறம் நீ செய்யாத தோட்டமே விட்டுட்டு அடுத்த வேலையைப்பார்" மீண்டும் எழுந்து எங்கள் காரியங்களைச் செய்வதற்கு பலம் அந்த வார்த்தைகளில் இருக்கும்.

**நன்றாக முடிந்திருக்கின்றது:** இந்த வார்த்தைக்கும் மிகப் பெரிய மகாசக்தியிருக்கின்றது. அதிக வேலைப்பளுவின் நடுவில் நாம் செய்கின்ற புதிய புதிய, புத்துருவாக்கங்களுக்கு தகுந்த ஊக்கப்படுத்தல்கள் கிடைக்காவிடின் சில சந்தர்ப்பங்களில் நாம் சோர்ந்து போய் விடுவோம். ஆனால் செய்கின்ற வேலைகளுக்கு முடிவில் "நன்றாக முடிந்திருக்கின்றது" என்ற வார்த்தையை உதிர்த்து விடும் போது அந்த வேலையின் மகத்துவமும் நாம் நன்றாகத்தான் செய்திருக்கிறோம். மற்றவர்களை திருப்திபடுத்தியிருக்கின்றோம் என்ற உணர்வு தொடர்ந்து அடுத்த வேலையைச் செய்வதற்கு வழிவிடும்.

**மற்றவர்களிடம் உள்ள திறமைகளைச் சொல்லி ஊக்கப்படுத்தல்:** உங்களுக்கு நினைவிருக்கும் சில வேளைகளில் நாங்கள் குறித்த சில திறமைகளை அழகாக வெளிப்படுத்துவோம். அந்த ஆற்றல்கள் எங்களிடம் இருக்கும். அப்போதெல்லாம், "நீங்கள் நன்றாகப் பாடினீர்கள்", "நன்றாக நடனமாடினீர்கள்", "உங்களுடைய கட்டுரை பாத்தேன் சூப்பரா இருந்திச்சு" "என்னாலை நம்பவே முடியலை நீங்க வரைஞ்ச படமா இது வாவ்... எவ்வளவு நல்லா இருக்கு". என்று யாராவது சொன்னால் எவ்வளவு சந்தோசமாக இருக்கும் அந்த மகிழ்ச்சி நமக்கு கிடைக்கின்ற பரிசில்களை விட மனதில் அதிக நாட்கள் நிலைத்து நிற்கும்.

"ஒரு மாசாமா அம்மாவுக்கு வருத்தம் எண்டு நான் பள்ளிக்கூடம் போகாமல் எக்ஸாம் நடந்த அண்டுதான் போனனன். கேள்விகள் எல்லாத்தையும் எழுதி முடிச்சிட்டு விடை தெரியாமல் முளிச்சுக் கொண்டிருந்தன். அந்த நேரம் அதிபர் வந்து எல்லாருடைய கொப்பியையும் பாத்துக்கொண்டு வந்தார். விடையெதுவும் எழுதாத கேள்வியை மட்டும் எழுதிய என்னுடைய கொப்பியை தூக்கிக் காட்டி, "என்ன அழகான கையெழுத்து இவனைப் போல எல்லோரும் அழகாக எழுத வேண்டும்." எண்டு சொல்லிவிட்டுப் போனார். நான் இண்டைக்கு ஓர் ஆசிரிய ஆலோசகராக இருக்கிறேன். அந்த வார்த்தையும் என்னோடு இருக்கின்றது. இந்தச் சம்பவம் தவறுகளைச் சுட்டிக்காட்டாமல் அழகாக தட்டிக் கொடுக்கின்ற பாராட்டு மொழியாகும். நண்பா! இவை எல்லாமே எங்கள் வாழ்வின் முக்கிய கட்டங்களில் கிடைக்கவேண்டிய பாராட்டு வார்த்தைகளாகும். இவை நமது வாழ்வில் கிடைக்கவில்லை என்றால் நாங்கள் மற்றவர்களுக்கு கொடுக்கலாம். அவர்களைப் பாராட்டலாம். நீயும் மற்றவர்களை வார்த்தைகளால் ஊக்கப்படுத்து. மற்றவர்களும் உன்னை வார்த்தைகளால் ஊக்கப்படுத்துவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனவெளி

**12, ஜனவரி 2015 அன்று ஞாயிறு வலம்புரியில் "பறிகொடுத் திட்டேன்" என்ற தலைப்பில் கணவனை இழந்த பெண்தலைமைத்துவக் குடும்பங்களைப் பற்றிய கதை ஒன்று வெளி வந்தது. 19 ஜனவரி 2015 ஞாயிறு அந்தப் பெண்ணின் நிலை பற்றிய விபரங்களுடன், பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதற்கான வழிமுறைகள் பற்றி, பெண்கள் அபிவிருத்திக்கான யாழ். மாவட்ட இணைப்பாளர், செல்வி. நவரட்ணம். உதயணி அவர்களின் நேர்காணல் வெளிவந்தது. தொடர்ந்து வாசகர்களின் கேள்விகளுக்கு அவர் பதிலளிக்கின்றார்.**

**வனிதா,**
**அச்சுவேலி.**

**வணக்கம், எனது பெயர் வனிதா. நான் திருமணமாகி நான்கு குழந்தைகளின் தாயார். அலுவலகம் ஒன்றில் பணியாற்றி வருகின்றேன். பிரச்சினை என்னவென்றால் எனது அலுவலகத்தில் பணிபுரிகின்ற சக பெண்மணி ஒருவர் கணவனை இழந்தவர். அவருக்கும் மூன்று குழந்தைகள். அவருடைய கணவர் தற்கொலை செய்து இறந்து விட்டார். கடந்த ஐந்து வருடங்களாக தனித்து குழந்தைகளைப் பராமரித்து வருகின்ற அவ, தன்னுடைய எல்லாப் பிரச்சினைகளையும் என்னிடம் சொல்லுவா, சிலவேளை அழுவா, கடந்த சில நாட்களாக அவா, தன்னுடைய தூரத்து உறவினர் ஒருவர் தன்னை திருமணம் செய்வதற்கு கேட்பதாகவும் தனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை என்றும் கவலைப்பட்டா, அவவுக்கு திருமணத்தில் ஆசை இருப்பதாகவும் எனக்குப் புரிந்தது. ஆனால் பிள்ளைகள் என்ன நினைப்பார்கள் என்று தடுமாறுகின்றா, சிலவேளை வாழ்க்கையே வெறுக்கிறது வனிதா, பேசாமல் அவர் போன இடத்துக்கே போய்விடலாம் என்று தோன்றுகின்றது! என்று சொல்லுவா! நான் அவவுக்கு ஏதாவது வகையில் உதவி செய்ய ஆசைப்படுகின்றேன். என்ன விதத்தில் அவவை ஆறுதல்படுத்தலாம்?**

நீங்கள் அவருக்கு உதவி செய்ய வேண்டும் என்றெண்ணி இவ்வினாவைக் கேட்டிருப்பது வரவேற்கத்தக்கது. ஆனாலும் குறித்த அலுவலகப் பணியாளரின் விருப்பங்கள், கவலைகள், ஏக்கங்கள் தொடர்பில் உங்கள் கணிப்பினையே குறிப்பிட்டிருக்கின்றீர்கள். இருந்தாலும் குறித்த பெண்மணி தொடர்பில் நாம் அவரை நேரடியாகச் சந்தித்தால் தான் சரியான கணிப்பைச் செய்ய முடியும். இங்கு நாம் நான்கு விடயங்களில் முக்கியத்துவம் செலுத்திப் பார்க்க வேண்டும்.

**விதவை என்ற ரீதியில் அவருடைய உளத்தாக்கங்கள்:** கணவர் தற்கொலை செய்து கொண்டு இறந்தமையால், மனைவிக்கு உளரீதியாக பிரிவுத்துயருடன் களங்கம் நிறைந்த அவப்பெயர் ஒன்றும் ஏற்பட்டிருக்கலாம். ஆனாலும் அந்தப் பெண் தன்னுடைய பிள்ளைகளுக்காகவும், எதிர்காலத்தின் நலன் கருதியும் வேலைக்குச் செல்வது பாராட்டத்தக்கது. அவரால் தன்னுடைய சொந்தக் காலில் நிற்க முடிகின்றது. பல விதவைப் பெண்கள் சமூகத்தில் முன்னுக்கு வந்து தொழில் புரிவதற்குத் தயங்கி நிற்கின்ற வேளையில், இப்பெண் தொடர்ந்தும் வேலை செய்கின்றார். எனவே அவர் ஓர் தன்னூக்கம் மிக்கவராகவே இருப்பார். ஆனாலும் சில வேளைகளில் அவருடைய மனம் அன்பு, அரவணைப்பு என்று கணவனின் பாசத்துக்காக ஏங்குகின்ற சந்தர்ப்பங்களும் உண்டு. அவை கிடைக்காத வேளையில், ஏன் நான் வாழவேண்டும் என்ற அவர் தற்கொலை ஆபத்து பற்றி யும் சிந்திக்கின்றார். அது நன்மை யானது அல்ல. அவருடைய உள்ளத்தை இவ்விடயங்களில் ஆற்றுப்படுத்த வேண்டிய நிலை இருக்கின்றது. அவர் பிள்ளைகளை நல்ல முறையில் பராமரித்தல், வேலைக்கு போவது, தனது கால்களில் நிற்பது போன்ற அவரின் செயல்களை மதித்துப் பாராட்ட வேண்டும். நேரான ஊக்கத்தையும் அனுசரணையும் கொடுத்து அவரது தன்னம்பிக்கையையும் மதிப்பையும் கட்டியெழுப்ப உதவ வேண்டும். ஆனாலும் மனதில் அடக்கி வைக்காது அவ்வப்போது அவர் உங்களிடம் பரிமாறும் விட யங்களை அமைதியாகச் செவி மடுத்து, அவ்வப்போது ஆறுதல் அளிப்பது சிறந்த விடயமாகும்.

**மறுமணம் பற்றி அவருடைய பார்வை:** மறுமணம் பற்றிய விடயத்தில் நாம் எந்த முடிவையும் அவர்கள் மேல் திணித்தல் கூடாது. தாங்களாகவே எடுக்கின்ற முடிவுகளில் தான் அவர்கள் திருப்திப்பட்டுக் கொள்வார்கள். வேறு ஒருவரைத் திருமணம் செய்து கொள்வதில் தனக்கு ஏற்படும் சாதக, பாதகங்களை ஆராய்ந்து பார்த்து முடிவெடுக்க வேண்டிய நிலை அவருக்கு உண்டு.

மாறாக இல்லையப்பா, நீங்கள் திருமணம செய்து கொள்வது தான் நல்லது என்றோ, இல்லை திருமணம் செய்ய வேண்டாம் என்றோ



முடிவைத் திணித்துக் கூறிவிட முடி யாது. தன்னுடைய எதிர்காலம், பிள்ளைகளின் எதிர்காலம் போன்ற விடயங்களில் கவனம் செலுத்தி யோசித்து முடிவெடுக்க வேண்டியது அவரது கடமையாகும்.

**மறுமணத்தை நாடும் நபர் பற்றிய விபரமும் சரியான தகவல்களும்:** மறுமணம் முடிக்க கேட்ட நபர் தொடர்பான முழு விபரமும், அவரின் நடத்தை, அவரின் எதிர்பார்ப்புக்கள் என்பவை பற்றித் தெளிவாகவும், சரியான தகவல்களையும் கேட்டறிந்து கொள்ள வேண்டும். அவரைத் திருமணம் செய்து கொண்ட பின்னர், வரப் போகின்ற காலத்தில் அவர் குடும்பத்தை நன்றாகக் கவனித்துக் கொள்வாரா? பிள்ளைகளின் படிப்பு, வாழ்க்கை என்பவற்றில் அக்கறையுடன் இருப்பாரா? என்பவை பற்றி குறித்த ஆணின் மேல் முழு நம்பிக்கை ஏற்பட்டாலேயே அவரை மறுமணம் செய்கின்ற முடிவை எடுக்க முடியும்.

**பிள்ளைகளின் விருப்பு வெறுப்பும், புதிய நபர் தொடர்பான பிள்ளைகளின் எண்ணமும்:** தங்களுடைய தந்தையை இழந்த பிள்ளைகள், தாயின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளக்கூடிய நிலைக்கு வரவேண்டும். அதேவேளை தந்தையின் இடத்துக்கு ஓர் புதிய நபர் வருவாராயின் அவ ரை ஏற்றுக் கொள்ளும் மனப் பக்குவத்துக்கும், சமூகத்தின் சஞ்சலம் மிக்க பார்வைக்கு ஈடு கொடுக்கும் நிலைக்கும் வர வேண்டும்.

மொத்தத்தில் இவையனைத்தும் செய்வதற்கு உங்கள் தனி ஓர் நபரால் முடியும் என்று கூற முடியாது. அவரை, உளவளத்துணையாளர் ஒருவரிடம் அனுப்பி வேண்டிய வழிகாட்டலைப் பெற்றுக் கொள்ளச் சொல்லுங்கள்.

*சுகுமார்*
*வட்டுக்கோட்டை.*

**நாம் என்னதான் செய்தாலும் ஓர் குடும்பத்தில் தந்தையின் வெற்றிடம், எப்போதுமே நிரப்ப முடியாதது. ஆனாலும் பிள்ளைகள் தந்தையின் இழப்பை ஏற்றுக் கொண்டு வாழ்வில் முன்னேறி ஆளுமை மிக்கவராக வாழ்வதற்கு உளரீதியாக எவற்றைச் செய்ய வேண்டும்?**

உண்மைதான். குடும்பத் தலைவன் ஒருவனின் இழப்பு ஈடு செய்ய முடியாததுதான். ஆனாலும் தந்தையின்றி வளர்ந்த குழந்தைகள் ஆளுமை மிக்கவராக வளர்ந்து மிகப் பெரிய நிலைக்கு வந்து உலகம் போற்ற வாழ்ந்தவர்கள் பலர். தந்தை தான் எந்த ஒரு குழந்தைக்கும் முதலாவது முன்மாதிரி. அவரைப் பாா த்துத்தான் கற்றுக் கொள் ளத் தொடங்குகின்றனர். ஆனால் அவருடைய இழப்பில், சிற நத பாதுகாப்பை, வருமானத்தை, அன்பு அரவணைப்பை, கண் டிப்பை என்று பலவிடயங்களைப் பிள்ளைகள் இழந்து விடுகின்றனர். "தந்தை சொல்மிக்க மந்திரமி ல்லை" என்று பெரியோர் கூறுவர். ஏனெனில் குடும்பத்தில் தந்தையின் சொல்லுக்கு எப்போதுமே மதிப்பும், பயம் கலந்த மரியாதையும் இருக்கும். அவ ற்றை பிள்ளைகள் இழக்கும் போது, தந்தையின் இடத்தை ஈடுசெய்ய வேண்டிய கட்டாயம் இருக்கின்றது.

குறிப்பாக, குடும்பத்தில் மூத்த வளர்ந்த பிள்ளை தந்தையின் பொறுப்புக்களையும், கடமைகளையும் ஏற்று முன்வந்து செய்து கொண்டு ஏனைய சகோதரர்களை வழிநட த்துகின்ற சந்தர்ப்பங்கள் அதிகமு ண்டு. அவ்வாறு வளர்ந்த பிள்ளைகள் இல்லாவிடின் அவர்களுடைய சித்தப்பா, மாமா என்று உறவினர்களை தந்தையின் இடத்தில் வைத்து அவர்களின் பேச்சுக்கு கட்டுப்பட்டு வாழும் நிலையும் உண்டு. இன்னும் சிலர் தங்கள் பெரிய தந்தையை அப்பா என்று அழைப்பது முண்டு. இவை அனைத்தும் தந்தையின் இடத்தை நிரப்பும் செயற்பாடுகள். இவற்றை விட சிறு வயதிலி ருந்தே, சிறுவர் குழுச் செயற்பாடுகளிலும், ஏனைய கல்விசாரா செயற்பாடுகளிலும் ஈடுபடக் குழந்தைகளை ஊக்குவிக்க வேண்டும். தந்தையைப் பற்றி எண் ணங்களை சுதந்திரமாக வெளிப்ப டுத்தவும், மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளவும் சந்தர்ப்பமளிக்க வேண்டும். தாய் இவ்விடயத்தில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். தந்தையில் நல்ல பக்கங்களைக் கூறி, "நீ அப்பாவைப் போல அறிவாகப் பேசுகின்றாய்", "தம் பிக்கு அப்பாவின்ரை மூக்கு மாதிரி கூர் மூக்கு" "நடையைப்பார் அப்ப டியே அப்பா தான்" என்று பிள்ளைகளிடம், அப்பாவின் இயல்பு களைக் கூறி, வர்ணித்து அவரின் நல்ல தன்மைகளைப் பற்றி இடையிடையே சொல்லி நெறிப்படுத்த வேண்டும்.

(இதன் தொடர்ச்சி அடுத்தவாரம்...)

வாசகர்களிடமிருந்து கேள்விகள், கருத்துக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. தரமானவை துறைசார்ந்த நிபுணர்களின் பதில்களுடன் வலம்புரியில் வெளியாகும்.

**அனுப்பவேண்டிய முகவரி : சாந்திகம் ஊடகக்குழு,**
**8, 8/1 கற்பகவிநாயகர் ஒழுங்கை,**
**கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.**

மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும் கேள்விகளும் கருத்துக்களும் ஏற்றுக்கொள்ளப்படும்:

Email: psych@sltnet.lk Face book : Shanthiham

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரவதை

# அதன் பின் கொலை!

சேஷாத்ரி, நீலாத்ரி, கருடாத்ரி, அஞ்சனாத்ரி, விருஷபாத்ரி, நாராயணாத்ரி, வேங்கடாத்ரி... ஆகிய ஏழு சிகரங்களைக் கொண்ட மலையில் இருப்பதால்தான் ஏழுமலையான் என்று அழைக்கப்படுகிறார் கடவுள். ஏழு மலைகளில் முதல் மலையான சேஷாத்திரி மலைப்பகுதியில்தான், செம்மரக் கடத்தல் கும்பல் என்று சொல்லி ஈவு இரக்கமில்லாமல் அப்பாவித் தமிழர்கள் 20 பேரை வேட்டையாடி இருக்கிறார்கள் ஆந்திர பொலிஸார்.

வாரிமெட்டு என்ற அந்தப் பகுதியில் தமிழர்கள் 20 பேரின் உடல்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிதறிக்கிடந்தன. 20 பேரின் உடல்களுக்குப் பக்கத்திலும் தலா, ஒரு செம்மரக்கட்டை வைக்கப்பட்டிருந்தது. இறந்தவர்களின் உடல்களில் கை, கால், பாகங்களில் தீக்காயங்களின் அடையாளங்கள் அப்பட்டமாகத் தெரிகின்றன. பலரின் உடல்கள் தீயிட்டு கருக்கப்பட்டுள்ளன. சுடும் போது தீக்காயம் எங்கிருந்து வந்தது? ஆந்திர அரசிடம் பதிலில்லை.

கொல்லப்பட்டவர்களில் மூர்த்தி, மகேந்திரன், பெருமாள், முனுசாமி, பழனி, சசிகுமார், முருகன், கோவிந்தசாமி, சின்னசாமி, டெல்லி முத்து, ராஜேந்திரன், பன்னீர் செல்வம் ஆகிய 12 பேரும் திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அரிகிருஷ்ணன், வெங்கடேஷ், சிவகுமார், அரசநத்தம் லட்சுமணன், கலசபாக்கம் லட்சுமணன், வேலாயுதம், சிவலிங்கம் ஆகிய 7 பேரும் தர்மபுரி மாவட்டத்தை சேர்ந்தவர்கள். ஒருவர் சேலத்துக்காரர். இவர்களது உடல்கள் லொறிகள் மூலம் திருப்பதி அரசுப் பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது. பிரேத பரிசோதனை அறை ஆந்திர பொலிஸாரின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. யாரையும் அந்தப் பகுதிக்குள் அனுமதிக்கவில்லை.

முனுசாமியின் அம்மா பத்மா வயிற்றில் அடித்துக் கொண்டு, 'இது எல்லாத்தையும் ஏழுமலையானே நீ பார்த்துட்டுத்தானே இருக்கே... நீதான்யா நீதி கொடுக்கணும்' என்று கதறினார். உடலை வாங்க வந்தவர்களுக்கு ஆந்திர அரசு சார்பில் உணவுகள் தயாராக வைக்கப்பட்டிருந்தன. அவர்களை ஆந்திர அதிகாரி ஒருவர், சாப்பிட அழைத்தார். 'பொழைக்க வந்தவங்களைச் சுட்டுக் கொன்னுட்டு சாப்பிட கூப்பிடுறியா... போய்யா... நீங்களும் உங்க சாப்பாடும்' என்று திட்டியபடி யாரும் அந்தப் பக்கம் திரும்பவே இல்லை.

காங்கிரஸ் கட்சியின் திருப்பதி தொகுதி முன்னாள் எம்.பி. சிந்தாமோகன் அங்கே வந்தார். அவரிடம் பேசினோம். "இது போலி என்கவுண்டர். நீதி விசாரணை வேண்டும். செம்மரக் கடத்தலைத் தடுக்க வேண்டுமானால், உண்மையான கடத்தல்காரர்களைச் சுட வேண்டும். அப்பாவி கூலித் தொழிலாளிகளைச் சுடுவது எந்தவிதத்தில் நியாயம்? இது திட்டமிட்ட படுகொலை. என்கவுன்டர் நடப்பதற்கு முன்பு சந்திரபாபு நாயுடு திருப்பதி வந்துள்ளார். அவரது உத்தரவின் பேரில் தான் இந்தச் சம்பவம் நடந்திருக்க வேண்டும்" என்று ஆக்ரோஷமாக.



## தமிழர் நிலை இதுதான்

சிவில் லிபர்ட்டி கமிட்டி மாவட்டப் பொருளாளர் லதாவிடம் பேசினோம். "திருவண்ணாமலையைச் சேர்ந்த 8 பேர் மரம் வெட்டும் தொழிலுக்காக ஆந்திராவை நோக்கி பேருந்தில் வந்துள்ளனர். அப்போது நகாப் பகுதியில் சேகரை தவிர, ஏனைய 7 பேரை விசாரணை என்று பொலிஸார் காட்டுக்குள் அழைத்துச் சென்று சுட்டுள்ளனர். அதன் பிறகே மரம் கடத்தும்போது சுட்டதாக நாடகமாடுகிறார்கள். இதில் தப்பிய சேகர் இதற்கு சாட்சியாக உயிரோடு இருக்கிறார். அவரை தேசிய மனித உரிமைகள் ஆணையம் முன்பு நிறுத்தி ஆந்திர பொலிஸாரின் முகத் திரையைக் கிழிப்போம்" என்று கோபத்துடன் சொன்னார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் மாவட்ட செயற்குழு உறுப்பினர் ரவி, "சம்பவம் நடந்த பகுதிக்கு நேரில் சென்று விசாரித்தோம். இறந்தவர்களின் உடலில் முன்பகுதியிலேயே குண்டுகள் துளைத்துள்ளன. மேலும் உடல்கள் கிடந்த இரண்டு இடங்களிலும், உடல்கள் குவியலாகவே கிடக்கின்றன. உண்மையாக என்கவுண்டர் நடந்திருந்தால் பொலிஸார் துப்பாக்கியால் சுட்டதும் தொழிலாளர்கள் ஆளுக்கொரு பக்கம் சிதறி ஓடி இருப்பார்கள். உடல்களும் ஆங்காங்கே கிடந்திருக்கும். மேலும் ஒவ்வோர் உடலின் அருகிலும் கட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. அந்தக் கட்டைகளைப் பார்த்தால், ஏற்கனவே பறிமுதல் செய்யப்பட்டதைப்போல இருக்கின்றன. ஒரே நேரத்தில் ஆடு, மாடுகளைப்போல அப்பாவித் தமிழர்களைச் சுட்டுக் கொலல பொலிஸாருக்கு யார் அதிகாரம் கொடுத்தது. விலங்குகளைச் சுட்டுக் கொன்றால்கூட குரல் கொடுக்க அமைப்புகள் இருக்கின்றன. ஆனால், பிழைப்புத் தேடி வந்த தமிழர்களை அநியாயமாகக் கொன்றுவிட்டது ஆந்திர பொலிஸ். இதற்கு ஆந்திர அரசு பதில் சொல்லியே தீர வேண்டும்" என்று கொந்தளித்தார்.

ஆந்திர பொலிஸ் வட்டாரத்தில் விசாரித்தோம். "சரண்டர் அடையாததாலும் தொடர்ந்து எங்களைத் தாக்கியதாலும் என்கவுன்டர் நடத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இறந்தது தமிழர்கள் என்பது எங்களுக்குத் தெரியாது. கடத்தல் கும்பலைச் சேர்ந்தவர்கள் என்றுதான் துப்பாக்கிச் சூடு நடத்தினோம். செம்மரங்களை வெட்டக் கூடாது என்று பலமுறை எச்சரித்தும் தொடர்ந்து மரம் வெட்டவும் கடத்தவும் தொழிலாளர்களைத் தங்கு தடையின்றி புரோக்கர்கள் அழைத்து வருகிறார்கள். இந்த ஓராண்டில் மட்டும் 2 ஆயிரம் பேரை கைது செய்திருக்கிறோம். தொழிலாளர்களை அழைத்து வரும்புரோக்கர்கள் குறித்த விபரங்களையும் கடத்தல் புள்ளிகள் குறித்த விபரங்க ளையும் சேகரித்து வருகி றோம். விரைவில் அவர்கள் மீதும் நடவடிக்கை எடுப் போம். ஆந்திராவின் சொத்தான செம்மரங்களை வெட்டி கடத்துவதைத் தடுக்கவே முதல்வர் சந்திரபாபு நாயுடு உருவாக்கிய சிறப்புப் படை இது" என்று சொல்கிறார்கள்.

உண்மையான கடத்தல்காரர்கள் யார் பாதுகாப்பிலோ இருக்க... 'மரம் வெட்டும் தொழிலுக்கு வாருங்கள்' என்று அழைத்துச் செல்லப்பட்ட அப்பாவிகள் பலியாகிக் கிடக்கிறார்கள். ஆந்திர பொலிஸாரின் அராஜகத்தை மத்திய அரசுதான் விசாரிக்க வேண்டும்!

**ஜூனியர் விகடன்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அநாதை

## சிறுகதை

அந்தத் தப்பான உறவுதான் இத்தனைக்கும் காரணமாய் போய் விட்டது. மனம் நொந்து நொந்து விழிவழியே கண்ணீரைச் சுரந்து கொண்டு தன்மேல் ஏற்பட்ட மாசைத் துடைத்தெறிய முடியாமல் தவித்து வேதனைப்பட்டுக் கொண்டே காலம் கடத்தும்படியாகிவிட்டது. இனி என்ன தான் செய்ய முடியும். தலைக்கு மேல் வெள்ளம் வந்துவிட்டது. அந்தத் திருமணமாகாத பெண்ணின் உள்ளம் தேற்றிக் கொள்ளத் தெரியாமல் தெரிந்த, முடிந்தளவு தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்கின்றது. அடிக்கடி எந்தப் பெண்ணிற்கும் இப்படி நடக்கக்கூடாது என்ற மனவேதனை மனதோடு... ஓயாமல்... ஒலித்துக் கொண்டே இருந்தது.

அன்று அவனைக் காணாமல் இருந்திருந்தால் இப்படி ஏதும் நடந்திருக்காது. அவன் என்மீது அன்பு வைத்துள்ளான் என்றும் உயிரையே எனக்குத் தருவான் என்றும் நினைத்தது எவ்வளவு பெரிய முட்டாள்தனம். அவனை நம்பியது எந்தளவிற்கு பெரிய தப்பு. ச்சீ... என்ன மனிசன் அவன் என்றெல்லாம் பொருமிக் கொள்கின்றாள்.

அப்போது அவள் கண்களில் அன்றைய நாளிதழ் பட்டது. அதனை எடுத்துப் படித்த போது அங்கு கண்ட சிறு செய்தி அவள் கவனத்தை தன் பக்கம் ஈர்த்தது. அது நாளிதழில் சிறுசெய்தியாக இருந்தாலும் அவளுக்குப் பெரும் செய்தி.

அவள் பெயர் காயத்திரி. கண்டவரைக் கவர்ந்திழுக்கும் அழகுப் பெண். திரும்பிப் பார்க்காத ஆண்களே அரிது என்றால் சொல்லவும் வேண்டுமா? ஆனால் அவள் மனதில் யாருமே இல்லை. உள்நுழையவும் முடியவில்லை. அவளுக்கென்று ஒரு குடும்பம், தாய், தந்தை, தம்பி எல்லோரும் வெளிநாட்டில். காயத்திரியும் அவள் தங்கையும் சொந்த வீட்டில் சுதந்திரமாய்ச் சுற்றித்திரியும் ஜோடிப் பறவைகளாக.. தோழியொருத்தி உடன் பிறவா சகோதரிபோல இன்பத்திலும் துன்பத்திலும் பங்கெடுக்கும் அற்புதப்பிறறி.

சைக்கிளில் ஊர்சுற்றுவதென்றால் அதில் ஓர் அலாதிப்பிரியம் தான். அன்று அவள் வீதியில் செல்லும் போது... தெரியாமல் மோதி சிறுசிறு காயங்களை ஏற்படுத்தி விட்டு பேந்தப்பேந்த விழிக்கும் இளைஞனைக் கண்டு கோபமாக எரித்துவிடுவதுபோல் பார்த்தாள்.

அந்த இளைஞன் இடித்து விழுத்திய அவள் சைக்கிளை தூக்கி நிமிர்த்தி வைத்துவிட்டு மன்னிக்கவும் தெரியாம மோதிட்டன் என்று மன்னிப்புக் கேட்டான். அதன்பிறகு அடிக்கடி அவனை வீதிகளில் காயத் திரி சந்திப்பாள். காயத்திரியைக் கண்டதுமே அவன் முகத்தைப் பார்க்க வேண்டுமே... சில வேளை மன்னிப்புக்கேட்பதுபோல அல்லது பார்த்தும் பாராதது போல பாசாங்கு செய்து கொண்டே நழுவி விடுவான். ஒரு வேளை அவளை ஈர்த்த காரணங்களில் இதுவும் ஒன்றாக இருக் கலாம். அந்தக் குறும்புச் செயல்கள் மனதினுள் சிரிப்பை ஏற்படுத்தின. ஒரு முறை அது முகத்தில் மலர்ந்தது. அடக்கமாட்டாமல் சிரித்த சிரிப் பொன்று அவன் மனம் தொட்டிருக்கும். அதுவே இருவருக்குள்ளும் நெருக்கத்தை ஏற்படுத்தியது காத லாக மலர்ந்தது.

காதல் மயக்கத்தில் இன்னவன் யாரென்று உணராமல் அவன் சொல்வதே வேதம் என்றெண்ணியது பேதை மனம். அவன் என்னுடன் இருக்கின்றான். என்னுடலாய் இருக்கின்றான். என்னுயிராய் இருக்கின்றான். எதற்காகவும் தன்னை இழக்கத் துணியமாட்டான்..

என்றெல்லாம் நொடிக்கொரு சிந்தனை, நாளுமொரு பேச்சு, வைராக்கியத்துடன் திரிந்த மனது உடைந்தது சில நாட்களில் தெரிய வந்தது.

அறியாது வழியில் சந்தித்தவன் தன்னுயிர் நீதானென்றவன் அவளுக்கோர் உயிர் கொடுத்து விட்டு ஓரமாய் தூரமாய்ப் போய்விட்டான். நிர்க்கதியாய் நின்றவள் அவனைத் தேடியலைந்தபோதுதான் உண்மைகள் புலப்பட்டன அவன் முற்றும் சொன்னது பொய்கள் என்று. எனினும் தேடாத இடமும் இல்லை. வாடாத நாளும் இல்லை. சளைத்துப் போயிற்றாள். களைத்துப் போயிற்றாள். ஆனால் விடமுடியாத அவதிப்போராட்டம்.

காயத்திரி கருவுற்ற விடயம் வீட்டுக்குத் தெரியாமல் இருந்தது. அதுவும் எத்தனை காலத்திற்கு வெளி நாட்டில் இருக்கும் பெற்றோருக்குத் தெரியாமல் போனாலும் என்னவள் தங்கைக்குத் தெரியாமல் போகாதே. அவள் எனைப் புரிந்து கொள்வாள் என்றெண்ணினாள்.

நாள் எண்ணி உடல் மாற்றம் தோன்ற உண்மை பேச வேண்டிய தருணம் வந்தது. அவள் மேல் கூச்சல் போட்டனர். தோழியும் தங்கையும் அவள்நிலைபரிதாபத்திற்குரியது.

பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் நிலையில் காயத்திரி என்ன செய்வதென்று யோசனை... தீர்வொன்றை எடுக்க முடியாது தவித்தனர். குழந்தையை அழித்து விடலாமா? இல்லை ஓர் உயிரை அழிக்க விடாமல் அவள் தடுத்தாள். அப்படியே அழிக்க நினைத்தாலும் அவளுக்கு ஆபத்தை தேடித்தரும்.

காயத்திரியின் கரு வளர்ச்சியடைந்து உயிராய் மண்ணிலே உருவெடுத்தது. தவறு செய்து விட்டேன்... தவறு செய்து விட்டேன்... மூளையைக் கசக்கித் தீர்வெடுத்தே ஆக வேண்டும்.

என்னதான் செய்தாலும் இது எம்முடன் வளர மட்டும் முடியாது. அது உறுதி. தாய், தந்தை வெளி நாட்டில் என்பதால் எதுவும் தெரிய வாய்ப்பில்லை. அதற்குமுதல் பின்னாளில் இன்னோரன்ன பிரச்சினைகள் வருமே... ஏதாவது செய்ய வேண்டும். யாருக்காவது கொடுத்து விடுவோமா? இல்லை அது கூடாது. கொடுத்தால் தெரிந்து விடும். அப்படியானால் என்ன முடிபு.

ஏன்டி இப்படிச் செய்தால் என்ன? தோழி ஒரு யோசனை கூறுகின்றாள். காயத்திரியின் முகத்தில் ஓர் பிரகாசம்'' என்ன சொல்கின்றாய்?

''யாருக்கும் தெரியாமல் எங்காவது போட்டுவிடு''

பிரகாசித்த முகத்தில் ஓர் வாட்டம் ஒளி இழந்த விளக்கைப்போல முகில் மறைத்த சந்திரன் போல...

நான் செய்த தப்புக்காகக் குழந்தையை வீசுவதா? மனதில் எண்ணங்கள். முடியாது.

என்னடி முடியாது என்று சொல்கிறாய். இப்போ இப்படி நாட்டில் நிறைய நடக்குதடி. நீ பயன்பிடாத யாராவது கொண்டு போய் வளர்ப்பாங்க. இல்ல என்னால முடியாது.

அடி உன்னை குப்பையில போடச் சொல்லேல்ல. நல்ல சனம் புழங்குகிற பகுதியில் போடு.

"அது ஓர் உயிர்"

உன்னைக்கொல்லச் சொல்லேல்ல சரியோ. எனக்கென்ன வந்தது. நாளைக்கு உனக்குத்தான் கெட்ட பெயர். நீயும் உன் குழந்தையும் என்று சினந்து கொண்டாள்.

அக்கா உன் நல்லதுக்குத்தானே சொல்றா... என்று அதுவரையும் பேசாதிருந்த தங்கை தம் குடும்பச் சூழலைச் சொல்லிச் சம்மதிக்க வைக்கிறாள்.நள்ளிரவு.... யாருக்கும் தெரியாமல் ஒரு கோயில் அருகில் வந்து சேர்ந்தனர். யாரும் கண்டு பிடிப்பதற்கு முதல் குழந்தையை கோயில் மதில் கரையோரம் கிடத்தி விட்டு வந் தார்கள்.

கிடத்தி விட்டு வரும் போது இயல்பான தாய்ப்பாசம் பொங்கிவர கண்கள் கலங்கியடி மீண்டும் ஓடிச் சென்றுமுத்தமிட்டுவிட்டுதிரும்பினாள்.

நல்லுறக்கத்தில் குழந்தை மதில் கரையைத் தஞ்சமெனக் கொண்டிருந்தது. பிரிய மனமில்லாமல் போகும் போது கண்கள் குழந்தையை நோக்கிக் கொண்டது அடிக்கடி...

வழமையிலும் மாறாக மழை முகில்கள் முற்றும் சூழ்ந்திருந்தன. வீட்டுக்கு வந்த பின்னர் தோழியும் தங்கையும் அவளை விட்டு விலகி விட்டனர். தனிமையில் காயத்திரியின் மனமோ துடித்தது. பதைபதைத்தது. நினைவெல்லாம் அந்தக் குழந்தை மீது அந்தப் பிஞ்சின் மீது.

என் குழந்தை இப்ப கத்திக்கிட்டு இருக்குமா? ஐயோ! தனிமையில் என்ன நிலையோ? மழை வரும் போல் இருக்கிறதே... கடவுளே இந்த உதவியை மட்டும் செய்யென கெஞ்சுகின்றேன். மழை இன்று வராமல் தடுப்பாயாக... நான் என்ன செய்வேன். இந்நிலையில் கண்கள் அலை கடல் போல அடிக்கடி அடித்தோய்ந்தது கண்ணீராய்... என் குழந்தைக்கு ஏதும் நேரக்கூடாது.

காலை நேரம்...

நேற்று நடந்த சம்பவங்கள் மனதில் நிழலாட உறக்கம் கெட்டு இருந்தவள் சற்றே கண்ணயர்ந்து எழுந்தபோது விடிந்து விட்டது. அப்போதுதான் அந்தச் செய்தித்தாள் கண்ணில் படுகின்றது.



என்ன செய்தியது.

'' நேற்று கோவில் ஒன்றுக்கருகில் தம் குழந்தையை வீசிவிட்டு எவரோ ஒருவர் சென்றுவிட்டார். அது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொள்கின்றனர். மேற்படி கண்டெடுக்கப்பட்ட பச்சிளம் சிசு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளது. விரைவில் அநாதைகள் இல்லம் ஒன்றிற்குப் பாதுகாப்பாக அனுப்பப்படும் என்பது தான். தன் குழந்தை பாதுகாப்பாக இருக்கிறது என்று மனம் மிகவும் களிப்படைந்தது. ஆனால் அந்த மகிழ்ச்சி காற்றில் அணைந்த விளக்காயப் போனது.

துக்கம் தொண்டையை அடைக்க வாயிலே முணுமுணுக்கப்பட்ட வார்த்தைகள் தான் அவளது மகிழ்ச்சிக்கு ஊறுவிளைவித்த சங்கதியாய்ப் போனது.

"என் குழந்தை அநாதை"

"அநாதை..."

**பு.பிரசாந், அல்லைப்பிட்டி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்ணீர் தண்ணீர்



இப் பிரபஞ்சத்திலே முதன் முதல் தோன்றி உயிரினம் நீர்வாழ் உயிரினம்தான் என்று விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்படுவதற்கு முன்பே மெய்ஞ்ஞான ரீதியாகவும் கூறப்பட்டுள்ளது. அது மாத்திரமல்ல இப் பூவுலகில் ஏறக்குறைய முக்கால் பங்கைக் கொண்டிருப்பதும் நீரே. இவ்வளவு அதிகபடியான நீர் இருப்பதாலேதான் அது தினமும் படிப்படியாக ஆவியாகி மேலெழுந்து கடல்காற்றின் உதவியால் தரைப் பகுதிக்கு கூடிய அளவில் உந்தப்பட்டு மழையாகப்பெய்கிறது. தரைப பகுதியை நனைத்து அதைச் செழிப்பாக்க ஏராளமான அளவில் நீர் தேவைப்படுகிறது. அதனாலேதான் அதிக அளவில நீரைப் படைத்தான். இறைவனின கருணைதான் என்னே!

நாட்டில் அரசனிடமும் மக்களிடமும் நீதி, தர்மம், நல்லொழுக்கம், இறைபக்தி,விருந்தோம்பல் மேலோங்கினால் மாதம் மும்மாரி பொழிந்து நாடு செழிப்புறும். வறுமை நீங்கும் மக்கள் செல்வச் செழிப்புடன் வாழ்வார்கள். மனதில் சந்தோஷம் எழும். நிம்மதியான வாழ்க்கை வாழ்வார்கள். மக்களிடையே நல்லொழுக்கம், ஈகை, விருந்தோம்பல், ஒப்பரவு அறிதல் போன்ற நற்பண்புகள் மேலோங்கும். இவைக்கு மூல காரணம் நீரே. இதனை திருவள்ளுவப் பெருமான் கடவுள் வாழ்த்துக்கு அடுத்த அதிகாரத்திலேயே வான் சிறப்பைப் பற்றி கூறியுள்ளார்.

"வான் நின்று உலகம்
வழங்கி வருதலால்
தான் அமிழ்தம்
என்ணுரற்பாற்று"

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்
கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை"

மழை பெய்வதனாலே தான் உலக உயிர்கள் வாழ்கின்றன. ஆதலால் மழையே உயிர்களுக்கு "அமிர்தம்" என்று உணரத்தகும். உண்பவர்களுக்கு தகுந்த பொருட்களை விளைவித்துத் தந்து அவற்றைப் பருகுவார்க்கு தானும் ஒரு உணவாக (பருகும் நீராக) விளங்குவதும் மழையே ஆகும்.

ஒரு நாட்டில் அநீதி, அதர்மம், கூடா ஒழுக்கம், நாஸ்திகம் மேலோங்கினால் அந் நாட்டில் மழையே பெய்யாது. கடும் வறட்சி ஏற்பட்டு பயிரினங்கள் வாடி வதங்கிவிடும். நாட்டில் உணவுப் பஞ்சம் ஏற்படும். மக்கள் பட்டினியாலும், நோய் நொடிகளாலும் ஆயிரக்கணக்கில் மாள்வார்கள். கூடாவொழுக்கம் மேலோங்கும்.

"விண்ணின்று பொய்ப்பின்
விரிநீர் வியனுலகத்து
உள்நின்று உடற்றும் பசி."

"நீர் இன்று அமையாது
உலகெனின் யார்யார்க்கும்
வான் இன்று அமையாது
ஒழுக்கு"



மழை காலத்தால் பெய்யாது பொய்க்குமானால் கடலால் சூழப்பட்டுள்ள இப்பரந்த உலகினுள் பசி நிலைபெற்று உயிர்களை வாட்டும்.

நீர் இல்லாமல் எத்தகையோர்க்கும் உலக வாழ்க்கை அமையாது என்றால் மழை இல்லாமல்ஒழுக்கமும்நிலை பெறாது.

மனித உயிர்களுக்கு மாத்திரமல்ல உலகில் சகல உயிர்களுக்கும் நீர் அவசியமாகிறது. அநேகமாக ஒவ்வொரு உயிர் வாழ் அங்கியும் ஏறக்குறைய முக்கால் பங்கு நீரைக் கொண்டிருக்கிறது. மனித உடலிலும் 70 % நீரும், இரத்தத்தில் 90 % நீரும் உள்ளது. நீர் போதியவு இல்லாவிட்டால் இரத்தோட்டம் தடைப்பட்டு உயிரினங்கள் இறக்க நேரிடும். உடலுக்கு நீர் இன்றியமையாதது போல நம் அன்றாட தேவைக்கும் நீர் இன்றியமையாதது. குடிக்கவும், உணவு சமைக்கவும், குளிக்கவும், ஆடைகள், பொருட்கள் போன்றவைக ளைக் கழுவவும், பயிர்களுக்கு இறைக்கவும் நீர் பெருமளவில் தேவைப்படுகிறது. இவைமாத்திரமல்ல தெய் வீக நிகழ்வுகளுக்கும் நீர் முதலிடம் பெறுகிறது. ஓர் கோயிலைக் கட்டுவதற்கும், அக் கோயிலைக் கழுவிச் சுத்தம் செய்வதற்கும், கும்பாபிஷேகம் செய்வதற்குரிய தீர்த்தங்களை நிரப்புவதற்கும் அபிஷேகங்கள் செய்வதற்கும், இறைவனுக்கு அர்க்கியம் சமர்ப்பிப்பதற்கும், தீர்த்தம் வழங்குவதற்கும் உபயோகமாவது நீரே. தெய்வீக நிகழ்வுகளில் பங்குபற்றியவர்களுக்கும், விரதமிருப்பவர்களுக்கும் நீராகாரம் வழங்க, தண்ணீர்ப் பந்தல்கள் அமைக்கப்பட்டு, சர்க்கரைத் தண்ணீர், மோர், ஊறுகாய்த் தண்ணீர் போன்ற சகல பானங்களையும் தயாரிக்க வேண்டுவதும் நீரே, நீராகாரம் பருகியவுடன் களைப்பு நீங்குகிறது. உற்சாகம் பிறக்கிறது. இப்படியே கூறிக்கொண்டே போகலாம். ஓர் உயிர் உணவின்றிப் பலகாலம் வாழலாம். ஆனால் நீரின்றி சில நாட்களேதான் வாழ முடியும்.

இப்படி நீரின் மகத்துவத்தை அறிந்த நாம் நீரை வீணாக்கலாமா, நீரைச் சிக்கனமாகப் பாவிக்க வேண்டுமல்லவா! இதைக் கடைப்பிடிப்பது ஒரு சிலர் மட்டுமே. பல நாடுகளில் நீருக்குப் பற்றாக் குறை ஏற்படுகிறது. குளிப்பதற்குக் கூட நீர் கிடைப்பதில்லை. குடிப்பதற்கு நன்னீரைப் பெற மைல் கணக்கில் பயணம் செய்து தலையிலும் இடுப்பிலுமாக பானைகளில் நீரைச் சுமந்து வருவதை நாம் தொலைக் காட்சி, பத்திரிகைகள் மூலமாக அறியக் கூடியதாக இருக்கிறது. இப்படியான சூழலில் வாழ்பவர்கள் எப்படி நீரைச் சிக்கனமாகப் பாவிப்பார்கள் என்பதை நாம் கற்பனை பண்ணிப் பார்க்க வேண்டும்.

உலகம் போற்றும் உத்தமர் மகாத்மா காந்தி கூட ஒரு வாளி தண்ணீரில் தன் உடலையும் கழுவி, தன் ஆடைகளையும் கழுவிவிடுவாராம். பராக்கிரமபாகு மன்னன் ஆகாயத்தில் இருந்து விழும் நீரைப் பிரயோசனப்படுத்தாமல் ஒரு சிறு துளி நீரைக்கூட கடலை அடையவிட மாட்டேன் என்று கூறி, பல நீர்த் தேக்கங்களையும், அணைகளையும் கட்டி நீர்ப்பாசனத்திற்குப் பெரும் பங்காற்றினான். மக்கள் அம்மன்னனைக் கடவுளென மதித்து வணங்கினார்களாம் என்று வரலாறு பகர்கிறது.

நீரைச் சிக்கனமாகப் பாவிப்பதற்கு பல வழிகள் உண்டு. எம் உடலைக் கழுவுவதற்குத் தேவையான அளவு நீரையே பாவிக்க வேண்டும். சிலர் கிணற்றிலிருந்து வாளியால் அள்ளிய நீரை அப்படியே பளார் என்று தலைமேல் வார்ப்பார்கள். முக்கால் பங்கு நீர் வீணே வெளியில் கொட்டி விடப்படும். கால்பங்கு நீரே உடலில் படும். குளிப்பதற்கு நாம் ஒரு தொட்டியிலோ அல்லது பெரும் பாத்திரத்திலோ நீரை நிரப்பி சிறு பாத்திரத்தால் எமது உடல் படு மளவிற்கு மெதுவாகக் குளிப்பதே சிறந்த முறையாகும். அது வசதிப்படாதவிடத்து கிணற்று நீரை வாளியால் அள்ளி மெதுவாக உடலில் வார்க்கலாம்.

வீட்டில் மரக்கறிகள், பாத்திரங்கள் கழுவிய நீரை வீணே செல்லவிடுகின்றோம். இவைகளைப் பெரும் வாளிகளில் சேமித்த வீட்டில் வளர்க்கும் பயிர்களுக்கு ஊற்றினால் பிரயோசனப்படும். சவர்க்காரம் கலவாத ஆடைகள் கழுவிய நீரையும் பயிர்களுக்கோ அல்லது மலலச கூடங்களைக் கழுவுவதற்கோ பாவிக்கலாம். வீட்டின் கூரையில் விழும் மழை நீரை நாம் பீலிகள் வைத்து அவற்றைப் பெரிய அண்டாக்களில் சேமித்து ஆடைகள் கழுவுவதற்கும், மலசல கூட தேவைகளுக்கும் பாவிக்கலாம். அல்லது அவற்றை வாய்க்கால்கள் மூலம் பயிர்களுக்குப் பாய்ச்சினால் இரட்டிப்பு நன்மை கிடைக்கும். இப்படியான நிகழ்வுகள் ஒரு சில இடங்களில் மாத்திரமே நடைபெற்று வருகின்றன. அவை மிகவும் வரவேற்கத் தக்கன.

மழைநீர் வடிகட்டிய நீராகக் கருதப்பட்டு வைத்திய தேவைகளுக்கும் பாவிக்கப்படுகின்றன. சுத்தமான மழைநீரை நாம் பெறுவதற்கு வெட்டவெளியான இடத்தில் நீண்ட நான்கு கம்புகளை சற்சதுர அல்லது நீள்

சைவப் புலவர்
அம்பலவாணர்
இராஜரட்ணம்

சதுர வடிவில் நாட்டி நன்கு தூய்மையான வெள்ளைத் துணியின் நான்கு மூலைகளையும் கம்ப நுனிகளில் கட்டி, துணியின் நடுமையத்தில் நன்கு சுத்தமான கண்ணாடி உருளையைப் போட்டால் அத்துணி புனல் வடிவமாக அமையும். கண்ணாடி, உருளையின் கீழ் சற்று உயரமான ஒரு வாளியை வைத்துவிட வேண்டும். மழை பெய்யும்போது துணியின் மேற்பரப்பில் விழும் மழைநீர் எல் லாம் கீழ் நோக்கி ஓடி வாளியில் விழும். துணி ஒரு வடியாகப்பாவிக்கப் படுவதால் மிகவும் சுத்தமான நீரை அதிக அளவில் பெறலாம்.

மேற்கூறிய முறைகளைப் பயன்படுத்துவதால் நகர்ப்புறங்களில் வசிப்பவர்களின் தண்ணீர் சிட்டைவரியும் குறைவடையும். குறைந்த செலவில் நிறைந்த பலனைப் பெறலாம். நாட்டுப்புறங்களில் வசிப்ப வர்களது மனித வலு குறை வடைநது அதிக நன்மை பெறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள் ...

படம் : தில்லானா மோகனாம்பாள் (1968)
இசை : கே.வி. மகாதேவன்
பாடியவர் : பி. சுசீலா




மறைந்திருந்து பார்க்கும் மர்மம் என்ன சுவாமி
மறைந்திருந்து பார்க்கும் மர்மம் என்ன
அழகர் மலை அழகா இந்தச்
சிலை அழகா என்று
மறைந்திருந்து பார்க்கும் மர்மம் என்ன

நவரசமும் முகத்தில் நவரசமும்
மலர்ந்திருக்கும் முகத்தில் நவரசமும்
செக்கச் சிவந்திருக்கும் இதழில் கனிரசமும்
கண்டு மறைந்திருந்து பார்க்கும் மர்மம் என்ன

எங்கிருந்தாலும் உன்னை நான் அறிவேன்
உன்னை என்னை அல்லால் வேறு யார் அறிவார்
பாவை என் பதம் காண நாணமா
உந்தன் பாட்டுக்கு நான் ஆட வேண்டாமா
மாலவா வேலவா மாயவா சண்முகா
மறைந்திருந்து பார்க்கும் மர்மம் என்ன

நாதத்திலே தலைவன் குழல் கேட்டேன்
அந்த நாணத்திலே என்னை நான் மறந்தேன்
மோகத்திலே என்னை மொழ்க வைத்து
ஒரு ஓரத்திலே நின்று கள்வனைப் போல்
மாலவா வேலவா மாயவா சண்முகா
மறைந்திருந்து பார்க்கும் மர்மம் என்ன

மானாட மலராட மதியாட நதியாட
மங்கை இவள் நடனமாட
வானாட மண்ணாட கொடியாட இடையாட
வஞ்சி இவள் கைகளாட
சுவையோடு நானாட எனை நாடி இது வேளை
விரைவினில் துணையாக ஓடி வருவாய்
தூயனே மாலவா மாயனே வேலவா
எனையாளும் சண்முகா வா
மறைந்திருந்து பார்க்கும் மர்மம் என்ன
அழகர் மலை அழகா இந்தச்
சிலை அழகா என்று
மறைந்திருந்து பார்க்கும் மர்மம் என்ன

இப்பாடலை
SMS மூலம் விரும்பிக் கேட்டவர்கள்:
வனிதா நகுலேஸ்வரன்
பிரதான வீதி, வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.
Jaffna boys எல்லோருக்குமாக
J.சஞ்சயன்,செங்குந்த வீதி,
கல்வியங்காடு.
A.விதுசன்,சுன்னாகம்
எனது குடும்பத்தினருக்காக S.ஐங்கரன்
ஆதி கோவிலடி, வல்வெட்டித்துறை
சாரங்கன் ஜானகி,நெல்லியடி
அனைவருக்காகவும் எஸ். சாந்தன்
மருதடி காரைநகர்
அப்பா தவலிங்கம் அவர்களுக்காக
தங்கை லோஜிதா-பருத்தித்துறை
விஜயன்,நெல்லியடி.
அனு எஸ். பாரதிதாசன்
பிருந்தாவனம்,அல்வாய்
நிறோஜினி,பருத்தித்துறை.

**அன்பு வாசகர்களே !**

காலத்தால் அழியாத கானங்கள் பகுதிக்கு, தங்களுக்கு விருப்பமான பழைய பாடல்களின் முதற்பந்தியுடன் அப்பாடலை யாருக்காக விரும்பிக் கேக்கிறீர்கள் என்பதையும் குறிப்பிட்டு, உங்கள் பெயர் முகவரி என்பனவற்றை ஆசிரியர், காலத்தால் அழியாத கானங்கள், வலம்புரி - சங்குநாதம், இல.3. 2 ஆம் ஒழுங்கை, பிறவுண வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவை ங்கள்.

அல்லது 021-5671543 என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள். நீங்கள் விரும்பும் பாடல் இப பகுதியில் முழுமையாக பிரசுரமாக்கப்படும்.

## வலிப்பு நோய்; அவதானம் தேவை!

இடது கண் துடித்தால் நல்லது நடக்கும், கை அரித்தால் பணம் வரும், புரை ஏறினால் யாரோ நம்மை நினைக்கிறார்கள் என நம் உடல் மாற்றங்களுக்கு பேச்சு வழக்கில் பல்வேறு காரணங்களைச் சொல்வார்கள்?. இதை அப்படியே நம்புபவர்கள் இன்னமும் இருக்கிறார்கள். இதெல்லாம் உண்மையா? இதற்கான அறிவியல் காரணங்கள் என்ன?

யாருக்காவது வலிப்பு வந்தால் கையில் சாவிக்கொத்து அல்லது இரும்புக் கம்பியைத் திணிப்பார்கள். இந்தக் காட்சியை சினிமாக்களில் அடிக்கடி பார்த்திருப்போம். சாவியை கையில் வாங்கியதும் வலிப்பு கொஞ்சம், கொஞ்சமாக சரியாகிவிடும். இது உண்மையா? இரும்பைக் கையில் கொடுத்தால் வலிப்பு சரியாகிவிடுமா? வலிப்பு நோய் ஏன் வருகிறது ?

மூளையின் நரம்பணுக்கள் நியூரான்ஸ் (Neurons) என்று அழைக்கப்படுகின்றன. மூளை, நரம்புகள், நரம்பணுக்கள் போன்றவற்றில் மின்னோட்டம் சென்று கொண்டிருக்கும். இது இயல்பு. தானாகவோ, காரணமே இல்லாமலோ, அதிகபடியான மின்னோட்டம் நரம்பணுக்களில் பாய்ந்தால், வலிப்பு வரும். அதாவது நரம்பணுக்களின் இயல்பான நிலையிலிருந்து அதிகபடியான மாற்றங்கள் ஏற்பட்டால், அதுவே வலிப்பு நோய்.

கை, கால், வாய் போன்றவை கோணலாக இழுத்துக் கொள்வது மட்டும் வலிப்பு அல்ல. ஒருவர் பேசிக்கொண்டிருக்கும்போது திடீரென்று இரண்டு நிமிடங்கள் எல்லாம் மறந்து, நாம் எங்கு, என்ன செய்கிறோம் என யோசித்து பின் நினைவுக்கு வந்தால், அதுவும்கூட வலிப்புதான். கண் முன்னால் வண்டி ஓடுவதுபோல தெரிவது, திடீர் வெளிச்சம் வருவது என வலிப்பு வெவ்வேறு வடிவத்தில் வரலாம். அடிக்கடி வலிப்பு வந்தால் மட்டுமே, அவர் வலிப்பு நோயாளி. ஒரே ஒருமுறை வலிப்பு வந்தால், அவர் வலிப்பு நோயாளி கிடையாது.

இரும்பைக் கையில் கொடுத்தால், வலிப்பு சரியாகி விடாது. அதிகபடியான மின்னோட்டம் பாய்வது சில நிமிடங்களே நீடிக்கும், அதன் பின்பு தானாகவே சரியாகிவிடும். மின்னோட்டம் சரியாகும்போது வலிப்பு நின்றுவிடும். வலிப்பு வந்தவரை ஒருபக்கமாக திரும்பிப் படுக்க வைக்க வேண்டும். மல்லாந்து படுக்கவைத்தால், வாயில் நுரை தள்ளினாலோ, வாந்தி எடுத்தாலோ, அவை நுரையீரலுக்குச் சென்று உயிரிழப்பு ஏற்பட வாய்ப்பு அதிகம். எனவே, கவனம் தேவை.

கை, கால்களை அழுத்திப் பிடித்தல், நோயாளியின் மேல் ஏறி உட்காருதல், வாயில் எதையாவது அடைத்து வைத்தல், இரும்புப் பொருட்களை பிடிக்கக் கொடுத்தல் போன்றவற்றை செய்யவே கூடாது.

அருகில் நோயாளியைக் காயப்படுத்தும் சூழல் இருந்தால் மட்டுமே, நோயாளிக்கு ஆதரவாக மென்மையாகப் பிடித்து அவரை நகர்த்தலாம். இறுக்கமான ஆடைகளைத் தளர்வுபடுத்தலாம்.

சுற்றிலும் கூட்டமாக நின்று, சுவாசிப்பதை சிரமப் படுத்தக் கூடாது. வீடு எனில் கதவு, ஜன்னல் அனைத்தையும் திறந்துவைக்கலாம்.

முகத்தில் தண்ணீர் தெளிக்கக் கூடாது. மயக்கத்தில் இருக்கும்போது குடிக்க எதுவும் கொடுக்கக் கூடாது. நினைவுக்கு வந்த பின்னர் தண்ணீர் கொஞ்சம் கொடுக்கலாம்.

## இரவில் அசைவம் வேண்டவே வேண்டாம்!



இரவு நேரங்களில் அசைவ உணவுகளைத் தவிர்க்க வேண்டும். அசைவ உணவுகள் சுவையாக இருப்பதால் பலராலும் விரும்பி சாப்பிடப்படுகிறது. ஆனால் இரவில் அசைவம் சாப்பிடுவது உடலுக்கு நல்லதல்ல. அசைவ உணவுகள் ஜீரணமாவதற்கு தாமதமாகும். தவிர இரவில் உடல் உழைப்பு ஏதும் இல்லை என்பதால், நிம்மதியான உறக்கத்தை விரும்புவோர் அசைவத்தை இரவில் தவிர்ப்பது நல்லது.

மேலும் உடல் நலத்துக்கும் தீங்கானது. செரிமானம் ஆகாமல் போகும்பட்சத்தில், வாந்தி, வயிற்றுவலி போன்ற தேவையற்ற பக்க விளைவுகள் ஏற்படலாம். அஜீரணக் கோளாறில் இருந்து விடுபட அசைவ உணவுக்குப் பின் வாழைப்பழங்கள் சாப்பிடலாம். எனினும் பொதுவாக இரவு நேரங்களில் சிக்கன், மட்டன், மீன் ஆகியவற்றை தவிர்ப்பதே சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்து கவிதைகள்
## கவிஞர் சாலினி
## கண்ணாடிப் பரப்புகள்



மிக இங்கிதமாய்
என் அடையாளம் குறித்து
பேசுகிறாய்
பயங்கரமான
வேற்று முனகலுடன்
மெத்தைகளில் நான் புரள்வதாய்
நெடும் இரவை
விழித்துக் கழிக்கிறாய்
காலைகளிலும்
மூடாத குளியலிலும்
முழங்கால்களை மறைக்காத
காலை உணவிலும்
துருத்திய முலைகளிலும்
என் தாசித்தனம் உன்
விழிகளால் ஒட்டப்படுகிறது.
மீண்டும் மீண்டும்
முந்தானையைச் சரித்த
உன் உள்ளாடைக் களைவுதான்
புரியாமலேயே தொக்குகிறது
பூவைப் போலக் கசங்கி . . .

மிக இதமான பொழுதுகள்
மனதை வருடுகின்றன
உன் நினைவுகள்போல
மனதைத் திறந்து
முழுதாய் வெளிப்பட்ட பின்னும்
இலையுதிர்ந்த
மரமாகுவது தொலைவில் உனக்கும்
மிக அருகில்
எனக்கும்
கனத்துப் பெருகுகிறது.
கரையடர்ந்த
தென்னைகளுடன்
தனித்துவிட்டதாய் விடும்
நெடும் மூச்சுகள்
என் காற்றிலும்
கலகக்த் தவறுவதில்லை.
மிகச் சாதாரணமாகிப்போகிறது
இந்தக் கவிதை
நம் அருகாமைபோல.

சினிமா செய்தி

# உலகமயமாதலை விபரிக்க வருகிறது 'டாலர் தேசம்'

இக்னைட் பிக்சர்ஸ் நிறுவனத்தாரின் முதல் படைப்பு டாலர் தேசம்.அதீத உலகமயமாக்கலின் இடையே வாழ்ந்து கொண்டிருக்கும் நம் தமிழ்ச்சமூகத்தின் பலதரப்பட்ட மக்களின் வாழ்வியலை விவரிக்கும் கதையாக உருவாகியிருக்கிறது 'டாலர் தேசம்'.

பொருளாதார படிநிலைகளால் வெவ்வேறாக பிரிக்கப்பட்டுள்ள மனிதர்களும், அவர்களின் பல்வேறு முகங்களும், வெகுஜன மக்கள் அறிந்திராத அவர்களின் அன்பும், வன்மமும், காதலும் வாழ்க்கையும் இந்தக் கதையின் முதுகெலும்பாக இருக்குமாம்.

DOLLAR DESAM

சமூகத்தோடு இணைந்து பின்னப்பட்டுள்ள இக்கதையை, தொய்வின்றி நகர்த்திச் செல்லும் நூற்றுக்கும் மேற்பட்ட கதாப்பாத்திரங்களில் புதுமுகங்களை யதார்த்தமாக நடிக்க வைத்திருப்பது இந்த திரைப்படத்தின் தனிச்சிறப்பு என்கின்றனர் படக்குழுவினர்.

பருத்தி வீரன், யோகி படங்களில் இயக்குநர் அமீரிடம் பணியாற்றிய முத்து கோபால், இப்படத்தின் இயக்குநராகவும், நடிகராகவும், தயாரிப்பாளராகவும் அறிமுகமாகிறார்.

பிரபல ஒளிப்பதிவாளர் ராம்ஜீயிடம் பருத்தி வீரன், ஆயிரத்தில் ஒருவன், மயக்கம் என்ன போன்ற படங்களில் துணை ஒளிப்பதிவாளராக பணியாற்றிய அருண் இப்படத்தின் ஒளிப்பதிவை மேற்கொள்கிறார்.

ஏ.ஆர்.ரகுமான் மற்றும் யுவன் சங்கர் ராஜாவிடம் பணியாற்றிய பிரசாத் வி குமார் இப்படத்தின் இசையமைப்பாளராக அறிமுகமாகிறார்.

மெரினா, கேடி பில்லா கில்லாடி ரங்கா மற்றும் மூடர்கூடம்' படங்களில் பணியாற்றிய அத்தியப்பன் சிவா, படத்தொகுப்பு. பாடல்கள் சினேகன். படத்திற்கு வசனம் சுந்தர் மற்றும் இந்திரஜீத். மேலும் பல தொழில்நுட்ப கலைஞர்கள் பணிபுரியும் இத்திரைப்படம் வெகுவிரைவில் வெளியாகவிருக்கிறது.

# பிரபாஸ் அம்மாவாக ஸ்ரீதேவி நடிக்கிறாரா?

ஸ்ரீதேவி 80களில் கொடிக்கட்டி பறந்த நாயகிகளில் ஒருவர். இவர் நீண்ட இடைவெளிக்கு பிறகு இங்கிலீஷ் விங்லீஷ் என்ற படம் மூலம் ரீஎன்ட்ரி ஆனவர்.

அதன்பிறகு தமிழில் புலி படத்தில் நடித்து வருகிறார். இந்நிலையில் ஸ்ரீதேவி தெலுங்கில் பிரபாஸ் நடிக்க இருக்கும் புதிய படத்தில் அவருக்கு அம்மாவாக நடிக்க இருப்பதாக தகவல்கள் வந்துள்ளன.

ஆனால் இதுபற்றிய அதிகார பூர்வமான தகவல்கள் வெளியாகவில்லை. U.V. கிரியேஷன்ஸ் தயாரிக்க இருக்கும் இப்படத்தில் சுஜீத் நாயகியாக நடிக்க இருக்கிறார்



# நிறைவு பெற்ற பாகுபலி படப்பிடிப்பு

நான் ஈ படத்திற்கு பிறகு ராஜமௌலி இயக்கி வரும் பிரம்மாண்ட படம் பாகுபலி.

இப்படத்தில் பாகு-பலியாக பிரபாஸூம், பல்லால தேவாக ராணாவும், தேவசேனாவாக அனுஷ்காவும், அவந்திகாவாக தமன்னாவும் நடிக்கின்றனர். ஆர்கா மீடியா ஒர்க்ஸ் தயாரிப்பில் மிகவும் பிரம்மாண்டமாக தயாராகி வரும் இப்படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்துள்ளது.

பிரபாஸ் பங்கேற்கும் பாடல் காட்சியுடன் இப்படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்துள்ளன. இவ்வருட கோடைக்கால விருந்தாக படம் வெளியாக இருக்கிறது.

# மனைவியின் படத்தில் கணவர்!



குழந்தை பிறப்பால் நடிப்புக்கு முழுக்குப் போட்டிருந்த ஐஸ்வர்யா ராய் மீண்டும் நடிப்பில் இறங்கியிருக்கிறார்.

சஞ்சய்குப்தா இயக்கும் த்ரில்லர் படமான "ஜாஸ்பா" என்ற படத்தில் நடித்துவருகிறார்.

இந்தப்படத்தில் ஐஸ்வர்யாவின் கணவரும் அமிதாப் பச்சனின் மகனுமான அபிஷேக் பச்சன் சிறப்புத் தோற்றத்தில் நடிக்கவுள்ளார்.

இது குறித்து சஞ்சய்குப்தா தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில், "ஜாஸ்பா படத்தின் ஒரு காட்சிக்காக அபிஷேக் பச்சனை வைத்து ஷூட் செய்தது மிகவும் மகிழ்ச்சியான அனுபவம்" என்று கூறியுள்ளார்.

கதாநாயகனாக இர்பான் கான் நடிக்கிறார். அனுபம் கெர், ஷபானா, அடுல் குல்கர்னி மற்றும் ஜான் ஆபிரகாம் உள்ளிட்ட பல நட்சத்திரங்கள் நடிக்கின்றனர்.

படம் எதிர்வரும் ஒக்டோபர் 9இல் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



# அமிதாப் பச்சனுக்கு பத்ம விபூஷன் விருது !



பில்கேட்ஸ், அமிதாப் பச்சன் உள்ளிட்டோருக்கு பத்ம விருதுகள் வழங்கப்பட்டன. குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற விழாவில் விருதுகளை குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி வழங்கினார்.

கலைத்துறைக்கு சிறப்பான பங்காற்றியதற்காக இந்தி நடிகர் அமிதாப் பச்சன், பத்ம விபூஷண் விருது பெற்றார். இந்தியாவில் எய்ட்ஸ் விழிப்புணர்வுக்காக சேவையாற்றிய மைக்ரோசொப்ட நிறுவனர் பில்கேட்ஸ், அவரது மனைவி மெலிண்டா கேட்ஸ், சிறந்த பொது சேவைக்காக சுபாஷ் சி. காஷ்யப் உள்ளிட்டோருக்கு பத்ம பூஷண் விருது வழங்கப்பட்டன.

கிரிக்கெட் வீராங்கனை மித்தாலி ராஜ் உள்ளிட்டோருக்கு குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி பத்மஸ்ரீ விருதுகளை வழங்கி கௌரவித்தார். நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இந்த நிகழ்ச்சியை அடுத்து டுவிட்டரில் Padma vibhushan என ட்ரெண்டாகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமைத் திருடர்கள்



சிங்கள ஆட்சியாளர்களிடம் இந்த நாட்டை ஆளும் உரிமை என்று வழங்கப்பட்டதோ அன்று தொடக்கம் இன்றுவரை தமிழர்களை ஆளும் உரிமை மட்டுமல்லாது அடக்குமுறைகளைப் பிரயோகிக்கும் உரிமையும் சேர்த்தே வழங்கப்பட்டுவிட்டது போன்று அராஜகங்கள் தமிழினத்தை நோக்கி கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன, கட்டவிழ்த்து விடப்படுகின்றன. இன்னும் கட்டவிழ்த்து விடப்படும் என்பதை இப்போதே கூறிவிட முடியும. காரணம் கடந்தகால அனுபவங்கள் அதற்கு சாட்சியாகவுள்ளன.

இலங்கையில் தமிழர்கள் இரண்டாம் தரப்பிரஜைகள் என்ற இழக்காரத்துடன் சிங்கள ஆட்சியாளர்களினால் பார்க்கப்படுகின்றனர் என்பதை சிங்களவர்கள் அறிந்து இருந்தும் தங்கள் பிரதிநிதிகளின் ஆட்சிக் காலத்தில் நடக்கும் அநீதிகளுக்கு எதிராக குரல் கொடுக்க முயற்சிகளையேனும் மேற்கொள்வதில்லை. இவ்வாறு இருக்கையில் தமிழர்கள் சிங்களவர்கள் மீது நம்பிக்கை வைப்பதும் அவர்களை சகோதரர்களாக நோக்குவதும் சாத்தியமற்றதே.

ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது என்பதைப் போன்று வெறும் வார்த்தைகளில் மட்டும் நல்லிணக்கத்தையும், இன ஒற்றுமையையும், சகோதரத்துவம், புரிந்துணர்வு பற்றிப் பேசுவதனால் பயனேதும் இல்லை. அதனை நடைமுறைப்படுத்த அர்ப்பணிப்புடன் ஆட்சியாளர்கள் சேவை செய்ய வேண்டும். ஆட்சியாளர்களிடம் முதலில் அவைபற்றிய எண்ணம தோன்ற வேண்டும். அப்போதுதான் நிலைத்து நிற்கக்கூடிய இனங்களுக்கு இடையிலான முரண்பாட்டைத் தடுக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்.

மக்கள் மத்தியில் ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் நல்லிணக்கத்தையும் ஆட்சியாளர்கள் ஏற்படுத்த முற்பட்டால் அதை எந்த இனத்தவர்களும் தடுத்து நிறுத்த முற்படமாட்டார்கள். கடந்தகால அழிவுகள் அத்தகைய சூழ்நிலைக்கு இடமளிக்காது என்று முழுமையாக நம்பமுடியும். யுத்தத்தால் தமிழினம் கட்டமைக்கப்பட்ட இன அழிப்புக்கு உள்ளாக்கப்பட்டிருந்தது என்பது சர்வதேசம் வரை அறிந்த உண்மையென்றாலும் மூவினங்களிலும் உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருந்தன என்பதையும் யாரும் மறுத்துவிட முடியாது. அந்த உண்மையையும் பொய்களையும்கூறி மறைத்துவிட முடியாது.

போரில் தமிழினம் துண்டாடப்பட்டு கொத்துக் கொத்தாக கொன்றொழிக்கப்பட்டது. இதற்குஇந்தியா உள்ளிட்ட பல நாடுகள் இலங்கை அரசுக்கு( மகிந்தவுக்கு) ஆதரவு வழங்கியிருந்தது. இந்தக் குற்றச்சாட்டை இந்திய மத்திய அரசு மறுத்தாலும் தமிழகத்திலுள்ள ஈழவுணவர்வாளர்கள் வெளிப்படுத்தி வருகின்றனர். ஏற்கனவே வெளிப்படுத்தியுள்ளனர். இன்னும் வெளிப்படுத்துவார்கள் என்று நம்பமுடியும்.

முள்ளிவாய்க்காலில் மூச்சடங்கிப்போன எம்முறவுகளின் ஆத்மாக்கள் சாந்தியடையாது உடல்களைச் சாய்த்தவர்களின் இழப்புகளுக்காக காத்திருக்கின்றன என்பதை உறுதியாக கூறலாம். ஏனெனில் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளைக்கூட நடத்தவிடாது சிங்கள ஆட்சியாளர்கள் அடக்குமுறைகளைப் பிரயோகித்து வருகின்றனரே.

இறுதிக்கட்டப் போரில் நடந்த கொடூரங்கள் மக்கள் மத்தியில் ரணங்களை ஏற்படுத்தியுள்ளது. வடக்கில் மட்டும் 80 ஆயிரம் விதவைகளை போர்ச்சூழல் உருவாக்கியுள்ளது. ஆயிரக்கணக்கான அங்கவீனர்களையும் பெற்றோர்களை இழந்த பிள்ளைகளையும் பரிதவிக்க வைத்துள்ளது. இந்த அவல நிலைகள் போக்கப்படும் சூழ்நிலை உருவாக்கப்படும் என்ற நம்பிக்கைகூட ஆட்சியாளர்களினால் உருவாக்கப்படவில்லை. மாறாக போர்ச்சூழலை நினைவுபடுத்தும் நடவடிக்கைகளையே அரசு செய் துவருகின் றது.

இழப்புக்களை ஒருவன் அனுபவிக்கும் போதுதான் பிறருக்கு தன்னால் ஏற்பட்ட இழப்புக்களை நன்கு புரிந்துகொள்ள முடியும். அவ்வாறு ஒருவன் பட்டுணர்ந்தான் என்றால் பின்னர் இன்னொருவனுக்கு இழப்பினை ஏற்படுத்த வேண்டும் என்று அவன் சிந்தித்துக்கூட பார்க்க மாட்டான். இதை அரசியலில் உள்ளவர்கள் அறிந்திருந்தும் அனுபவித்தும் திருந்திக் கொள்வதாகயில்லை.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் முன்னாள் ஜனாதிபதியாகயிருந்த சந்திரிகாகூட வாய்திறக்க முடியாத அளவுக்கு அடக்குமுறைகளைப் பிரயோகித்திருந்தது ராஜபக்ஷவின் குடும்ப அரசியல். ஒருநாட்டின் அதி உயர் பதவியில் இருந்தவர்களுக்கே உயிர் அச்சுறுத்தல் விடுத்து ஜனநாயக உரிமைகளை முடக்கி அச்சுறுத்தல்களை ஆட்சியாளர்கள் செய்யக்கூடிய சூழ்நிலை உள்ளது என்றால் தமிழனின் நிலையைக் கூறித்தான் பிறர் அறிந்துகொள்ள வேண்டுமென்று இல்லை.

தமிழ் மக்களை அச்சுறுத்தும் மத்திய அரசின் நடவடிக்கைகள் எவ்வாறு இடைவிடாது தொடர்கின றதோ அதேபோன்று படைகளின் கண்காணிப்புக்குள் வடக்கு மக்களின் வாழ்க்கை உள்ளடககப்பட வேண்டும் என்ற கருத்தியலுக்கு ஏற்ற வகையில் நிலை நிறுத்தப்பட்டிருப்பதும் உரிமைகளை கொடுக்க மறுப்பதும் உரிமைகளைப் பெறத் தடுக்கும் நடவடிக்கையாகவுமே கருதப்பட வேண்டியுள்ளது.

வடக்கில் இராணுவப் பிரசன்னம் குறைக்கப்பட வேண்டும் என்பது மட்டுமல்லாது இராணுவம் உள்ளிட்ட படைத்துறையினர் மக்களின் காணிகளைவிட்டு வெளியேற வேண்டும் என்ற கோரிக்கையும் நீண்டகாலமாக முன்வைக்கப்பட்டுவரும் முக்கியமான கோரிக்கையாகவுள்ளது. மக்களின் காணிகள் மக்களிடம் ஒப்படைக்கப்பட்டு இடம்பெயர்ந்த நிலையில் சுமார் கால் நூற்றாண்டுக்கு மேலாக சொந்த நிலங்களில் வாழ ஏங்கிக்கொண்டிருக்கும் மக்களின் துன்பத்தைப் போக்கும் நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளத் தவறிவிட்டது.

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் மத்தியில் ஆட்சியிலிருந்த மகிந்த, மத்திய அரசின் பொறுப்புக்களை உணர்ந்து செயற்படவில்லை என்ற பழிச் சொல்லை ஏற்றுத்தான் ஆகவேண்டும். ஏனெனில் அதை மறுக்கக்கூடிய நடவடிக்கைளை அவர் மேற்கொள்ளத் தவறிவிட்டார். மத்திய அரசின் நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்பட வேண்டும் என்று வடக்கு மாகாண சபை வலியுறுத்தியபோதும் அதை அவர் கண்டு கொள்ளாமல் விட்டது மாபெரும் தவறாகும். மாகாணசபையை புறக்கணித்த மகிந்த மக்களை அரவணைக்கத் தவறியதன் விளைவை அவர் வடக்கு மாகாண மக்களால் புறக்கணிக்கப்பட்டபோது உணர்ந்திருப்பார். அதை அவரே மனவருத்தத்துடன் கூறியுள்ளார்.

மக்களின் காணிகளை விடுவித்து இடம் பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றி அவர்களின் அவலத்தைப் போக்க நடவடிக்கை எடுப்பதை விடுத்து வெந்தபுண்ணில் வேலைப் பாய்ச்சுவது போன்று காணிக்கு சொந்தக்காரர்கள் ஓலைக் குடிசையில் அடிப்படை வசதிகள் எதுவுமின்றி அல்லற்படும் போது மாளிகை கட்டி மகிழ்ச்சியாகப் பொழுதைப் போக்க நினைத்ததை மன்னித்துவிட முடியுமா? அவ்வாறான மனநிலையில் தமிழ் மக்கள் இல்லை என்பதை ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தியிருந்தன.

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் மகிந்தவுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தாலும் சிங்கள மக்கள் மத்தியில் தனது செல்வாக்கு குறையவில்லை என்பதையிட்டு மகிந்த மகிழ்ச்சி கொண்டிருப்பார். அதிலும் மாற்றுக்கருத்துக்கு இடமிருக்க முடியாது. சிங்கள மக்களின் வாக்குப் பலத்துடன் மூன்றாவது முறையும் ஜனாதிபதியாகி விடலாம் என்பதில் மகிந்த நூற்றுக்கு நூறு வீதம் எவ்வித சந்தேகமுமின்றியிருந்திருந்தார். ஆனால் தேர்தலில் தோல்வியடைந்ததால் அவர் நிலை குலைந்து போனார்.

தமிழ் மக்கள் சிறுபான்மையினர். அவர்களினால் ஜனாதிபதித் தேர்தலில் தாக்கத்தை ஏற்படுத்த முடியாது. அவர்களின் வாக்குகள் தேவையில்லை என்று மகிந்த அமைச்சரவையில் அங்கம் வகித்தவர்கள் ஆணவத்துடன் அறிக்கைவிட்டதை தமிழர்கள் மறக்கவில்லை என்பதை தேர்தலின்போது வெளிப்படுத்தியிருந்தனர். ஆயுத வழியில் அழிக்கப்பட்டாலும் ஜனநாயக வழியில் மகிந்தவுக்கு தோல்வியைக் கொடுத்து பழிக்குப் பழிவாங்கி விட்டனர் தமிழ்மக்கள்.

பொய்யான வாக்குறுதிகளைக் கொடுத்து தம் மீதான நம்பிக்கையினை அதிகரித்து அரசியல் வியாபாரம் நடத்தும் மக்களின் உரிமைகளைத் திருடும் கூட்டம் ஒழிக்கப்பட வேண்டும். மக்கள் பிரதிநிதிகள் மக்கள் பிரதிநிதிகளாக செயற்பட்டு அவர்களின் வேதனைகளைப் போக்குவதற்கு முன்வராவிட்டாலும் அவற்றினை அதிகரிப்பதையாவது நிறுத்த வேண்டும்.

எனக்கு வாக்களிக்காத பிரதேச மக்களுக்கு நான்ஏன்சேவை செய்யவேண்டும்என்று கீழ்த்தரமாக சிந்தித்து செயற்படும் அரசியல் போக்கிரித்தனம் களையப்பட வேண்டும். சகல பிரதேச மக்களின் வரிப்பணமும் அரசாங்கம் பெற்றுக் கொள்கின்றது. அதன் ஊடாகத்தான் தாம் சுக போக வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்கின்றோம் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

வீதிப்புனரமைப்பில் மோசடி, பாலம் அமைப்பதில் மோசடி, கல்வித்துறையில் மோசடி, கட்டடம் கட்டுவதில் மோசடி என்று அரசியல்வாதிகள் மீதான மோசடிப் பட்டியல்கள் நீண்டு கொண்டு செல்லும் நிலையில் மக்களுக்கு சேவை செய்யவுள்ளதாகக் கூறி வாக்குகளைக் கொள்ளையடித்தவர்கள் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் பின்னடிப்பதை மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்.

மகிந்த ஆட்சியில் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டிருக்குமாகயிருந்தால் மைத்திரி ஜனாதிபதியாக வந்திருக்கவும் முடியாது, ஐ.தே.க. ஆட்சிப்பீடம் ஏறியிருக்கவும் முடியாது. அதேவேளை ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவரும் தற்போதைய பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவின் ஆசைகள் எல்லாம் வெறும் கனவாகவே கலைந்திருக்கும்.

மக்கள் தம் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வது தமக்கு சேவை செய்வதற்கேயன்றி அவர்களின் அட்டூழியங்களை அனுபவித்துக் கொண்டு வாய்மூடி மௌனிகளாகயிருப்பதற்கல்ல. குறிப்பாக சொல்லப்போனால் போரில் இழக்கக்கூடாத எல்லாவற்றையும் இழந்த நிலையிலும் மகிந்த ஆட்சியில் விடிவுகாலம் கிடைக்கும் என்று தமிழ் மக்கள் நம்பினர். அந்த நம்பிக்கைக்கு கொஞ்சமேனும் மகிந்த செவிசாய்த்திருந்தால் தமிழ் மக்களின் ஆதரவு அவருக்கு கிடைத்திருக்கும். அவரே அடுத்த ஜனாதிபதியாகவும் ஆகியிருப்பார். ஆனால் தமிழ் மக்களுக்கு ஏதாவது நன்மை செய்தால் சிங்களவர்களும் பௌத்த துறவிகளும் தம்மை எதிர்த்துவிடுவார்கள். தான் தோல்வியடைந்து விடுவேன் என்ற அச்சத்திலும் பதவி ஆசையிலும் தமிழர்களை அவர் முற்று முழுதாக புறக்கணித்து வந்தார்.

தமிழ் மக்களைப் புறக்கணித்ததோடு நின்றுவிடாது மக்களால் தெரிவு செய்யப்பட்ட வடக்கு மாகாண சபையையும் அவர் புறக்கணித்திருந்தார். இதனால் வடக்கு மக்கள் அவரைப் புறக்கணிக்க வேண்டிவந்தது. அது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு சாதமாக மாறிவிட்டது.

மைத்திரி, தமிழ் மக்களின் வாக்குகளால் தான் தான் ஜனாதிபதியாக வந்தேன் என்பதை மறந்து செயற்படுவாரானால் அது அவருக்கு மட்டுமல்ல எதிர்காலத்தில் அவரைப் போன்று வர வேண்டும் என்று நினைப்பவர்களுக்கும் ஆபத்தை ஏற்படுத்திவிடும். சுருங்கச் சொல்லின் மகிந்தவின் நிலை ஏற்படும்.

மகிந்த தான் ஜனாதிபதியாகயிருந்த காலகட்டத்தில் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தத் தவறியிருந்தார். இதை அவரின் அமைச்சரவையில் அங்கம் வகித்தவர்களே பகிரங்கமாகக் கூறி வருகின்றனர். அவர்களின் குற்றச்சாட்டுக்களை முழுமையாக ஏற்று மகிந்தவை மட்டும் குற்றவாளியாக்குவது ஏற்புடையதல்ல. மகிந்த ஆட்சியில் நடந்த அராஜகங்கள், மோசடிகள் எல்லாவற்றுக்கும் எல்லோர் மீதும் குற்றச்சாட்டுக்களைச் சுமத்த வேண்டும்.

இனப்படுகொலை அரசில் அங்கம் வகித்துவிட்டு தேசிய அரசில் அங்கம் வகிப்பதன் ஊடாக தமது குற்றங்கள் மறைநது விடும் என்று நினைப்பவர்கள் உள்ளனர். அவர்களும் இனம்காணப்பட்டு உரிய விசாரணைகளை முன்னெடுத்து குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட வேண்டும். தமிழனின் அழிவுக்கு காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். இதை பாதிக்கப்பட்ட ஒவ்வொரு தமிழனும் எதிர்பார்ப்பதில் எந்தவித தவறும் இல்லை. எனவே தமிழ் மக்களை மகிந்த அரசு புறக்கணித்ததைப் போன்று மைத்திரி அரசும் புறக்கணிக்காமல் வாக்களித்த மக்களின்எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்ய முன்வரவேண்டும்.

எஸ்.ஆர்.கரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணவனைத் திருத்த...

ரெண்டு பெண்கள் பேசிட்டு இருந்தாங்க. என் கணவர் தினமும் ராத்திரி லேட்டா தான் வீட்டுக்கு வர்றார். என்ன பண்றதுன்னே தெரிய லேனு சொன்னா முதல் பெண்.

அதுக்கு ரெண்டாவது பெண் என் கணவர் கூட லேட்டாதான் வந்திட்டிருந்தார். இப்பல்லாம் ஆபீஸ் அஞ்சு மணிக்கு விட்டா, டாண்ணு அஞ்சரைக்கு வீட்டில் இருக்கிறார்னா முதல் பெண்ணுக்கு செம ஆச்சரியம் அப்படி என்னதான் பண்ணினேனு கேட்டா.

ஒரு நாள் வழக்கம் போல அவர் லேட்டா வந்தார். நான் தூக்கக் கலக்கத்துல வேணும்னே, யாரு .. .. முரளியா?னு கேட்டேன். அவளோதான் என்னோட ட்ரீட்மெண்ட்னு சொன்னா ரெண்டாவது பெண்.

முதல் பெண் புரியலையே இதுல அப்படி என்ன இருக்கு?னு கேட்டதுக்கு ரெண்டாவது பெண் சொன்னாள் வேறொண்ணும் இல்லை. என் கணவரோட பெயர் முரளி இல்லை கார்த்திக்

## வெறும் கல்



ஆற்றங்கரை ஓரமாக வந்து கொண்டிருந்த வழிப்போக்கன் ஒருவனுக்கு வைரக்கல் ஒன்று கண்ணில் பட்டது.

அது வைரம் என்று அறியாமல், விலை போகுமா என்ற சந்தேகத்துடன் கடைத்தெருவுக்கு எடுத்து வந்தான். அவன் கையில் வைரம் இருப்பதைப் பார்த்த வியாபாரி ஒருவன், இருபது ரூபாய்க்கு தன்னிடம் அதை விற்குமாறு கேட்டான்.

ஆனால் வழிபோக்கனோ பேரம் பேசித்தான் பார்ப்போமே என்ற எண்ணத்துடன் 25 ரூபாய் கேட்டான். ஐந்து ரூபாய் அதிகம் கொடுக்க விரும்பாத அந்த வியாபாரியும் 20 ரூபாய்க்கு பேரம் பேசினான். இதைக் கவனித்த மற்றொரு வியாபாரி 25 கொடுத்து அந்த வைரத்தை வாங்கிக் கொண்டு சென்றான்.

ஆத்திரமடைந்த வியாபாரி அந்த வழிப்போக்கனை பார்த்து, "அட முட்டாளே! அதன் மதிப்பு பல ஆயிரம் பெறும். அறிவில்லாமல் விற்றுவிட்டாயே!" என்று திட்டினான்.

அதற்கு அவன், "அந்தக் கல்லுக்கு என்னுடைய மதிப்பு அவ்வளவுதான். ஆனால் அது வைரம், அதன் மதிப்பு தெரிந்தும் அதைத் தவறவிட்ட நீ தான் மிகப்பெரிய முட்டாள்" என்றான்.சிலர் இப்படித்தான் உண்மையான மதிப்பு தெரிந்தும், கிடைத்ததை விட்டுவிட்டுத் தவிக்கிறார்கள்.

## பார்வையின் இரகசியம்

மிகவும் பேர் பெற்ற ஒரு மதத் தலைவர், மன நல மருத்துவமனை ஒன்றினைப் பார்வையிட வந்தார்.

அங்கிருந்த நோயாளிகள் அனைவரையும் ஓரிடத்தில் உட்கார வைத்திருந்தனர்.

மதத் தலைவர் அவர்களிடம் பேச விரும்பினார். அங்கிருந்த அதிகாரிகள் மகிழ்வுடன் சம்மதித்தனர். அவரும் பேச ஆரம்பித்தார்.மன நலம் அற்ற அந்த நோயாளிகள் ஒவ்வொருவரும் ஒரு திசையைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஆனால் ஒரே ஒரு நோயாளி மட்டும் அவர் பேசுவதை மிக உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தார்.

அவருடைய இமைகள் கூட அசையவில்லை.மதத் தலைவரின் ஒவ்வொரு வார்த்தையையும் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.மன நல மருத்துவமனை என்பதால் மதத் தலைவர் எதையும் எதிர்பார்க்கவில்லை.

ஆனால் அந்த ஆள் தீவிரமாகக் கவனித்தது குறித்து மிக்க மகிழ்ச்சியடைந்தார்.

பேச்சு முடிவுற்றதும் அந்த ஆள் எழுந்து போய் அங்கிருந்த வார்டனிடம் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார்.

மதத் தலைவரும் தன்னுடைய பேச்சுக் குறித்து அவர் ஏதோ சொல்லிக் கொண்டிருக்கிறார் என்பதை புரிந்து கொண்டார்.

பின்னர் வார்டனிடம், "அந்த ஆள் என்ன சொன்னார்" என்று வினவ,

வார்டன் சிறிது தயங்கிவிட்டு சொன்னார், "என்ன கொடுமையடா சாமி, இவனெல்லாம் வெளியே இருக்கிறான், நான் உள்ளே இருக்கிறேன்" என்கிறான் அய்யா"

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like

Search for people, places and things Nagendram Home

வி.பிரணவன்




கஜன் விஜய்




சுபாங்கன் கேதீஸ்வரன்




எஸ்.ஐங்கரன்




காயத்திரி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.பி.எல்.



# கிண்ணம் யாருக்கு?



உலக விளையாட்டின் தலைநகரமாக இந்தியா உருவெடுக்க அச்சாரம் போட்டது ஐ.பி.எல். தான். இதன் 'மெகா' வெற்றியை பார்த்து ஐ.எஸ்.எல்., காற்பந்து, உலக கபடி லீக், டென்னிஸ் லீக், பட்மிண்டன் லீக் என புற்றீசல் போல உள்ளூர் போட்டிகள் ஆரம்பமாகின. இதில், சர்வதேச நட்சத்திரங்களும் பங்கேற்க, சுவாரஸ்யம் அதிகரித்தது.

இப்படி இந்திய விளையாட்டில் புரட்சி ஏற்படுத்திய ஐ.பி.எல்., திருவிழா 8 ஆவது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது. இம்முறையும் வழக்கம் போல வீரர்களின் வாண வேடிக்கை, நடன மங்கையர்களின் ஆட்டம், பாலிவுட் நட்சத்திரங்களின் பரவசம், ரசிகர்களின் துள்ளல் என ஒரு மசாலா கிரிக்கெட்டை உற்சாகமாக கண்டு களிக்கலாம்.

**சர்ச்சை அதிகம்**

இந்திய கிரிக்கெட் போர்டு (பி.சி.சி.ஐ.) சார்பில் இந்தி யன் பிரிமியர் லீக் (ஐ.பி. எல்.), "இருபது-20" தொடர் 2008 இல் ஆரம்பிக்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் ஏதாவது ஒரு பிரச்சினை வெடிக்கும். இதன் உச்சக்கட்ட மாக ஆறாவது தொடரில் ராஜஸ்தான் அணியின் ஸ்ரீசாந்த், சண்டிலா உள்ளிட்டோர் சூதாட்டத்தில் ஈடுபட்டது அம்பலமானது. சென்னை அணியின் சீனி வாசன், அவரது மருமகன் குருநாத் மெய்யப்பனும் சூதாட்ட புயலில் சிக்கினர்.

இதுபோன்ற சர்ச்சைகளை கடந்து 7 ஆவது தொடர் வெற்றிகரமாக நடந்தது. தற்போது 8 ஆவது தொடர் நடைபெற்று வருகின்றது.

**யுவராஜ் 'டொப்'**

ஐ.பி.எல்., அரங்கில் கோடிகள் சர்வ சாதாரணமாக புழங்கும். இத்தொடரில் சம்பியன் பட்டம் வெல்லும் அணிக்கு பரிசாக 15 கோடி ரூபா தான் கிடைக்கும். ஆனால், வீரர்களுக்கான ஏலத்தில் யுவராஜ் சிங்கை 16 கோடி ரூபா கொடுத்து டில்லி அணி வாங்கியது. முதற் தர போட்டிகளில் கூட பங்கேற்காத 20 வயதான சுழற்பந்து வீச்சாளர் கரியப்பாவை 2.40 கோடி ரூபாவுக்கு கொல்கத்தா அணி ஒப்பந்தம் செய்தது. இத்தகைய வேடிக்கை, விநோதங்களை ஐ.பி.எல். தொடரில் மட்டுமே காண முடியும்.

**'மினி' இந்தியா**

அண்மைய ஏலத்தில் முன்னணி வீரர்கள் அணி மாறியதால், இம்முறை எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. சம்பியன் பட்டம் வெல்லக் கூடிய அணிகளின் வரிசையில் சென்னை சுப்பர் கிங்ஸ் முன்னிலை வகிக்கிறது. இதற்கு "பினிஷிங்" திறன் படைத்த கப்டன் தோனி, 'புது மாப்ளே' ரெய்னா, 'சுழல்' நாயகன் அஷ்வின், 'ஆல் ரவுண்டர்' ரவிந்திர ஜடேஜா, 'புதிய புயல்' மோகித் சர்மா என இந்திய அணியின் பெரும்பாலான வீரர்கள் இருப்பது பலம். டுவைன் சுமித், பிரண்டன் மக்கலம், பிராவோ, டுபிளசி போன்ற நட்சத்திரங்களும் உள்ளனர். கடந்த முறை ஏமாற்றிய சென்னை அணி, தற்போது சாதிக்க வாய்ப்பு உள்ளது.

**கொல்கத்தா நம்பிக்கை**

நடப்பு சம்பியனாக களமிறங்கும் பாலிவுட் நடிகர் ஷாருகானின் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கு கப்டன் கம்பிர் தான் ஊக்க சக்தி. "சுழல் மாயாவி' சுனில் நரைன் பவுலிங் பிரச்சினையில் இருந்து மீண்டது நல்ல விடயம். உத்தப்பா, உமேஷ் யாதவ், யூசப் பதான், ரசல் போன்ற சர்வதேச அந்தஸ்து பெற்ற வீரர்கள் இருப்பதால், பட்டத்தை தக்க வைக்கும் நம்பிக்கையுடன் உள்ளது. அனுபவ கலிஸ் அணியின் துடுப்பாட்ட ஆலோசகராக செயற்படவுள்ளார்.

**பலே பஞ்சாப்**

கடந்த முறை இறுதி வரை முன்னேறிய பாலிவுட் நடிகை பிரித்திசிந்தாவின் பஞ்சாப் கிங்ஸ் லெவன் அணி மீண்டும் பட்டையை கிளப்பலாம். கப்டன் ஜோர்ஜ் பெய்லி, 'அதிரடி' சேவாக், மக்ஸ்வெல், மில்லர், முரளி விஜய் இருப்பதால், அசுர பலத்துடன் காட்சி அளிக்கிறது. பந்து வீச்சில் ஜோன்சன் மிரட்டலாம்.

**சாதனைக்கு ரோகித்**

ஒருநாள் போட்டிகளில் இரண்டு முறை இரட்டை சதம் கடந்த கப்டன் ரோகித் சர்மாதான் மும்பை அணிக்கு பெரும் பலம். போலார்ட், கோரி அண்டர்சன், பின்ச் வலு சேர்க்கின்றனர். பந்து வீச்சில் அசத்த மலிங்கா, ஹர்பஜன், பிரக்யான் ஓஜா உள்ளனர். ஆலோசகராக சச்சின் இருப்பது கூடுதல் பலம்.

ராஜஸ்தான் அணிக்கு கப்டன் வோட்சன், ஸ்டீவ் சுமித், சஞ்சு சாம்சன், ஸ்டூவர்ட் பின்னி, சவுத்தீ, போல்க்னர் கைகொடுக்கலாம். ஐதராபாத் அணிக்கு கப்டன் வோர்னர், ஷிகர் தவான், இஷாந்த், கரண் சர்மாவுடன் 'வேகப்புயல்' ஸ்டைன் இருப்பது கூடுதல் நம்பிக்கை தான்.

**கெய்ல் 'புயல்'**

விராட் கோலி தலைமையிலான பெங்களூர் அணியில் சர்வதேச நட்சத்திரங்கள் நிறையப் பேர் உள்ளனர். அதிரடிக்கு கெய்ல், டிவிலியர்ஸ், டேரன் சமி மற்றும் 'வேகத்துக்கு' ஸ்டார்க், ஆரோன், டிண்டா இருக்கின்றனர். 10.5 கோடி ரூபாவுக்கு வாங்கப்பட்ட தினேஷ் கார்த்திக் தனது தேர்வை நியாயப்படுத்தலாம்.

**டில்லி எதிர்பார்ப்பு**

யுவராஜ் சிங் மீது அதிக முதலீடு செய்துள்ள டில்லி அணிக்கு கப்டன் டுமினி, முகமது சமி, மனோஜ் திவாரி நம்பிக்கை தருகின்றனர். சகிர்கான் வரவு புதுத்தெம்பை கொடுத்துள்ளது.

இப்படி 8 அணிகளும் சமபலத்தில் இருப்பதால், சம்பியன் பட்டம் வெல்ல கடும் போராட்டத்தை வெளிப்படுத்தலாம். அண்மைய உலகக்கிண்ண தொடரில் ஏமாற்றியவர்கள் ஐ.பி.எல்., போட்டிகளில் பரிகாரம் தேட இருப்பதால், ரசிகர்களுக்கு 'சுப்பர்' கிரிக்கெட் விருந்து காத்திருக்கிறது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org